# அரசியல் விஞ்ஞானம்

கற்றல் துணைச்சாதனம்

க.பொ.த (உ/த)

வெளியீடு
வலய கல்வி அலுவலகம்
வலிகாமம்
மருதனார்மடம்
சுன்னாகம்

S. Raththithan

# அரசியல் விஞ்ஞானம்

கற்றல் துணைச்சாதனம்

க.பொ.த (உ/த)

- இலங்கையில் நிலவிய குடியேற்ற ஆட்சி இயல்புகள்
- பொதுக்கொள்கையும் பொதுநிர்வாகமும்
- மோதலும் மோதல் தீர்த்தலும்

வெளியீடு

வலய கல்வி அலுவலகம்

வலிகாமம்

மருதனார்மடம்

சுன்னாகம்.

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் | : | அரசியல் விஞ்ஞானம் |
| பதிப்பு | : | ஆனி - 2011 |
| வெளியீடு | : | வலிகாம கல்வி வலயம் |
| அளவு | : | A5 |
| பக்கங்கள் | : | viii - 99 |
| அச்சிட்டபிரதிகள் | : | 1000 |
| அச்சுப்பதிப்பு | : | வைரஸ்கிரபிக்ஸ், இணுவில் |
| பதிப்புரிமை | : | வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம். |

# வளவாளர் குழு

01. திரு.வேலும்மயிலும் சேந்தன்
    யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
02. திருமதி.மீ.சுப்பிரமணியம்
    யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம்
03. செல்வி. இரஞ்சிதமலர் சம்பந்தர்
    யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
04. திருமதி. தவமலர் விஜயகுமார்
    யா/வட்டு இந்துக் கல்லூரி வட்டுக்கோட்டை
05. திருமதி அ.திருநாவுக்கரசு
    யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம் வயாவிளான்
06. செல்வி தா.தம்பையா
    யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மானிப்பாய்
07. செல்வி G. m. நிர்மலா
    யா/யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை
08. திருமதி கு.சிவநடராசா
    யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மானிப்பாய்
09. திரு. குணரட்ணம் குகதாசன்
    யா/இணுவில் மத்திய கல்லூரி இணுவில்
10. திருமதி ஸ்ரீவதனி சோபனராஜ்
    யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி மானிப்பாய்
11. திரு. கணேசலிங்கம் ஸ்ரீரஞ்சித்
    யா/அருணோதயாக் கல்லூரி அளவெட்டி
12. செல்வி தமிழ்ச்செல்வி நடராசா
    யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்
13. திரு. பாலக்கிருஷ்ணன் கோபிரமனா
    யா/மல்லாகம் மகாவித்தியாலயம் மல்லாகம்
14. திரு. நடராசா சத்தியரூபன்
    யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சண்டிலிப்பாய்

## வலயக் கல்விப்பணிப்பாளரின் ஆசியுரை



திரு. ஆ.ராஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

அரசியல் - இன்றைய காலவோட்டத்தில் எம்மவர் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு அம்சம். கல்விச் சமூகத்தினருக்கு மட்டுமல்ல - ஒரு சாதாரண குடிமகனுக்கும் இது அவசியமானதொன்று எவ்விடயத்தையும் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் போதே சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இங்கு அரசியல் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யப்படுகிறது.

பாடசாலைகளின் பிரதான குறிக்கோள் மாணவரிடையே படிக்கிற வழக்கத்தை உண்டாக்குதல் என்பர். இப்படிக்கிற வழக்கத்திற்கு தடைகளாக அமைபவை தேடலுக்கான ஆர்வமின்மை, தேடியவற்றைத் தொகுக்கின்ற ஆற்றலின்மை. இவ்விரு குறைபாடுகளையும் இந்நூல் நீக்குகின்றது.

அண்மைக்காலமாக வெற்றிக்கான இலக்காக "Team work" என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது. அவ்வகையில் எமது கல்வி வலயத்தின் அரசியல் விஞ்ஞானதுறைசார் பதினான்கு ஆசிரிய மணிகளின் கூட்டுமுயற்சியில் வெளிப்பாடே இச்சிறு நூல்.

கொள்கை ரீதியாக கல்வியின் இறுதி இலக்கு என பலவற்றைக் குறிப்பிடுவர். ஆனால் கற்கும் மாணவனின், சமூகத்தின் எதிர்பார்ப்பாக அமைவது பொதுப்பரீட்சை அடைவுகளே அவ் வகையில் பரீட்சை நோக்கில் இந்நூல் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கல்வியை வியாபாரப் பொருளாக மாற்ற முயற்சிக்கும் இன்றைய காலகட்டத்தில, இந்நூலினை இலவசமாக ஆக்ககித்தந்த எமது பெருமை மிக்க ஆசிரியர்களுக்கு எமது மாணவர் சார்பில் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் இவ்வாறான முயற்சிகளுக்குத் துணையாக நிற்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# அணிந்துரை



திரு.சு. சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
(நிர்வாகம்)

மனுக்குல மேம்பாட்டு வரலாற்றில் இயற்கைக்கும் மனிதனிற்கும் இடையில் நிகழ்ந்த பல்பரிமாண ஊடாட்டங்களின் விளைவாக அறிவியற்தொகுதி ஆழமாகவும் அகலமாகவும் விசாலிப்புற்று உலக மாந்தரின் வாழ்வியற் கோலங்களில் அவ்வப்போது பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தி வந்துள்ளது. இந்தவகையில் இயற்கைச்சூழலுடன் பின்னிப்பிணைந்து அதன் ஆதிக்கதில் தங்கியிருந்த மனித வாழ்வு காலப்போக்கில் சட்டச்சூழல், சமுகச்சூழல், அரசியற்சூழல், கலாசார சூழல், பொருளாதாரச் சூழல், ஆன்மீகச் சூழல், தொழில் நுட்பச்சூழல் போன்ற மற்றும் இன்னோரன்ன சூழல்களின் செல்வாக்குக்கு உட்பட்டு படிமலர்ச்சி அடைந்து வந்திருப்பதனை நாம் காணக்கூடியதாகவுள்ளது. எனினும் இச் சூழல்களின் செல்வாக்கு, நாடுகள் கண்டங்கள் என்ற வகையில் பல்வேறு ஏற்றதாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளன. இவற்றில் அரசியற் சூழலானது ஏனைய சூழல்களின் செல்வாக்கினை கட்டுப்படுத்தி மனித வாழ்வில் அவற்றின் பங்களிப்பினை நிர்ணயம் செய்கின்ற சக்தி வாய்ந்த காரணியாக விளங்குவதனை பொதுவாக உலக நாடுகள் அனைத்திலும் நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இன்றைய அறிவியற் தொழிநுட்பச் சூழ்நிலை தழுவிய கல்வியில் நுண்பாகப் பெரும்பாகத் திட்டமிடல், மற்றும் அமுலாக்கம் என்பவை வெற்றிகரமாக அமைய வேண்டின் சமகால அரசியற் சூழ்நிலை அதன் எதிர்காலப் போக்குப் பற்றிய தீர்க்க தரிசனப் பார்வை என்பவற்றில் நிறைவான தேர்ச்சி உடையவர்களாகப் பிரஜைகள் ஒவ்வொருவரும் விளங்குதல் வேண்டும். இதனடிப்படையில் க.பொ.த உயர்தரம் கற்கின்ற மாணவர்கள் நாடுகளின் அரசியற் போக்கு அவற்றின் தாக்க விளைவுகள் வரலாற்று ரீதியான வளர்ச்சிகள் போன்றவை பற்றிய தெளிவான பார்வை கொண்டவர்களாக விளங்குவது அவசியமாகும். பல்வேறு கற்கைபுலங்களைச் சேர்ந்த மாணவர்களிடம் அரசியல் பற்றிய தேர்ச்சி அவசியமானதாகும்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் அரசியல் விஞ்ஞானம் போதிக்கின்ற பதினான்கு ஆசிரியர்களின் கூட்டு நன்முயற்சியால் இவ்வருடம் முதல் அமுலாகின்ற புதிய பாடாத்திட்ட உள்ளடக்கங்களுக்கு அமைவாக இந்நூல் வெளிவருகின்றது. கடந்த காலங்களில் வெளிவந்த நூல்களில் ஒவ்வோர் யாப்புச் சீர்திருத்தங்கள் என்ற வகையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இந் நூலில் பல்வேறு யாப்புச் சீர்தீருத்தங்களுடாக சட்டம், நீதி, நிர்வாகம், சமூகம், பொருளாதாரம் எனத் தனித்தனிதுறை ரீதியாக எவ்வாறான மாற்றங்களும், வளர்ச்சிகளும் ஏற்பட்டன என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் அரசியல் விஞ்ஞானத்தின் தற்கால செந்நெறிகளில் பிரபல்யம் அடைந்து வரும் பொதுநிர்வாகமும், பொதுக்கொள்கை உருவாக்கலும் மற்றும் மோதலும் மோதல் முகாமைத்துவம், மோதல் தீர்வு ஆகிய விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இலகுவாகக் கற்பதற்கும் புதிய கோணத்தில் சிந்திப்பதற்கும் இந்நூற் கட்டமைப்பும் உள்ளடக்கமும் உதவும் என்பதில் எவ்விதஐயமுமில்லை. இவ் அரிய முயற்சியில் ஈடுபட்ட ஆசிரிய குழாமினை மனதாரப் பாராட்டுவதுடன் எதிர் காலத்திலும் தொடர்ந்து நூல்களை வெளியீடு செய்து எமது பிரதேசத்தின் புத்தகப் பண்பாட்டின் மீள் மலர்ச்சிக்கு உதவ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

# வாழ்த்துச்செய்தி



திருமதி. சரோஜினி நாகராஜா
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
வலிகாமம்.

க.பொ.த (உ/த) மாணர்வகளின் பரீட்சையை மையப்படுத்தி வலிகாமம் கல்வி வலய அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களின் ஒன்றிணைந்து இப் புத்தகம் உருவாகியுள்ளது பராட்ட வேண்டியது.

தம்மிடம் கற்கும் மாணவர்களின் உயர்ச்சியைக் கருத்திற் கொண்டு எமது வலய ஆசிரியர்கள் குழு தாமே யா/யூனியன் கல்லூரி ஆசிரியர் வேலும்மயிலும் சேந்தன் அவர்களைத் தலைவராக்க கொண்டு செயற்பட்டு உருவாக்கியுள்ளார்கள். இந் நூலை உருவாக்குவதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தமக்கென ஒரு விடயத்தைத் தெரிவு செய்து பல நூல்களை துணை கொண்டு எழுதி புத்தக உருவில் வழங்கியுள்ளார்.

சிறிது காலத்தின் முன் இப்பாடத்தை மாணவர்கள் கற்க விரும்பவில்லை. அக்காலத்தில் இத்துணை ஆற்றுலுள்ள ஆசிரியர்கள் ஒதுங்கியே இருந்தனர். அரசியல் நிகழ்கால பல்கலைக் கழகத் தெரிவில் முக்கிய இடத்தப் பெறத் தொடங்கியதும் படிப்படியாக மணாவர்களின் ஈடுபாடு அதிகரித்து இன்று 450க்கு மேற்பட்ட மாணவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் பயில்கின்றனர்.

பிரித்தானிய குடியேற்ற நாடாக இலங்கை இருந்த காலத்திலிருந்து ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் அரசியல் நிர்வாக சமூக மாற்றங்கள், பொதுநிர்வாகம், பொதுக் கொள்கை உருவாக்கமும், மோதல் முகாமைத்துவத் தீர்வுகளும், முதலான புதிய அரசியல் செல்நெறிகளை ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருக்க வேண்டியவை.

ஆக்க பூர்வ சிந்தனை கொண்ட எமது ஆசிரியர் குழுவினரின் பணி எதிர்காலத்திலும் சிறப்புற அமைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

# வாழ்த்துச்செய்தி



திருமதி. க. பிரதீபா காயத்திரி
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானப் பாடப்பரப்பில் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. இதன் ஆக்கத்தில் எமது வலயத்தைச் சேர்ந்த பதினான்கு ஆசியர்கள் அயராது உழைத்துள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் பெருந்தொகையான மாணவர்கள் க.பொ.த (உ/த)ரத்தில் அரசியல் விஞ்ஞானத்தை விரும்பி கற்கின்றனர். அவர்களுக்குரிய பொதுப்பரீட்சைக்கான வழிகாட்டியாக இந்நூல் அமையுமென்பதில் ஐயமில்லை.

இந்நூல் உருப்பெற உழைத்த அனைத்துத் தரப்பினரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

# இலங்கையில் நிலவிய குடியேற்றாட்சி இயல்புகள்

## 1.0 இலங்கையில் நிலவிய குடியேற்றாட்சி இயல்புகள்

### 1.1 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல், நிர்வாக மாற்றங்கள். [1796 – 1832]

**அறிமுகம்.**

| | |
|---|---|
| 1796 - 1798 | படைப்பரிபாலன காலம் |
| 1801 - 1833 | அராசாங்கக் குழுவின் ஆலோசனையுடன் ஆள்பதி அரசாண்ட காலம் (பணிக்குழு) |
| 1833 - 1920 | சட்ட சபையில் உத்தியோக அங்கத்தவர் பெரும்பாண்மை யினராய் இருந்த காலம் |
| 1920 - 1924 | உத்தியோகப் பற்றற்றவரும் தெரியப்பட்ட வருமானப் பிரதிநிதிகள் பெரும்பாண்மையினராய் இருந்த ஆட்சிக்காலம் (பொறுப்பில்லாத செல்வாக்குக் காலம்) |
| 1931 - 1947 | அரசாங்க சபைக்காலம் |

இங்கிலாந்தின் பிரதம மந்தியாக இருந்த மூத்த பிற் என்ற சதாம் பிரபு இலங்கையை இங்கிலாந்தின் பரிபாலனத்தின் கீழ் நேரடியாகத் தொடர்பு செய்ய விரும்பியமையினால் இலங்கையை பரிபாலிக்க விரும்பிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திடம் நிர்வகிக்கவிடப்பட்டது.

இலங்கை இந்தியாவுடன் இணைக்கப்பட்டு சென்னைப்பட்டின ஆள்பதி கோட்பாட்டின் கீழ் விடப்பட்டது. றொபேட் அன்றூஸ் அவர்கள் இலங்கை அரசிறை அதிகாரியாக (27.10.1795) நியமிக்கப்பட்டார்.

கொழும்பு கைப்பற்றப்பட்டதும் வர்த்தக அதிகாரி நியமிக்கப்பட்டு கொழும்பில் இருந்தார். இவர்கள் எல்லோருக்கும் மேலாக மேஜர் ஜெனரல் யேம்ஸ் ஸ்ரூவாட் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

வர்த்தக சங்கத்தினரின் நிர்வா திறமின்மை, வரிவிதிப்புக்கள், உதவி உத்தியோகத்தர்களின் நடத்தை என்பவற்றால் பொதுமக்கள் வெறுப்படைந்தனர்.

இவர்களின் நிர்வாகத்தின் போது இலங்கைக் கரையோரம் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| திருகோணமலைப் பிரிவு | - மட்டக்களப்பு, முல்லைத்தீவு |
| யாழ்ப்பாணப் பிரிவு | - மன்னார், கல்பிட்டி |
| கொழும்பு பிரிவு | - சிலாபம் தொடக்கம் மாத்தறை வரை |

இப் பிரிவுகளின் காரியாலயங்கள் கச்சேரிகள் எனப்பட்டன.

கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் உடன் ஆதாயம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் குடியானவரிடம் பெருமளவு தானியவரி திரட்டுவாராயினர். இத்தகைய வரிதிரட்டல் குத்தகைகளை

மேற்பார்வை செய்ய, சென்னையிலிருந்து உத்தியோகத்தர்களை வரவழைத்தனர். அவர்கள் அமில்தார் எனப்பட்ட குத்தகைக்காரன், கொத்வால் (பொலிசுக்காரன்) குமாஸ்தா (கிளாக்), மணியக்காரன், ஆராய்ச்சி, கணக்கன், கண்காணி, சேவகன், பறையன் ஆகிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களை மாகாண அதிபர் பரிபாலனஞ் செய்தனர்.

## சமூகமாற்றம்

பிரித்தானியர் இலங்கைக்கு வந்தமையினால் இலங்கையின் சமூக நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கை ஒரு பல்கலாசார நாடாக மாற்றமடைந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், மலாயர், இந்தியதமிழர் ஆகிய பல்லினங்களை கொண்டு பல்கலாசார பண்பாடு கொண்டதாக மிளிர்ந்தது.

பிரித்தானிய அரசு அரசசெலவீனத்தைக் குறைக்க வேண்டிய தேவை இருந்தது. இதன் காரணமாக 16 மாகாணங்களாக இருந்த இலங்கை 5 மாகாணங்களை கொண்டதாக ஆக்கப்பட்டது. மேலும் சிவில் சேவையாளர்களின் எண்ணிக்கையையும் குறைந்தனர். இதற்கு ஈடாக இலங்கை சுதேசிகளுக்கு ஆங்கில கல்வியை வழங்கி சிவில் சேவைப் பதவியை வழங்கினர். இவ்வாறு உருவாக்கப்பட்டவர்களே மத்திய தரவர்க்கத்தினராவர்.

1815 - 1818 வரையான காலப் பகுதியில் கண்டி ஒரு தனி நிர்வாக அலகாக காணப்பட்டதோடு தனியான கலாசார பண்பாடு கொண்டதாகவும் விளங்கியது. 1818ல் ஆங்கிலேயருக்கும் கண்டிப் பிரதானிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி ஆங்கிலேயர் நடக்காமையால் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கிளர்ச்சியின் போது ஆங்கிலேயரால் கண்டியர் மிக மோசமாக நசுக்கப்பட்டனர். எனவே மீண்டுமொரு கிளர்ச்சி ஏற்படாமல் இருக்க இலங்கை முழுவதும் ஒரு நிர்வாக அலகாக கொண்டுவரப்பட்டது.

1820 - 1830 வரையான காலப் பகுதியில் இலங்கை முழுவதும் மலேரியா நோய்த்தாக்கத்துக்குள்ளானது. இலங்கையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரும் மலேரியா நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். அத் தாக்கதிலிருந்து அவர்களை மீட்டெடுக்க புதிய வீதிகளை அமைக்க வேண்டிய தேவை எழுந்தது. ஏனெனில் இலங்கைக்கான பிரதான போக்குவரத்து பாதை கடலோரத்தை மையமாகக் கொண்ட கப்பல் சேவையாகவே இருந்தது. எனவே வீதிகள் அமைக்கவேண்டியிருந்தது. இராஜகாரிய முறையைப் பயன்படுத்தியே இவ் வீதிகள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சின்னமுத்து நோயின் தாக்கம் காணப்பட்ட போது கிராமப்புற மக்களின் மூடநம்பிக்கை காரணமாக நோயாளிகள் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களைக் கருத்தில் கொண்டு ஆளுனர் நோத்தினால் வதிவிட

வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டதுடன் அவைகளைப் பராமரிக்க மேற்பார்வையாளர்கள் நியமனம செய்யப்பட்டனர். நோய்களின் தாக்கத்திலிருந்து மீட்டெடுக்க தடுப்புமருந்து அறிமுகம் செய்யப்பட்டது.

மத சுதந்திரம் பேணப்பட்டது. அதாவது ஒல்லாந்தர் காலத்தில் அவரவர் மதங்களைப் பின்பற்ற தடைவிதிக்கப்பட்டிருந்தது. பிரித்தானியர் அத்தடைகளை நீக்கி அவரவர் தத்தமது மதத்தைப் பின்பற்ற சுதந்திரமளித்தனர்.

1832 இல் கொழும்பு - கண்டி புகையிரதசேவை (Mail Coach) ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே தபால் சேவையும் ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பை மையமாக கொண்டு கொழும்புடன் ஏனைய கிராமங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதால் கிராமங்களும், மாவட்டங்களும் அபிவிருத்தி அடைந்தன.

மேலும் வெஸ்லியன் மிஷன், அமெரிக்கன்மிஷன், பப்டிஸன் மிஷன் முதலான சபைகளால் வதிவிட ஆங்கில பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் கிராமப்புறங்களின் கல்வியறிவு மேம்படுத்தப்பட்டது.

**பொருளாதார மாற்றம்**

1798 தொடக்கம் 1802 வரையான காலப்பகுதியில் இலங்கையில் இரட்டை ஆட்சிமுறை நிலவியது. இம்முறையின் கீழ் பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலை ஏற்பட்டது.

இலங்கையில் கறுவா முக்கிய பயிராக காணப்பட்டமையால் மேலைத்தேய நாட்டவர் மத்தியில் கறுவாவிற்கு கிராக்கி காணப்பட்டது. இக்காலப்பகுதியில் பிரித்தானியா கோட்டையரசனுடன் கறுவா வர்த்தக தொடர்புகளை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கோப்பி தெங்கு போன்றவை மேலைத்தேய நாட்டவர் மத்தியில் முக்கியத்துவம் பெற்றிருந்த போதிலும் அவற்றின் மூலம் போதியளவு வருவாய் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

பிரித்தானியர் வருகைக்கு முன்பே இலங்கையின் கரையோரங்கள் இஸ்லாமியர், வர்த்தகத்தில் முன்னுரிமை பெற்று விளங்கியமையால் வர்த்தக ஏகபோக உரிமைக்காக பிரித்தானியருக்கும் இஸ்லாமியருக்கும் இடையே போட்டி நிலைமை நிலவியது.

1818 காலப்பகுதியில் பெருந்தோட்ட விவசாயத்தில் முதலீடு செய்ய அநேகர் முன்வந்த நிலையில் அவர்களுக்கு பிரித்தானியா அரசாங்கத்தினால் சலுகைகள் வழங்க வேண்டிய தேவை உணரப்பட்டது.

பிரித்தானியரைப் பொறுத்தவரை பெருந்தோட்ட வர்க்கத்தில் கூடிய நாட்டம் கொண்ட போதிலும் மரபு முறை விவசாயத்தை முன்னேற்ற வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருந்தனர். இதனால் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் புனருத்தாரனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியர் தமக்கு முக்கிய வருமானமாக இருந்த தானிய வரியை அறிமுகப்படுத்தியதுடன் தானிய உற்பத்தியை அதிகரிக்க நீர்ப்பபாசனத் திட்டங்களை மேற்கொண்டனர். உருளைக்கிழங்கு, முத்துச்சம்பா, சோளன் போன்ற புதிய பயிர்களை அறிமுகம் செய்தனர். ஆனால் பிரித்தானியரின் இத் திட்டம் வெற்றியளிக்கவில்லை. இதற்கான காரணம்

1. நிலச்சுவாந்தர்கள் இச் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளாமை
2. கல்வியறிவில்லாத சாதாரண விவசாயிகளுக்கு இவை தொடர்பான போதிய அறிவு இல்லாமை

ஆரம்ப காலத்தில் கிழக்கிந்திய கம்பனி அறிமுகம் செய்த கோப்பி, பருத்தி, கரும்பு போன்றவை இக்காலத்தில் தொடர்ந்து இருந்ததுடன் கறுவாச் செய்கைக்கு இராஜகாரிய முறை பயன்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அரசியல், நிர்வாக மாற்றம்

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் 1798 - 1802 வரை இலங்கையில் இரட்டை ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதாவது வருமானம், வர்த்தகம் போன்றவை பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடமும் பாதுகாப்பு, சிவில் நிர்வாகம் என்பன பிரித்தானிய முடியினால் நியமிக்கப்பட்ட தேசாதிபதியிடமும் ஒப்படைக்கப்பட்ட முறைமையே இரட்டையாட்சி முறையாகும்.

இலங்கையின் கரையோரப் பகுதிகள் கைப்பற்றப்பட்டவுடன் இந்தியாவில் வணிகமும் ஆட்சியும் செய்துவந்த கிழக்கிந்திய வர்த்தக கம்பனியினரே இலங்கை ஆட்சிக்கும் பொறுப்பாகவிருந்தனர். சென்னையிலிருந்த ஆட்சிப்பீடமே இப் பொறுப்பையும் நடைமுறைப்படுத்தி வந்தது. இவ்வேளையில் சென்னை அதிகாரிகள் நடந்து கொண்ட முறை மக்களுக்கு திருப்தியில்லாதிருந்தது. இராணுவ உத்தியோகத்தராலேயே அரசியற் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டன. இதனால் மக்கள் வெளிப்படையாகவே அரசாங்கத்தை எதிர்த்தனர். அதிகப்படியான வரிகளை எதிர்த்து மக்கள் கலகங்களிலும் ஈடுபட்டனர். மக்கள் ஆங்கிலேயராட்சி தமக்கு வேண்டாம் எனும் நிலையும் ஏற்படலாயிற்று. இவ்வாறு கலகம் ஏற்பட்ட வேளையில் கண்டியரசனும் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயருக்கு தீராத தொல்லை கொடுத்தனர். இந்நிலையை கண்ணுற்ற சென்னைப் பட்டின ஆள்பதி போபாட் அவர்கள் 1797ல் இலங்கையில் அரசியற் பரிபாலன முறைகளை விசாரிக்கவென ஓர் சபையை

நியமித்தார். ஆயினும் இலங்கையின் பல பகுதிகளிலும் கலவரம் ஏற்பட்டது. சென்னை அதிகாரிகள் அவமதிக்கவும்பட்டனர்.

இவ்வேளையில் ஐரோப்பாவிலும் நெப்போலிய யுத்தங்கள் முடிவடைந்து இலங்கையை ஆங்கிலேயரே ஆளவேண்டும் என்ற குரல் எழுந்தது. வர்த்தக சங்கத்தாரிடம் இருந்து இலங்கையை பெறவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டது. ஆனால் வர்த்தக சங்கத்தினர் இதனை ஏற்கவில்லை.

எனவே இத்தொந்தரவுகளில் தலையிட விரும்பாத ஆங்கிலேயர் வர்த்தக சங்கத்தினரோடு ஒத்துழைத்து இரு தரப்பினருக்கும் அதிகாரமுள்ள ஓர் அரசியல் முறையில் இலங்கையை பரிபாலித்துக்கொள்ள வழிவகுக்கப்பட்டது. இரு பகுதியினரும் தமக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி இங்கிலாந்திலிருந்து மேல் உத்தியோகத்தரை ஆங்கில அரசாங்கம் அனுப்பவும் அவருக்கு உதவியாக சென்னைபட்டின அதிகாரிகள் இருந்து அலுவல்களைச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமையவே குடியேற்ற மந்திரியார் பொறுப்பில் இலங்கை பரிபாலிக்கப்படவும் பரிபாலனப் பொறுப்புள்ள ஓர் ஆள்பதி இலங்கிலாந்திலிருந்து வரவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்படியே வர்த்தகம், வருமானம் என்பன கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடமும் அரசியல், நீதி வழங்கல், பாதுகாப்பு முதலிய அலுவல்கள் ஆள்பதியின் அதிகாரத்தில் இருக்கவும் இரட்டையாட்சியில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இங்கு ஆள்பதி குடியேற்ற மந்திரிக்கு கட்டுப்பட்டும் வர்த்தக சங்கத்தினரின் பிரமாணங்களையும் ஆலோசனைகளையும் ஏற்று நடக்க வேண்டியவரானார். ஆள்பதிக்கு ஆலோசனை கூறவென ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதில் இராணுவத் தலைவர், பிரதம நீதிபதி, பிரதம செயலாளர், வேறு இருவர் என ஐவர் இடம் பெற்றனர். இவர்களது ஆலோசனையை ஆள்பதி கேட்காதவிடத்து குடியேற்ற நாட்டுக் காரியதரிக்கு அதனை எழுத்து மூலம் அறியத்தரவேண்டும். ஆள்பதியின் ஆட்சியானது முடிசார் குடியேற்ற ஆட்சியாகியது. எனவே இங்கு ஆள்பதியின் அதிகாரம் அதிகமாக இருப்பதால் அரசு - அரசாங்கம் என்ற நிறுவனங்களை வேறுபடுத்திக் பார்க்க முடியாதிருந்தது.

விசாரணைக் குழுவினர் பல மாறுதல்களைச் செய்யுமாறு கூறி அறிக்கை சமர்ப்பித்தனர். இதன்படி தென்னைவரி நீக்கப்பட்டு ஏற்றுமதியாகும் தெங்குப் பொருட்களுக்கு மட்டும் வரிவிதிக்கப்பட வேண்டும், மீண்டும் முதலியார்மார் பதவியில் சேர்க்கப்படவேண்டும் போன்ற சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன.

கிழக்கிந்திய வர்த்தக கம்பனியினர் உடனடியாக மாற்றங்களை ஏற்படுத்தாது அடுத்த நிதி வருடத்தில் செய்யலாம் என இருந்தார். ஆனால்

பிரித்தானிய முடியால் ஆள்பதியாக நோத் அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிற்சில மாற்றங்களை மட்டும் செய்ய முன்வந்தனர்.

1798ல் பிரட்றிக் நோத் அவர்கள் முதலாவது ஆள்பதியாக பதியேற்றார். அவருக்கு உதவியாக பிரதமகாரியதரிசி ஒருவரும் நியமிக்கப்பட்டார். இலங்கையின் அரசியற் பரிபாலன அலுவல்கள் யாவும் பிரதம காரியதரி மூலம் நடைபெறவும் இவர் மூலமே சகல பத்திரங்களும் ஆள்பதியின் மேலொப்பத்திற்கும் ஆணைக்கும் அனுப்பப்படவும் ஒழுங்கு செய்யப்பட்டன. இவருக்கு உதவியாக ஒரு காரியதரிசியும் நியமிக்கப்பட்டார். இதை விட அரசாங்க அலுவல்களுக்கு ஒரு கணக்காளர் திணைக்களமும், கணக்காய்வாளர் திணைக்களமும் ஏற்படுத்தப்பட்டன.

இரட்டையாட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட திணைக்கங்களுள் கறுவா வியாபார அலுவலகமும் ஒன்றாகும். ஆனால் நோத் அவர்கள் செய்த பரிபாலனத் திருத்தங்களுள் தலையாய திருத்தம் வருமான திணைக்களம் அமைந்தமையே ஆகும்.

ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய முறை நல்லது எனக் கண்டதால் அதைத்தழுவிய புதிய முறை கொண்டு வரப்பட்டது. ஆள்பதியால் முதலிமார், வன்னியர் போன்ற பதவிகளுக்கும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் முதலியாருக்கிருந்த அதிகாரத்தைக் குறைக்க விரும்பி சிவில் சேவையாளரின் அதிகாரத்தை அதிகரிக்க விளைந்தார். இதனால் சிவில் சேவையாளர்கள், பொதுமக்கள் தொடர்புகளை அதிகரிக்க விரும்பினர். மேலும் முதலியார்களின் நிந்தக உரிமையை ஆள்பதி தன்வசப்படுத்தினார். இதற்காக முதலியார்களுக்கு மாதாந்த ஊதியத்தையும் வழங்கினார்.

சிறிது காலம் செல்ல ஆள்பதிக்கும் பிரதமகாரியதரிசிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு அவர் மாற்றம் செய்யப்பட்டார்.

இலங்கையின் வருமானத்தையும், வர்த்தகத்தையும் கண்காணிக்க நோத் அவர்கள் 1801ல் ஒரு சங்கத்தையும் ஸ்தாபித்தார். கலெக்டர் எனும் வரி அதிகாரிப் பதவி நீக்கப்பட்டு மாவட்ட அதிபர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 1800ல் தீர்மானிக்கப்பட்டதன் படி அளவையாளர் திணைக்களமும் நிறுவப்படலாயிற்று. மேலும் வீதி, பாலங்கள் முதலிய போக்குவரத்து வசதிகளைக் கவனிக்கவென பகிரங்க சேவைத் திணைக்களமும் நிறுவப்பட்டது. வைத்திய சாலைகள் பல நிறுவப்பட்டன. சுகாதாரப் பகுதியோடு இணைந்து தர்மச்சாலைகளும் நிறுவப்பட்டன.

தர்மச் சாலைகள் போல வித்தியாசாலைகளும் மக்களுக்கு சேவை செய்யவென ஆரம்பிக்கப்பட்டன. ஒல்லாந்தர் கால முறையை அடியொற்றி ஒவ்வொரு பிரிவுகளிலும் ஒரு கோவிலும் பாடசாலையும் நிறுவப்பட்டது.

இவற்றைவிட உயர்தரப் பாடசாலைகளும் நிறுவி பறங்கிப் பிள்ளைகளுக்கு மேற்படிப்புக்கு வசதி செய்யப்பட்டது.

நாட்டிலே திருத்தங்கள் பலவற்றைச் செய்து புகழ் பெற்ற ஆள்பதி அவர்கள் நாட்டின் வருமானத்தை அதிகரிக்க முயன்றார். 1800ல் ஆபரணவரி எனும் புதிய வரியும் விதிக்கப்பட்டது. இதனால் முன்புபோல் கலகம் ஏற்பட்டது. கலகம் அடக்கப்பட்டாலும் மக்கள் மனதில் திருப்தியின்மையே காணப்பட்டது.

இலங்கையின் பரிபாலனத்தில் வர்த்தக சங்கத்தினரின் தொடர்பை நீக்குதல் வேண்டும் எனவும் இதனால் இலங்கைக்கும் வர்த்தக சங்கத்தினருக்கும் நன்மை உண்டாகும் எனவும் "டண்டாஸ்" என்பவரது தகவுரைக்கமையவும் ஆள்பதியவர்களின் கோரிக்கைக்கு இணங்கவும் 18.02.1801ல் ஆள்பதி நோத் அவர்களுக்கு புதிய ஆணைப்பத்திரம் அனுப்பப்பட்டது. இதன்படி இலங்கை வர்த்தகசங்கத்தின் பிடியிலிருந்து நீக்கப்பட்டு குடியியற்பாலன, படைப்பாலன, பிறபரிபாலன அலுவல்கள் யாவும் ஆள்பதியிடம் பொறுப்பாக விடப்பட்டன என அறிவிக்கப்பட்டது.

1801 தொடக்கம் ஆள்பதியின் அதிகாரங்கள் வெகு வலுவாக்கப்பட்டன. இலங்கைக் கரையோரப் பரிபாலனம் காரணமாக 8 மாவட்டப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது.

இந்நிலையில் ஐரோப்பாவில் நெருக்கடிகள் ஓரளவுக்குக் குறைந்தன. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவில் தாம் அமைக்க விரும்பிய பேரரசைக் காப்பற்ற இலங்கை இன்றியமையாதது என உணர்ந்ததன் விளைவாக இலங்கையை நிரந்தரமாக ஆள விரும்பினர். இதற்கான சம்மதத்தினை 1802ல் ஏமியன்ஸ் உடன்படிக்கையில் பெற்றுக் கொண்டனர். இதன் பிரகாரம் இரட்டையாட்சி காலத்தில் நிலவிய குறைபாடுகளை நீக்கும் பொருட்டும் பிரித்தானியப் பேரரசை நிலை நிறுத்தும் வகையிலும் இரட்டையாட்சி முறை நீக்கப்பட்டு 01.02.1802 தொடக்கம் இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது 03.02.1948 வரை இலங்கை ஒரு முடிசார் குடியேற்ற நாடாகவே மிளிர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முடிக்குரிய நாடாகப் பதியப்பட்டதன் பின் ஆள்பதி அவர்களுக்கு அதிக பொறுப்பும் அதிகாரமும் ஏற்பட்டன. அவரே எல்லாக் காரியங்கங்களுக்கும் முதல்வரானார். அவர் முடியின் பெயரால் சகல காரியங்களையும் செய்து கொள்ள வலுவுள்ளவரானார். அவர் இலங்கையின் பிரதம அதிகாரியாகவும், சட்ட நிறைவேற்றதிகாரியாகவும், நீதி வழங்கும் நீதிபதியாகவும், சட்டஞ்செய்யும் பிரதம உத்தியோகத்தராயும் இருந்தார். இக்காலம் அரசு, அரசாங்கம் பிரிக்கப்படவில்லை. மற்றும் அரசாங்கத்தின் வலுவேறாக்கம் இடம்பெறவில்லை.

இக்காலத்தில் ஏற்பட்ட திருத்தங்களுள் முக்கியமானதாக இலங்கையின் பரிபாலனத்தின் பொருட்டு உயர் உத்தியோகத்தரைத் தெரிவதற்காகன ஏற்படுத்தப்பட்ட சிவில் சேவை எனப்படும் குடியியற் சேவைப் பரீட்சையும் தெரிவுமாகும்.

இக்காலத்தில் ஆள்பதி அவர்கள் அரசாங்கத்தின் பேரில் வியாபாரத்தின் ஏகபோக உரிமையும், மிதமிஞ்சிய செல்வாக்கும் அதிகாரமும் எந்த நீதிமன்றத்தாலும் எவராலும் எக்குற்றத்தின் பேரினாலும் குற்றஞ்சாட்டப்பட முடியாதவராக அதிஉன்னத, கௌரவ, மேன்மை நிலையுள்ளவரானார். இதுவே அரசு மற்றும் அரசாங்கம் என்றால் ஆள்பதி என்ற நிலையை ஏற்படுத்தியது.

இலங்கைக் கரை நாடுகளில் தமது அதிகாரத்தைப் பலப்படுத்திய ஆங்கிலேயர் கண்டியருடன் வியாபரத் தொடர்பை மட்டுமே வைத்திருந்தனர். கண்டி தனிராச்சியமாக செயற்பட்டது. குடியேற்ற காரியாலயம் கண்டி மீது செல்வாக்குப் பெறமுனைந்தபோது ஆள்பதி நோத் அவர்களால் 1803ல் கண்டியை கைப்பற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு தோல்வியடைந்தது. தொடர்ந்து 1805ல் நோத் அவர்கள் இங்கிலாந்து செல்ல தோமஸ் மெயிற்லண்ட் ஆள்பதியாகினார்.

இவரது காலத்தில் பிரித்தானிய நிர்வாக முறையை அப்படியே இலங்கைக்கு கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. முதலியாருக்கு இருந்த நீதித்துறை அதிகாரத்தை குறைத்தல். அதற்குப் பதிலாக கிராமிய நீதிமன்றங்களை ஆளுனர் நியமித்தல், முதலிமார் அதிகாரத்தைக் குறைத்து விதானைமாருக்கும் பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தல், தோம்புகளைப் பராமரித்தல் வேலைகளை முதலிமாரிடம் இருந்து பெற்று பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு கொடுத்தல், சிவில் சேவையாளர்களுக்கு தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் இல்லாத சந்தர்ப்பத்தில் பதவி உயர்வு வழங்காதிருத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

18121ல் மெயிற்லண்ட் அவர்களுக்குப் பின் றெபேட் பிறவுன்றிக் அவர்கள் ஆள்பதியானார். அவரது காலத்திலேயே 1815 கண்டி இராச்சியமானது கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் பிரித்தானியரின் கைவசமாகியது. இலங்கை முழுவதும் ஒரே அரசியல் நிர்வாக அலகாக ஒழுங்கமைக்கப்பட்டு காலனித்துவ ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது.

கண்டி கைப்பற்றப்பட்டபோது கண்டி மக்களுக்கும் இலங்கை ஆள்பதிக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் நிறைவேறியது. புத்த சமயத்தைப் பாதுகாக்கவும், அதுவரை நடைமுறையிலிருந்த நீதி பரிபாலன முறையின்படியே நீதிவழங்கவும் பிரித்தானிய அரசு ஏற்றுக் கொண்டது. கண்டிப் பிரதானிகள் தமக்கு பரம்பரையாக இருந்து வந்த உரிமைகளையும் சலுகைகளையும் முன்பு

போல் புதிய ஆட்சிபீடத்தில் முரண்படாத வகையில் அனுபவிக்கலாமென்று கூறப்பட்டது. பழைய கண்டி இராச்சியத்திற்கென ஓர் ஆட்சிமுறையும் வகுக்கப்பட்டது. ஆனால் இந் நடவடிக்கைகள் யாவும் சிறிது காலத்திற்குள் சிதைந்து போனமையால் 1818ல் கண்டியில் பெரியதோர் கலகமும் நிகழ்ந்தது. இக்கலகம் அடக்கப்பட்டு ஆட்சி முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. கண்டிப் பிரதேசம் ஆள்பதியின் நேர் ஆணைக்குள் வந்தது. ஆட்சியில் உதவிபுரியவென சிலர் நியமனமும் பெற்றனர்.

**1.2 கோல்புறூக் அரசியல் திட்டத்தின் அரசியல் நிர்வாக மாற்றங்கள் (1833)**

இலங்கையை ஆளவந்த முதலாள் பதியான நோத் அவர்கள் காலத்திலே பிரதம நீதியரசராயும், ஆள்பதியின் ஆலோசனைச் சபையில் முதலாம் அங்கத்தவராயும் இருந்த பெரியார் சேர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் என்பவராவர். அவர் இலங்கையின் அரசியல் அலுவல் காரணமாக இலங்கைக்கு ஒரு சட்டசபை அமைத்தல் வேண்டும் என 1807ம் ஆண்டளவிலேயே குடியேற்ற மந்திரிக்கு ஒரு தகவுரை எழுதினார். அலெக்சாண்டர் யோண்ஸ்ரனுடைய தகவுரை சிறந்ததாய் இருந்த போதிலும் அதனை ஆங்கிலேயர் முதலில் கவனிக்கவில்லை.

ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் ஒரு நாடாக்கிவிட்டு ஓரரசு என பிரகடனம் செய்து அரசாங்கம் என்றால் ஆள்பதி என்றும் ஆள்பதி என்றால் அரசாங்கம் என்றும் கருதும் அளவில் ஆள்பதி அவர்களின் வரம்பற்ற அதிகாரம் இருந்தது. மானிய முறையிலமைந்த ஊழிய முறையும் விளைவு வரியும் மக்களுக்கு வெறுக்கத்தக்கனவாயே இருந்தன. ஆகவே இலங்கையில் அரசியல் முறை, நீதி பரிபாலன முறை, பொருளாதார அமைப்பு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படல் வேண்டுமென எல்லோரும் விரும்பினர்.

சேர் வில்மட் ஹோட்டன் அவர்கள் காலத்திலேதான் இலங்கையின் முதலாவது சட்டசபை நியமிக்கப்பட்டது. ஹோட்டன் அவர்கள் இலங்கையில் உள்ள நிலவரங்களைச் சீராக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க கோல்புறூக் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு கோல்புறூக் குழு என அழைக்கப்பட்டது.

கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு 1833 ல் பிரித்தானிய அரசினால் இலங்கையின் யாப்புமுறை மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என இரு கழகங்கள் அமைக்கப்பட்டது. ஆனால் நாட்டின் ஆட்சி நிதி சம்பந்தமான இறுதிப் பொறுப்புக்கள் தேசாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. தேசாதிபதிக்கு ஏற்கனவே இருந்து வந்த அதிகாரங்கள் இரு சபைகளாலும் ஓரளவுக்கு குறைக்கப்பட்டன.

சட்டவாக்ககழகத்தில் 15பேர் அங்கத்துவம் வகித்தார்கள். இவர்களுள் 9பேர் பதவிவழி நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள். ஏனைய 6பேர் ஒவ்வொரு தேசிய இனத்தினரின் பிரதிநிதிகளாக தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார்கள். இந்த பதவி சாராத 6 உறுப்பினர்களுள் 3பேர் ஐரோப்பியரின் பிரதிநிதிகள் ஏனைய 3பேரில் சிங்களவர், தமிழர், பறங்கியர் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டார்கள். நாட்டின் உயர்மட்ட சிவில், இராணுவ அதிகாரிகள் 6பேர் நிர்வாக கழக அங்கத்தவர்காளக இருந்தார்கள். இந்த கழகங்களுக்கு அவ்வளவு அதிகாரங்கள் இருக்கவில்லை. இந்தக் கழகங்கள் இரண்டுக்கும் தலைவர் தேசாதிபதியே ஆவார்.

கோல்புறூக் குழுவினரால் நிறுவச் செய்த சட்ட நிரூபண சபையும், சட்ட நிர்வாக சபையும் சேர்ந்ததே சட்டசபையாகும். ஆள்பதி அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு அமைந்த "நிர்வாக சபை" "ஆணையாளர் சபை" ஆகிய சபைகளின் ஆலோசனையை ஆள்பதி அவர்கள் கேட்டல் வேண்டும் என்ற நியதி இருக்கவில்லை. ஆலோசனை சபையும் ஆள்பதி என்ற நிலைமை நீக்கப்பட்டு இப்போது சட்டசபையும் ஆள்பதியும் என்ற அமைப்பு ஏற்பட்டது.

சட்டசபையில் உள்ள சட்ட நிரூபண சபையிலும் பார்க்கச் சட்ட நிருவாக சபையே அதிகாரம் உள்ளது. அதனை சட்ட நிறைவேற்று சபை எனவும் கூறுவர். அது ஆள்பதி அவர்களுக்கு ஆலோசனை கூறும் மந்திரிகள் சபை போன்றது. ஆனால் அதில் இருந்த அங்கத்தவர்களுக்கு திணைக்களங்களோ, மந்திரி என்ற பெயரோ இருக்கவில்லை. அவர்கள் ஆள்பதிக்கு ஆலோசனை கூறினால், ஆள்பதி அதனைக் கேட்காவிட்டால் அதற்குக் காரணம் இன்னது என்று குடியேற்ற மந்திரிக்கு விள்க்கம் எழுத வேண்டும் என்ற நியதி இருந்தது. இதுவே ஜனநாயக கோட்டபாடுகளுக்கிணங்க மாற்றுக் கருத்துக்கள் சட்டசபையில் எதிரொலிப்பதற்கு காலாக அமைந்தது.

இத்தகைய சட்டநிருவாக சபையிலே ஆள்பதியோடு அரசாங்கக் காரியதரசி, நிதிநாயகம், கணக்கு பரிசோதகர், அளவையாளர் நாயகம் சுங்கத்தலைவர், மேல்மாகாண அரசாங்க அதிபர் ஆகியோர் இருக்கவும், அவர்கள் ஆள்பதிக்கு நிர்வாக அலுவலிலும், நிதி அலுவுலிலும் ஆலோசனை கூறுவதற்கு அருகதை உள்ளவராயிருக்கவும் வழிவகுக்கப்பட்டது.

கோல்புறூக் குழுவினர் அமைத்த சட்டசபை காலத்திலே வாக்குரிமை என்றோ, தேர்தல் என்றோ, வாக்களித்தல் என்றோ ஒன்றும் இல்லை. அரசியல்கட்சி என்றால் என்ன என்றே தெரியாது. எனவே ஆள்பதி அவர்கள் சில பெரியார்களை தமது விருப்பத்தின் வண்ணம் அழைக்கப்பட்டு அங்கத்தவராக இருக்கும்படி பணித்தார். ஆள்பதி தாமே ஆட்சியை நடத்தி வந்தார் அந்த ஆட்சியை பணிக்குழுவாட்சி என்றும் கூறுவர். இக் காலத்தில் நிர்வாகத்தையும் அரசியலையும் பிரிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

### கோல்புறூக் அரசியற் திட்டத்தினால் ஏற்பட்ட சமூகமாற்றம்

01. இராஜகாரியமுறை நீக்கப்பட்டது.
02. ஆங்கில கலாசாரத்தின் ஊடுறுவல் நிகழ்ந்தது
03. ஆங்கிலம் உத்தியோக பூர்வ மொழியாக்கப்பட்டது.
04. மத்திய தர வர்க்கம் தோற்றம் பெற்றனர்.
05. மேலைத்தேய கல்வியினூடாக தொழில்சார் சமூக வகுப்பு உதயம் பெற்றது.
06. சுதந்திரமான சந்தைமுறையினால் சாதிமுறை வீழ்ச்சி ஆரம்பமானது
07. மேலைத்தேய மயமாக்கலுக்கு உட்பட்டமையால் மரபு ரீதியான இயல்புகள் வீழ்ச்சியடைந்தமை
08. மக்களிடையே மதுபான பழக்கவழக்கம் அதிகரித்தல்
09. கிறிஸ்தவ பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை
10. தேசிய தலைவர்கள் எனக் கருதப்படுபவர்களால், தேசிய கலாசாரத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் சுதேச மதம், மொழி, இலக்கியம், கல்வி ஆகியவற்றில் மறுமலரச்சி பெற அரும்பணிகள் ஆற்றப்பட்டன.
11. அச்சு இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டது.
12. பரவலாக பத்திரிகை வெளியிடப்பட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு பொதுசன அபிப்பிராயம் வெளிப்பட்டது. இதற்கு பிரித்தானிய அரசின் லிபறல் ஜனநாயக கோட்பாடே காரணமெனலாம்.
13. 1833ல் இலங்கையரை இனரீதியாகக் கணித்த பின்னரும் முஸ்லீம்களுக்கும் கண்டியருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறவில்லை. 1889 அளவிலேயே இப்பிரதிநிதித்துவத்தை வழங்கினர். இவ்வாறான இன ரீதியான பிரதிநிதித்துவமே பிற்காலத்தில் இனரீதியான மோதல்கள் ஏற்பட காரணமாகிய தெனலாம்.
14. கோல்புறூக் சீர்திருத்தத்தின் காரணமாக நீதித்துறையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பணத்தைச் செலவழித்தும் நீண்ட நாட்கள் அலைந்தும் நீதி தேடி அலைந்தனர். இது சமூகத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்துவதாயிற்று.

### கோல்புறூக் அரசியற் திட்டத்தினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றம்

இதுவரை காலமும் வர்த்தகத்தில் அரசாங்கம் கொண்டிருந்த ஏகபோக உரிமை நீக்கப்பட்டு தனியார் துறையினரும் வர்த்தகத்தில் ஈடுபட வசதி அளிக்கப்பட்டது.

பிரித்தானிய அரசாங்கத்தினால் பிரதான வருமான மார்க்கமான பெருந்தோட்ட வர்த்தக துறையின் அறிமுகத்தினால் இலங்கையின் எதிர்கால ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு சிறந்த அடித்தளம் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு பிரித்தானியாவில் காணப்பட்ட தாராள ஜனநாயக கொள்கையின் தாக்கம் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பிரித்தானியர் பெருந்தோட்ட பயிரச் செய்கைக்கு முக்கியத்துவம் அளித்து, கிராமிய பொருளாதாரத்தைப் புறக்கணித்தமையால் தன்னிறைவுப் பொருளாதாரம் சிதைவடைந்தது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக சில வரிச்சலுகைகள் வழங்கப்பட்டன. திறந்த சந்தை முறையின் அறிமுகம், வர்த்தகத்தை அடிப்படையாக கொண்ட முதலாளித்தவ வர்த்தகத்தின் உதயம் போன்றவை இவ் யாப்பின் முக்கிய பொருளாதார விளைவுகளாக காணப்படுகின்றது.

பொருளாதார துறையில் தேசாதிபதியின் அதிகாரம் வரம்பற்றுக் காணப்பட்டது. இக்காலத்தில் குடியேற்ற இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் தேசாதிபதி தனியுரிமை பெற்றிருந்தனர்.

### கோல்புறூக் அரசியல் திட்டத்தின் நன்மைகள்

01. கோல்புறூக் அரசியல் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டசபை பிற்காலத்தில் பாராளுமன்றம் என்கின்ற அமைப்பு தோன்றுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.
02. பிரதிநிதித்துவ அரசியல் என்கின்ற அம்சத்தை இச் சீர்திருத்தம் இலங்கையில் ஆரம்பித்து வைத்தது
03. ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமையானது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற பிரித்தானிய அரசியல் சமூக பொருளாதார விடயங்களை நன்கு அறிந்த ஒரு சுதேசிய மத்தியதர வர்க்கம் உருவாகுவதற்கு வாய்ப்பாக இருந்தது.
04. கட்டற்ற வர்த்தகம் என்பதன் அறிமுகம் வர்த்தக சமூகம் ஒன்று உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது.
05. இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டமையினால், பல்வேறு இன மக்களும் ஒருவருக்கொருவர் தொடர்பு பெறும் நிலை ஏற்பட்டது.

### கோல்புறூக் அரசியல் திட்டத்தின் குறைபாடுகள்

01. இனவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமையானது பிற்காலத்தில் இனரீதியான முரண்பாடுகள் தோன்றுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தது.
02. பெருந்தோட்டத் துறையின் அறிமுகமானது இரட்டை பொருளாதார அமைப்பை இலங்கையில் உருவாக்கியமையால் உலர்வலய விவசாயத்துறை கவனிக்கப்படாமலேவிடுகின்ற நிலை தோற்றம் பெற்றது.
03. ஆங்கிலக் கல்வியின் அறிமுகமானது ஆங்கிலமொழி, ஆங்கில கலாசாரம் என்பன ஊடுருவுவதற்கு வழிவகுத்தது. இதனால் சொந்த மொழி, சொந்த கலாசாரம் போன்றவற்றை புறக்கணிக்கும் போக்கு மக்களிடையே ஆரம்பமானது

04. பிரித்தானியாவிலிருந்து சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் மாறுபட்ட மரபினை கொண்ட இலங்கைக்கு பிரித்தானிய முறைமையை அறிமுகப்படுத்தியமையானது பிற்காலங்களில் பல பிரச்சினைகள் தோன்றுவதற்கு வழி வகுத்தது.

05. இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையால் வடக்குக் கிழக்கில் பெரும்பாண்மையாக வாழ்ந்த தமிழர்கள் இலங்கை மட்டத்தில் சிறுபான்மை ஆக்கப்பட்டனர்.

06. கட்டற்ற வர்த்தகத்தின் அறிமுகத்தினால் இந்திய வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். இவர்களின் வளர்ச்சி சுதேச வர்த்தகர்களுக்கும், இந்திய வர்த்தகர்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியது.

07. புதிய நிர்வாக முறையினால் மரபு ரீதியாக பின்பற்றப்பட்ட கிராமிய நிர்வாக முறைமைகள் புறக்கணிக்கப்பட்டன.

### கோல்புறூக் சீர்திருத்தத்தின் விளைவுகள்

01. ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி நிறுவங்கள் அறிமுகப்படுதுத்தப்பட்டமை.
02. மானிய முறை ஒழிப்பு, சுதந்திரமான உழைப்புச் சந்தை ஆரம்பம், வர்த்தகப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகம்.
03. தடைகளற்ற பொருளாதார முறையின் கீழ் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பங்களிப்பு
04. நகரங்கள் உருவானமை, நகரமயமாக்கலின் ஆரம்பம், கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத் தொடர்புகள் வீழ்ச்சியடைதல்
05. மேலைத்தேய கல்வி முறை அறிமுகம்
06. கல்வி கற்ற மத்திய வகுப்பினரின் தோற்றத்திற்கான அத்திவாரம் இடப்பட்டமை
07. புதிய நீதி நிறுவனங்கள் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டமை
08. சட்டத்தின் இறைமையுடன் கூடிய ஆட்சி முறையொன்றின் விருத்திக்குத் தேவையான அத்திவாரமிடப்படல்.

### கோல்புறூக் அரசியல் சீர்திருத்தங்களின் அரசியல், பொருவாதார, சமூக பெறுபேறுகள்.

01. ஜனநாயக ஆட்சி முறைக்கு இலங்கையைப் பழக்குவதற்குகான ஆரம்பம்
02. முதலாளித்துவப் பொருளாதாரத்துக்குள் இலங்கை பிரவேசிப்பதற்கான ஆரம்பம்
03. சுதந்திரமான சந்தைமுறையினால் சாதிமுறை வீழ்ச்சியின் ஆரம்பம்
04. வர்த்தக்கத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ வர்க்கம் உதயம்

05. மேலைத்தேய கல்வியின் ஊடாகத் தொழில்சார் சமூக வகுப்பு உதயம்.

06. உள்நாட்டுக் கைத்தொழில்கள் வீழச்சியடைந்தமை

07. மேலைத்தேயமயமாக்கலுக்கு உட்படபட்டமையினால் மரபுரீதியான இயல்புகள் விழ்ச்சியடைந்தமை

மேற்கூறிய காரணிகளின் ஒட்டுமொத்தமான விளைவான "தடைகளற்ற அரசியல் முறை" தாபிக்கப்பட்டமை.

**நவீன ஜனநாயக இலங்கைக்கான கோல்புறூக் சீர்திருத்தத்தின் பங்களிப்புக்கள்**

01. சட்டத்தின் வல்லாட்சி உருவாக்கப்பட்டது.

02. நீதித்துறை, நிர்வாகத்துறையிடம் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

03. நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறையின் அறிமுகம் (சட்டவக்கசபை, சட்டநிருபண சபையின் தோற்றம்)

04. அரசாங்கத்தின் துறைகள் தெளிவாக இனங்காணப்பட்டு அரசு, அரசாங்கம் என பிரித்தறிய முடிகின்றமை.

05. நிறைவேற்றுத்துறைக்கு நிதிக்கட்டுபாடு அதிகாரம் வழங்கப்பட்டது.

06. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோற்றமாக அமைகிறது.

07. நாடு முழுவதற்கும் பொதுவான நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

08. எல்லோருக்கும் பொதுவான சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

09. பிரதான நகரங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

10. குடியியல், சிறுகுற்றவியல் விசாரணைக்காக நீதவான் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

11. இலங்கைத் தேசியம் என்ற கருத்து உருவாக்கம் பெற்றது.

12. சிவில் சுதந்திரம் வழங்கப்பட்டது.

13. ஆள்பதியின் வரம்பில்லா அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

## 1.3.0 குறுமக்கலம் [1910 – 1912]

### 1.3.1 அரசியல் – நிர்வாகம்

- கோல்புறூக் அரசியல் யாப்பானது 1833 - 1910 வரை அதாவது 77 ஆண்டுகள் எந்தவித எதிர்ப்புமின்றி பெரியளவிலான மாற்றங்களின்றித் தொடர்ந்து வருவதைக் காணலாம். இக்கோல்புறூக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வியானது இலங்கையில் படித்த ஒரு மத்தியதரவர்க்கம் எழுச்சியுறக் காரணமாகியது.
- இம்மத்தியதர வர்க்கத்தில் தோட்டத் துரைமார்கள், வர்த்தகர்கள், சட்டவல்லுனர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் என்போர் உள்ளடங்குகின்றனர்.
- இம்மத்திய தரவர்க்கம் உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமெனும் கோரிக்கையை முன்வைத்தனர். இதன் விளைவாக குறுமக்கலம் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.
- இக்குறுமக்கலத்தின் சட்டசபையின் 21 உறுப்பினர்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது.

குறு மக்கலம் சட்டசபை
மொத்த எண்ணிக்கை (21)

- உத்தியோகப்பற்றுள்ளோர்(11)
  - இலங்கையின் இராணுவத் தளபதி (1)
  - குடியேற்றநாட்டுக்காரியதரிசி (1)
  - அரசாங்கசட்ட அதிபதி (1)
  - வருமானவரி அதிகாரி (1)
  - குடியேற்றநாட்டுக் தனாதிகாரி (1)
  - மேல்மாகாண அதிபர் (1)
  - மத்தியமாகாண அதிபர் (1)
  - தென்மாகாண அதிபர் (1)
  - பிரதான சிவில் வைத்தியர்
  - தேசாதிபதியால் நியமிக்கப்பட்டவர்(2)
- உத்தியோகப்பற்றற்றோர்(10)
  - நியமனம் (6)
    - கண்டிச் சிங்களவர் (1)
    - முஸ்லீம் (1)
    - கரை நாட்டுச் சிங்களவர் (2)
    - இலங்கைத் தமிழர் (2)
  - தேர்தல் மூலம் (4)
    - பறங்கியர் (1)
    - கல்வி கற்ற இலங்கையர் (1)
    - ஐரோப்பியர் (2)
      - கிராமப்புற ஐரோப்பியர் (1)
      - நகர்ப்புற ஐரோப்பியர் (1)

✠ இவ்வரசியல் சீர்திருத்தத்தின்படி சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 21ஆக அதிகரிக்கப்பட்டது. 11 உறுப்பினர்கள் உத்தியோகபற்றுள்ள அங்கத்தவர்களாகவும் 10 உறுப்பினர்கள் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாகவும் விளங்கினர். தேசாதிபதி உத்தியோகப் பற்றறற்வர்களில் 6 பேரை நியமித்தார். அதில்

இலங்கைத்தமிழர் - 2

கரையோரச் சிங்களவர் - 2

கண்டிச் சிங்களவர் - 1

முஸ்லீம் - 1

என்ற வகையில் இவர்கள் காணப்பட்டனர்.

✠ 4பேர் 5வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுள் படித்த இலங்கையர் பிரதிநிதியாக தேர்தல் மூலம் முதன் முதலாகத் தெரிவு செய்யப்பட்டவர். சேர் பொன் இராமநாதன் ஆவார்.

✠ நிறைவேற்றதிகாரம் குறுமக்கலத்தின் சட்டநிருபன சபையின் விசேட அம்சம். சிலர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதுவும் பிரதேச ரீதியாக நடாத்தப்பட்டமையானது இலங்கைத் தேசிய வாதிகளுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

✠ தேசாதிபதி பொறுப்புடையவராயினும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் ஏகமனதாகத் தீர்மானிப்பதை நாட்டின் நிர்வாகத்திற்கு அத்தியாவசியமென அரசாங்கம் அபிப்பிராயப் பட்டால் தடை செய்யலாகாது என்பது குடியேற்ற நாட்டுக் காரிய தரிசியினால் அனுமதிக்கப்பட்டது.

✠ தேசாதிபதி தொடர்ந்தும் சட்டஇணைப்பாளர் சபையின் உதவியினைப் பெற்றுவந்தார் அத்துடன் சட்டநிருபண சபையில் கடமையாற்றும் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களைச் சமாதானப்படுத்தி கருமமாற்றவேண்டியவராகவும் இருந்தார்.

✠ அரசின் முக்கியமான திணைக்களப் பொறுப்பாளர்களாக பிரித்தானிய உத்தியோகத்தவர்களே அங்கம் வகித்தனர்.

### 1.3.2 குறு - மக்கலம் சீர்திருத்தத்தில் தேர்தலும் வாக்குரிமையும்

- முதன்முதலாக இலங்கையில் நாடுதழுவிய ரீதியில் தேர்தல் முறை உருவாக்கப்பட்டது. இதனால் பிற்காலத்தில் எல்லா மக்களும் வாக்களிக்கக்கூடிய தேர்தல் முறை உருவாகுவதற்கு வித்திட்டது எனலாம்.
- இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறையினால் கற்றோர் குழாமிற்கான பிரதிநித்துவம் அரசியல் யாப்பின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.
- ஒரு குறித்த அளவிற்கு கல்வியறிவு பெரும்பாலும் ஆங்கில அறிவுடையோருக்கும் சொத்துடையவர்க்கும், ஆண்களிற்கும், உயர்சாதியினர்க்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அதாவது அக்கால இலங்கையின் மொத்த சனத்தொகையில் 4% மக்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. இது பிற்காலத்தில் வாக்குரிமையை விஸ்தரிப்பதற்குக் காரணமாகியதுடன் இனவாரிப் பிரதிநிதித்துவமும் தொடர்ந்து நீடித்து வரக் காரணமாகியது.
- படித்த இலங்கையர் தொகுதியின் பிரதிநிதித் தேர்தலில் 2ம் முறையாக 1916ல் நடைபெற்ற போதும் நாடு தழுவிய ரீதியில் சேர்.பொன் இராமநாதன் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

### 1.3.3 குறு - மக்கலம் அரசியற் சீர்திருத்தினால் ஏற்பட்ட சமூக மாற்றம்

- கல்வி கற்ற இலங்கையருக்கு இருந்த பிரதிநிதித்துவம் விரிவடைய வழிவகுத்தது. அத்துடன் சமூகத்தில் சுதேசிகளும் வலுவடைந்தனர். ஏனெனில் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்றவர்கள் அதிகரித்தமையாகும்.
- இதனால் கல்வி கற்ற உயர்குழாம் போராட்டங்களை முன்னெடுப்பதில் தீவிரமாகச் செயற்பட்டனர்.
- மத்திய தர வர்க்கம் ஒன்று இக்கால கட்டத்தில் வளர்ச்சிகண்டது அவர்கள் முறையே

  தோட்டத்துரைமார்கள், வர்த்தகர்கள்<br>
  சட்டவல்லுனர்கள், ஆசிரியர்கள்<br>
  வழக்கறிஞர்கள், மருத்துவர்கள்

- இம்மத்திய தரவர்க்கம் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொள்ளலாயிற்று. கூட்டங்கள், சங்கங்கள் என்பன தொடங்கப்பட்டதோடு விஞ்ஞாபனங்கள், மனுக்கள், வேண்டுகோள்கள் என்பன சீர்திருத்தம் கோரி குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு அடிக்கடி அனுப்பி வைத்தனர். இக் கிளர்ச்சிகள் இலங்கையில் தேசியம் என்ற ஒன்றை உருவாக்குவதற்கு வழி வகுத்தது எனலாம்.
- 1870 - 1915 இடைப்பட்ட காலத்தில் சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

- 1910இல் புகையிரத தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நிகழ்ந்தது.
- 1912ம் ஆண்டு முதல் பிரித்தானியரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த புதிய மதுவரிச் சட்டத்தால் மதுக்கடைகள் நாடுமுழுவதும் மலிந்தன. இதனால் கலால் இயக்கம் படித்த பௌத்த தலைவர்களால் கொண்டு நடாத்தப்பட்டது. பூரண சுதந்திரம் வேண்டி பகிஸ்கரிப்பும், வேலைநிறுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.
- A.E குணசிங்காவின் தலைமையில் "இளம் இலங்கையர் கழகம்" உருவாக்கப்பட்டது.
- இலங்கையின் தேசியத்துவம் போராட்டத்தில் முக்கிய பங்கைச் செலுத்தியவர்கள் அரசியல் திட்டவாதிகளாவர். இந்த அரசியல் திட்டவாதிகளிடம் தேசிய உணர்வு வளர்ச்சி கண்டது. இத் தேசிய உணர்வை வளர்ப்பதில் மது ஒழிப்பு இயக்கமும் பங்காற்றியுள்ளது.
- 1915ல் சிங்கள முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. இதில் D.S சேனநாயக்கா, சேர் பரன் ஜெயதிலக, W.A.D சில்வா முதலானவர்கள் கைது செய்யப்பட்டன. மேலும் இராணுவச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது.
- சேர் பொன் அருணாசலத்தை தலைமையாகக் கொண்ட யாழ்ப்பாணச் சங்கம் 1917ல் உருவாக்கப்பட்டது.
- 1919இல் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது. இத்தேசிய காங்கிரஸ் இவ் இலங்கை பூராகவுமுள்ள சங்கங்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டதாகும்.
- இக்காலத்தில் சேர் றிச்வேயின் சீர்திருத்தம் நவீன அரசுக்கு வித்திட்டது எனலாம். இக்காலத்தில் சிவில்சேவையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களில் தேச நிர்மாணப் பணிகள் இலங்கையில் நவீன அரசு தோன்ற ஏதுவாயிற்கு. வரி அறவிடுவதனையே பிரதான நோக்காகக் கொண்ட அரசு தற்பொழுது சமூக நலன்புரி தேசநிர்மாண வேலைகளில் ஈடுபட்டது. இதனால் மத்தியதர வர்க்கத்தினர் எண்ணிக்கை அதிகரித்தது.
- இதற்கு ஐரோப்பியர்களின் தாராண்மை வாதச் சிந்தனை பெரிதும் பங்காற்றியது.

### 1.3.4 குறு - மக்கலம் அரசியற் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றம்

- பெருந்தோட்டத்துறையில் அது சார்ந்த உப தொழில்கள் வளர்ச்சி கண்டது.
- மரபு ரீதியான கிராமிய விவசாயம் வளர்ச்சி கண்டது. பொது நிர்வாகத்திற்குரிய எல்லாத் திணைக்களங்களின் செலவுகள் அதிகரிக்கப்பட்டது.

✠ 1911ம் ஆண்டு வர்த்தகச் செழிப்பும் வாழ்க்கைச் சிறப்பும் பல வகையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

✠ பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தென்னம் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

✠ பொருட்கள் மீது வரி அறவிடப்பட்டன. இவை மக்கள் நலன் கருதி வரிகள் குறைக்கப்பட்டன. மதுவரிச் சட்டத்தால் மதுக்கடைகள் நாடுமுழுவதும் மலிந்தன.

✠ வரி நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

✠ போக்குவரத்துத் துறையில் பாரியளவு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அதாவது உள்நாட்டுப் போக்குவரத்துத் துறையில் 568 மைல் நீளமான புகைவண்டிப் பாதை அமைக்கப்பட்டதுடன் மேலும் 2914 மைல் நீளமாக வீதிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

✠ 1911ம் ஆண்டில் 193 முதற்தரமான வாடி வீடுகள் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டது.

✠ 1911ம் ஆண்டில் கொழும்பிலிருந்து எந்த ஊரையும் இரண்டு நாட்களுக்குள் சென்றடையக் கூடிய போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டிருந்தன.

✠ தொடர்பாடல், தந்தி, தொலைபேசி, தபால் போக்குவரத்து போன்றன முன்னேற்றம் கண்டுள்ளது.

✠ விவசாயத்துக்காக நீர்ப்பாசனம் வளரச்சி கண்டது.

✠ முதலாம் மகாயுத்தம் நடைபெற்ற காலத்தில் யுத்த நெருக்கடிகள் இலங்கையில் ஏற்படா விட்டாலும் விலைவாசிகள் அதிகமாக காணப்படலாயிற்று.

### 1.3.5 குறு - மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தின் நன்மைகள்

01. இதில் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறையும் கற்றோர் குழாமிற்கான பிரதிநிதித்துவமும் அரசியல் யாப்பின வளர்ச்சியைக் காட்டுவனவாக விளங்கின.

02. கற்றோர்குழாமின் அரசியல் பிரவேசம் அரசியல் இயக்கங்கள் உருவாக்கப்படுவதற்கும் அரசியல் சீர்திருத்த கோரிக்கைகள் இலங்கை மக்களின் சார்பில் தொடர்ச்சியாக முன் வைக்கப்படுவதற்கும் காரணங்களாக விளங்கின.

03. தோட்டப்புற ஐரோப்பியர் சார்பிலும், நகர்ப்புற ஐரோப்பியர் சார்பிலும் பிரதிநிதிகள் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டமையானது பெருந்தோட்டத் துறையும் அதுசார்ந்த உபதொழில்களும் வளரச்சி அடைவதற்குக் காரணங்களாக விளங்கின.

04. கோல்புறூக் சீர்திருத்தத்திலும் பார்க்க உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையானது சுதேசிகளின் வலுவினைப் பலப்படுத்துவதாக இருந்தது.

### 1.3.6 குறு - மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தின் குறைபாடுகள்

01. தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அனைவருக்கும் வழங்கப்படவில்லை கல்வி அறிவு உள்ளவர்களுக்கும், சொத்து உடையவர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. இவர்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 4% மாக மட்டுமே காணப்படனர்.
02. இவ்வரசியல் சீர்திருத்தத்தினாலும் தோட்டப்புற ஐரோப்பிய பிரதிநிதித்துவம், நகர்புற ஐரோப்பியர் பிரதிநிதித்துவம் என்பற்றினூடாக தோட்டத்துறையின் அபிவிருத்தியிலேயே கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. இதனால் உலர்வலய விவசாயத்துறை தொடர்சியாக புறக்கணிக்கப்பட்டதோடு கைத்தொழிற் துறைபற்றி எதுவித கவனமும் செலுத்தப்படவில்லை.
03. இவ்வரசியல் சீர்திருத்தத்திலும் தேசாதிபதி மேலான அதிகாரத்தைக் கொண்டவராகவே விளங்கினார். சட்ட ஆக்க விடயங்களில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் இவருக்கே இருந்தது.
04. சட்ட நிருபண சபையும், சட்டநிர்வாக சபையும் வேறு வேறான உறுப்பினர்களைக் கொண்டிருந்தமையினால் சட்டத்தை உருவாக்கு பவர்களுக்கு சட்டத்தை அமுல்படுத்துவதில் பங்கு இருக்கவில்லை.
05. படித்த இலங்கையர்களும் அவர்களது பிரதிநிதியும் மிதவாத அரசியலைப் பின்பற்றியதனால் அவர்கள் தீவிரமான நிலையில் இலங்கை சுதந்திர போராட்டத்தை நடத்த முன்வரவில்லை. இவர்கள் ஆதிக்கம் வாய்ந்த சக்திகளாக இருந்தமையால், பின்னர் தோற்றம் பெற்ற தீவிரவாதிகளினாலும் இவர்களை மீறி வளர முடியவில்லை. இதனால் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சுதந்திரப்போராட்டம் என்பது இலங்கையில் தோற்றம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை.

### நவீன ஜனநாயக இலங்கைக்கான குறு - மக்கலத்தின் பங்களிப்பு

01. தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமையானது பிற்காலத்தில் எல்லா மக்களும் வாக்களிக்கககூடிய தேர்தல் முறை உருவாகுவதற்குக் காரணமாக அமைந்தது.
02. படித்த இலங்கையர்களுக்கான பிரதிநிதித்துவம் இலங்கையர்களின் அரசியலில் அவர்களின் மேலாதிக்கத்தை கொண்டு வந்தது. இவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்கு சார்பானவர்களாக இருந்தமையாலும் மிதவாதிகளாக இருந்தமையாலும் இந்தியாவைப் போன்று ஒரு சுதந்திரப் போராட்டம் இலங்கையில் வளரமுடியவில்லை. எனினும் பிரதிநிதித்துவமும் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையும் இக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 1.4.0 மனிங் (தற்காலிகம்)

### 1.4.1 அறிமுகம்.

ஆள்பதி அண்டர்சன் 24.03.1918ல் இறக்க அதன் பின் பிரிகேடியர் ஜெனரல் ஹென்றி மனிங் ஆள்பதியாகக் கடமையேற்றார். இவர் தளபதியாக இருந்து படை நகர்த்திப் பெயர் பெற்றவர். மேற்கிந்தியத் தீவுகளில் ஆள்பதியாக இருந்து அனுபவம் பெற்றவர். 1818 செப்ரெம்பரில் இங்கு வந்த மனிங் குடியேற்ற மந்திரயாக இருந்த மில்னர் பிரபுவிடம் இலங்கை அரசியல் சம்பந்தமான முன்னறிவைப் பெற்று வந்தார்.

இக் காலகட்டத்தில் இலங்கை சீர்திருத்த சங்கம் (1917) இலங்கை தேசியசபை, இலங்கை தேசிய மகாசபை (1919) என்பன உருவாக்கப்பட்டிருந்தன.

தேசிய மகாசபையினர் இலங்கை சட்டசபையில் உடனடியாகத் திருத்தம் ஏற்படுதல் வேண்டும் எனக் கோரி குடியேற்ற மந்திரிக்குத் தந்தி மூலம் பின்வரும் விடயத்தை தெரிவித்தார்.

50 பிரதிநிதிகள் உள்ள சபை 4/5 பகுதியினர் ஆள்புல அமைப்பில் தெரிவு செய்தல், பரந்த முறையில் ஆண் பெண் வாக்குரிமை வழங்கல், 1/5 பகுதியினர் சிறிய சிறுபான்மைப் பிரதிநிதிகளும் உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவர்கள் இருத்தல், சபாநாயகர் சபைக்குத் தலைமை தாங்கல், வரவு செலவுத் திட்டத்தை சட்டசபை மட்டுப்படுத்தல், ஆள்பதியின் மந்திரிமார் சபை எனப்படும் சட்டநிர்வாக சபையில் உள்ளவர்களில் அரைப் பாங்கினராவது சட்டசபை அங்கத்தவரிலிருந்து தெரிவு செய்யப்படல், ஆள்பதி பிரித்தானிய பாராளுமன்ற யாப்பு முறைகளில் பாண்டித்தியமுள்ளவராய் இருத்தல், உள்ளூர் அலுவல்களில் இலங்கையருக்குப் பரிபூரண சுதந்திரப் போக்கு வழங்கப்படவும் வசதி செய்தல் வேண்டும்."

தேசிய மகாசபையின் தலைவரான அருணாசலம் அவர்கள் ஆள்பதி மனிங் ஊடாகக் குடியேற்ற மந்தியார் மில்னர் பிரபுவிற்குக் கோரிக்கை அனுப்பிவைத்தார்.

இக்காலத்தில் படித்த இலங்கையர் பிரதிநிதியாக இரண்டாம் முறையும் தெரிவு செய்யப்பட்ட இராமநாதன் அவர்களும் சட்டசபையில் திருத்தம் கோரி நீண்ட பிரேரணையை முன்வைத்தார்.

அத்துடன் கண்டிச் சிங்களவரும் இலங்கை வாழ் ஐரோப்பியரும் நினைவேட்டை அனுப்பியிருந்தனர்.

ஆள்பதி மனிங் அவர்களும் அந்தரங்க அறிக்கையைக் குடியேற்ற நாட்டு மந்திரியாருக்கு அனுப்பியிருந்தார்.

மனிங் அனுப்பிய அந்தரங்க அறிக்கையை அறியும் நோக்குடன் மில்னரிடம் இரு கோரிக்கைகளை முன்வைத்தார்

1. ஆள்பதி மனிங் அவர்களுடைய அறிக்கையை வெளியிடுதல்
2. இலங்கைப் பிரதியாளர் குழுவினரைச் சந்தித்துப் பேசுதல்

மில்னர் பிரபு இரண்டு கோரிக்கையையும் உடன் நிராகரித்தாலும் பின்னர் இலங்கை பிரதியாளர் குழுவைக் கண்டு பேசினார். அருணாசலம் அவர்கள் எடுத்துரைத்தவற்றை ஏற்று அரசியல் சீர்திருத்தம் செய்வதாக உடன்பட்டார். ஆனால் பிரத்தானிய மன்னன் அரசாங்கம் வெளியிட்ட அரசியல் சீர்திருத்தம் இலங்கையருக்கு மன நிறைவைக் கொடுக்கவில்லை.

**மனிங் அரசியல் சீர்திருத்தம் - 1921 (தற்காலிகம்)**

சட்டசபை (37உறுப்பினர்)

- உத்தியோக பற்றுள்ள அங்கத்தவர் (14)
- உத்தியோக பற்றற்ற அங்கத்தவர் (23)
  - வரையறுக்கப்பட்ட தேர்தல் மூலம் (16)
    - பிரதேச வாரியாக (11)
      - மேல்மாகாணம்(3)
      - ஏனைய 8 மாகாணத்திற்கும் ஒருவர் வீதம் (8)
    - இனவாரி (3)
      - ஐரோப்பியர்(2)
      - பறங்கியர்(1)
    - சங்கங்களிலிருந்து (2)
      - கரையோரதோட்ட உரிமையாளர் சங்கம் (1)
      - வர்த்தகசபை (1)
  - நியமனம் மூலம் (7)
    - அரசஉத்தியோகத்தர் அல்லாத விசேட பிரதிநிதித்துவம்
      - ஐரோப்பியர் 01
      - சிங்களவர் 01
      - இலங்கைத்தமிழர் 01
    - மலைநாட்டு சிங்களவர்(2)
    - இந்திய தமிழர் (1)
    - முஸ்லீம்(1)

இத்தற்காலிக அரசியல் திட்டத்தில்

✠ தொகுதிவாரியாக (பிரதேச) தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் கணிசமான அளவு இடம் பெற்றிருந்தனர்.

✠ இச் சட்டசபை முதன்முறையாக சிறுபான்மை அங்கத்தவர்களை கொண்டிருந்தது.

✠ நிர்வாக துறைக்கு முதன்முதலாக இலங்கையர் மூவர் நியமிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். அவ்வாறு இடம்பெற்றவர்களுள் ஒருவர் அம்பலவாணர் கனகசபையாவார். சட்ட சபையில் அரசாங்க சார்புள்ளோர் சிறுபான் மையினராக இருந்த காரணத்தினால் உத்தியோகப் பற்றற்றவர்களின் அரசியல் கொள்கைகளுக்கு விட்டுக் கொடுத்து தமது நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதொரு நிலையில் தேசாதிபதி இருந்தார்.

எனினும் தேசாதிபதியின் கரங்களிலேயே அரசியலதிகாரம் தொடர்ந்தும் இருந்து வந்தது. எவ்வாறெனில் ஒரு மசோதா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எனக்கூறி உத்தியோக அங்கத்தவர்களின் வாக்குகளுடன் மாத்திரம் அவர் அதனை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் பெற்றிருந்தார்.

மேலும் உத்தியோகப் பற்றற்றவர்களின் எண்ணிக்கை 23ஆக இருந்தபோது உண்மைநிலை அவ்வாறல்ல. எவ்வாறெனில் 14 உத்தியோக அங்கத்தவரோடு உத்தியோகப்பற்றற்ற ஐரோப்பியர் இருவரும் பறங்கியர் ஒருவரும், வர்த்தக சங்க பிரதிநிதியான ஐரோப்பியர் ஒருவரும், நியமன அங்கத்தவர் ஏழு பேரும் இணைந்தால் மொத்த அரசாங்கசார்புள்ளோர் 25பேரை தேசாதிபதி தம்பக்கம் இழுக்க கூடியவராக இருந்தார். எனவே உத்தியோகப்பற்றற்ற நிலைமை திருப்திகரமாக இருக்கவில்லை எனலாம்.

### 1.4.2 பிரதிநிதித்துவம்

வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் முறை ஓரளவு வரிவாக்கப்பட்டது. இங்கு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களில் 11பேர் பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேல் மகாணத்திலிருந்து 3பேரும் ஏனைய மகாணங்களிலிருந்து ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இது பிற்காலத்தில் தேர்தல் தொகுதிகளும், தேர்தல் மாவட்டங்களும் உருவாகக் காரணமாகியதுடன் பிரதேச அபிவிருத்திக்கும் தூண்டுதலாக அமைந்தது. அத்துடன் இனப்பிரச்சினை உருவாவதற்கும் காலாக அமைந்தது. மேலும் சங்கங்களுக்கு உறுப்புரிமை வழங்கப்பட்டது. இந்திய வம்சாவளியினருக்கும் உறுப்புரிமை வழங்கபபட்டது. அத்துடன் சட்டநிர்வாக சபையில் உத்தியோகபற்றற்ற அங்கத்தவர்களுக்கும் உறுப்புரிமை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1920ம் ஆண்டு திருத்தத்தின் பயனாக சிங்களவருக்கும் 13ஆசனங்களும் தமிழருக்கு 3ஆசனங்களும் கிடைத்தன. எனவே தமிழர் தேசிய மகாசபையை விட்டு விலகி தமக்கு சிங்களவரது ஆசனத் தொகையில் 2/3 பகுதியாகிலும் வழங்குமாறு கோரினர்.

இக் காலத்தில் வாக்குரிமை தொடர்ந்தும் 4% மக்களுக்கே உரியதாக இருந்தது.

### 1.4.3 இக்கால வேட்பாளர் ஒருவருக்கு இருக்கக்கூடிய தகுதிகள்

01. இலங்கையில் அரசாங்க உத்தியோகம் வகிக்கக்கூடாது.
02. 25 வயதிற்கு மேற்பட்டவராதல்
03. பிரித்தானிய குடியுரிமையுள்ளவராய் இருத்தல் வேண்டும்
04. ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேச வல்லவராயிருத்தல்
05. வாக்குரிமை பெற்றவராயிருத்தல்
06. தேர்தலுக்கு மூன்றாண்டுகள் முன்னதாகவாவது இலங்கையில் வசித்தவராக இருத்தல்
07. இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உட்படாதவராய் இருத்தல்
08. அரசாங்கத்திலிருந்து விலத்தப்பட்டவராகாது
09. வழக்கறிஞர் அவையில் இருந்து விலத்தப்பட்டவராக இருத்தலாகது
10. ஆண்டு தோறும் 1500ற்கு குறையாத வருமானம் அல்லது 6000/= பெறுமதியான ஆதனம் ஆண் பெயரிலோ அல்லது அவர் மனைவி பெயரிலோ இருத்தல்.

வேட்டபாளர் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டதும் மாட்சிமை தங்கிய பிரித்தானிய மன்னருக்கு விசுவாசமுள்ளவராகக் கடமையாற்றுவதாகச் சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

### 1.4.4 நிதிக்குழு

ஆள்பதி மனிங் அவர்களின் மாற்றத்தில் முக்கியமானது ஆள்பதி அவரக்ளுக்கு வரவு செலவு விபரங்களில் ஆலோசனை கூறுவதற்கு நிதிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது வரைகாலமும் இலங்கை வாழ் மக்களின் பிரதிநிதிகள் நிதிக்குழு இடம் பெறவில்லை. இத்திருத்தத்தில் நிதிக்குழுவில் முதன் முதலாக இலங்கைப் பிரதிநிதிகளில் ஓரிருவராவது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிதிக்குழுவில் ஒவ்வொரு துறைக்குமான வரவு செலவுத் திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. இந்நிலை பிற்காலத்தில் துறைசார்ந்த அமைச்சுக்கள் உருவாக்கத்திற்கும் மந்திமாரின் உருவாக்கத்திற்கும் வித்திட்டது.

### 1.4.5 மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் நன்மைகள்

01. உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டமையானது இலங்கையர்கள் அதிக அளவில் அரசியலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தது.
02. பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப் பட்டமையானது பிற்காலங்களில் தேர்தல் தொகுதிகளும் தேர்தல் மாவட்டங்களும் உருவாக காரணமாக இருந்ததோடு பிரதேச அபிவிருத்திகள் ஏற்படுவதற்கும் தூண்டுதல்களை கொடுத்திருந்தது.

03. சங்கங்களுக்கும் உறுப்புரிமை வழங்கப்பட்மையானது அவை சார்ந்த துறைகள் வளரச்சி அடைவதற்கு உதவியாக அமைந்தது.

04. இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமையானது அவர்களும் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை உருவாக்கியதோடு அவர்கள் மத்தியில் அபிவிருத்திகள் ஏற்படுவதற்கும் தூண்டுதல்களை கொடுத்தது.

05. சட்ட நிர்வாக சபையில் உத்தியோகபற்றற்ற அங்கத்தவர்களும் அங்கத்துவம் வழங்கப்பட்டமையானது பிற்காலங்களில் மந்திரிசபை அரசாங்க முறை ஏற்படுவதற்கு ஆரம்பமாக அமைந்தது. மந்திரி சபை அரசாங்க முறையில் சட்டங்களை உருவாக்குபவர்களே சட்டங்களை அமுல்படுத்துவதிலும் பங்கு பெறுகின்றனர்.

06. தேசாதிபதியின் அதிகாரம் சற்றுக் குறைய இலங்கையர் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பு சற்று கூடியது.

### 1.4.6 மனிங் அரசியல் திட்டத்தின் குறைபாடுகள்

01. பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப் பட்டமையால் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் வெகுவாக குறைந்துள்ளது என சிறுபான்மையினர் அவர்கள் சுட்டிக் காட்டினர்

02. சட்டசபையில் உத்தியோக பற்றற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதும் தேசாதிபதி தொடர்ந்தும் சட்டநிர்வாக விடயங்களில் அதிகாரம் வாய்ந்தவராக விளங்கினார்.

03. இலங்கை தேசிய காங்கிரசின் அபிலாசைகளை இவ் அரசியல் சீர்திருத்தம் பூர்த்தி செய்யவில்லை.

04. நிர்வாக அதிகாரத்தை பொறுத்த வரை உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் மூவருக்கு சட்டநிர்வாக சபையில் அங்கத்துவம் கொடுக்கப்பட்டபோதும் நிர்வாக அதிகாரத்தை பேணக்கூடிய அளவுக்கு போதுமானதாக இருக்கவில்லை. இதனால் தொடர்ந்தும் நிர்வாக அதிகாரம் பிரித்தானிய அரசின் கையிலேயே இருந்தது.

05. சகலருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை.

### 1.4.7 நவீன ஜனநாயக இலங்கைக்கு மனிங் சீர்திருத்தத்தின் பங்களிப்பு

01. சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட உப தலைவர் பதவியானது பிற்காலத்தில் சபாநாயகர் முறை தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது.

02. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் இனப்பிரச்சினை உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது.

## 1.5.0 மனிங் – டிவன்சயர் சீர்திருத்தம் (1924)

1921ம் ஆண்டின் சீர்திருத்தம் தொடர்பாக திருப்தி கொள்ளாத இலங்கையர்கள் கிளர்ச்சி செய்தனர். மேலும் ஜேம்ஸ் பீரிஸ், சீர்திருத்தக் கோரிக்கை ஒன்றினை முன் வைத்தார். இலங்கைச் சிறுபான்மைச் சமூகத்தினரும், இலங்கைத் தேசிய காங்கிரசும் திருத்தம் வேண்டுமென்ற விண்ணப்பத்தினை குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு அனுப்பி வைத்தனர்.

இந் நிலையில் ஆள்பதி மனிங் அவர்களும் ஓர் சீர்திருத்தத்தை முன் வைத்தார். இவ்வாறாக சீர்திருத்தக் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்ட போதும் ஆள்பதி மனிங் அவர்களின் திட்டத்தில் அக்கால கட்டத்தில் குடியேற்றக் காரியதரிசியாக இருந்த டிவன்சயர் பிரபு மாற்றங்களைச் செய்ய விரும்பவில்லை. எனினும் தேசிய மகா சபையினர் திருப்தி செய்யும் முகமாக சில சலுகைகளை முன் வைத்தார். அதுவே மனிங் - டிவன்சயர் திட்டம் என 1924ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

சட்டசபை 49பேர்

உத்தியோகபற்றுள்ள அங்கத்தவர் 12

1. உயர்இராணுவ அதிகாரி
2. குடியேற்றநாட்டுகாரியதரிசி
3. சட்டத்துறை நாயகம்
4. பொருளாளர்
5. வரிக்கட்டுப்பாட்டாளர்
6. பொதுசேவை உத்தியோகத்தர் 7பேர் (தேசாதிபதியால் நியமனம் செய்யப்பட்டவர்கள்)

உத்தியோகபற்றற்ற அங்கத்தவர் 37

பிரதேசவாரி தெரிவு (23) பேர்

சிங்களம் - 16
தமிழ் - 7

1. மேல்மாகாணம் 5
2. வடமாகாணம் 5
3. தென்மாகாணம் 3
4. மத்தியமாகாணம் 2
5. கிழக்கு மாகாணம் 2
6. வடமேல்மகாணம் 2
7. வடமத்திய மாகாணம் 1
8. ஊவா மாகாணம் 1
9. சப்பரகமுவமாகாணம் 2

இனவாரியான தெரிவு (6) பேர்

ஐரோப்பியர் 3
பறங்கியர் 2
மேல்மாகாணத் தமிழர் 1

நியமனம் (8) பேர்

முஸ்லீம் 3
இந்தியர் 2
சிறப்புப்பிரதிநிதி 3

இச் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சமாக உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் சட்டசபையில் அதிகமாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தேசாதிபதி சபைக்குத் தலைமை தாங்குவதை நிறுத்திக் கொள்ள சபையினரால் தெரிவு செய்யப்பட்ட உப தலைவரே சபையின் தலைவராகக் கடமையாற்றினார். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் சுதந்திரமாக விவாதிப்பதற்குரிய நிலைமையை தோற்றுவித்தல்.

அரசாங்கத்தின் சார்பில் 25 அங்கத்தவரும் இலங்கையில் தெரியப் பெற்றவர் சார்பில் 24 அங்கத்தவருமாய் இருந்தனர். இந்த இக்கட்டான நிலைமையில் தற்செயலாக அரசாங்க சார்பானவரில் ஒருவர் கூட்டத்திற்கு சமூகமளிக்காத நிலையில் இலங்கைப் பிரதிநிதிகள் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராகப் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற அச்சம் இருந்தது. எனவே தான் பிரித்தானியப் பேரரசின் பாதுகாப்பிற்காக இலங்கையின் ஆள்பதி அவர்களும் விசேடித்த "மறுப்பானை அதிகாரம்" (வீட்டோ அதிகாரம்) வழங்கப்பட்டது. இதன் மூலம் தனக்கு விருப்பமில்லாத சட்டங்களைத் தடுத்து வைக்கும் அதிகாரம் ஆள்பதிக்கு இருந்தது. மேலும் நாட்டு நலனுக்கு இன்றியமையாதவை என ஆள்பதி கருதும் மசோதாக்களை உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவரகளதும் நியமன அங்கத்தவர்களதும் சம்மதத்தோடு மட்டும் நிறைவேற்றக்கூடியவராக இருந்தார். இச் சந்தர்ப்பத்தில் இது பற்றிய அறிக்கையை குடியேற்ற நாட்டு காரியதரிசிக்கு அனுப்புதல் வேண்டும்.

### 1.5.1 பிரதிநிதித்துவமும் தேர்தலும்

இச் சீர்திருத்தத்தில் பிரதேச ரீதியான தெரிவு 11 இலிருந்து 23 ஆக அதிகரித்தது. 23 பேரில் 16பேர் சிங்கள மக்களில் இருந்தும் 7பேர் தமிழ் மக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இனவாரித் தெரிவு 3 பேரிலிருந்து 6பேராக அதிகரித்தது. இதில் மேல்மாகண தமிழர் பிரதிநிதி அருணாசலம் மகாதேவா ஆவார். பிரதேச வாரி பிரதிநிதித்துவமுறை அதிகரிக்கப்பட்டமையானது பல்வேறு பிரதேசங்களின் பிரச்சினைகளும் அப்பிரதேச மக்களது அபிலாசைகளும் அரசியல் அரங்கிற்கு கொண்டு வரப்பட்டது.

இங்கும் வாக்குரிமையானது மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையினர் வாக்குரிமை அற்றவராகவே இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### 1.5.2 நிதிக்குழு

இக்காலத்தில் வலுவுள்ள தாபனமாக நிதிக்குழு விளங்கியது. குடியேற்ற காரியதரிசி எனும் பிரதம செயலாளர் தலைமையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் சமூகத்தில் அக் கூட்டங்கள் நடைபெற்றன. அரசாங்கத்தின் அவசியமான அலுவல்களும் இன்றியமையாத விடயங்களும் அக் கூட்டத்திலேயே பேசப்படலாயின. பிரதம செயலாளர் பல அலுவல்களை நிதிகுழுவிலேயே கலந்தாலோசித்தார்.

சட்ட நிறைவேற்றுத் துறையில் அங்கத்தவராக இருந்த சேர் மாக்ஸ் பர்ணாந்து நிதிக்குழு தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார். ஆள்பதி அவர்கள் 1924ற்கு முன் சட்டநிர்வாக சபையைக் கலந்தாலோசித்தே அலுவல்களைச் செய்தார். அதன் பின்னர் நிதிக்குழுவை கலந்தாலோசித்தே அலுவல்களைச் செய்தார்.

உதாரணமாக 1924ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் சட்ட நிர்வாக சபையில் விவாதிக்கப்படவே இல்லை.

உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகளுக்கு படி வழங்கும் அலுவல்கள் நிதிக்குழுவிலேயே பேசப்பட்டது. மேலும் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தமது தொகுதிகளுக்கு பணம் ஒதுக்கும் அலுவல்கள் கூட நிதிக் குழுக்கூட்டங்களிலேயே பேசப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

### 1.5.3 மனிங் - டிவன்சயர் அரசியல் சீரத்திருத்தத்தின் நன்மைகள்

01. சட்டசபையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையானது சபையில் சுதேசிகளின் நிலையினை வலுவுள்ள ஒன்றாக மாற்றியது
02. பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அதிகரிக்கப்பட்டமையானது பல்வேறு பிரதேசங்களின் பிரச்சினைகளும் அபிலாசைகளும் அரசியல் அரங்கிற்கு கொண்டு வரப்படுவதற்கு வாய்ப்பாக அமைந்தது
03. இந்திய வம்சாவழியினரதும், முஸ்லீம்களினதும் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையானது அவர்களது பிரச்சினைகளும், அரசியல் அரங்கில் அதிக அளவில் பேசப்படுவதற்கான வாய்ப்பினை கொடுத்தது.
04. இலங்கை தமிழர்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க மேல் மாகாண தமிழ்ர்களுக்கு என ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை கொழும்பு நகர பகுதிகளில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களின் நலன்களை பேணுகின்ற ஒன்றாக அமைந்தது.

## மனிங் - டிவன்சயர் அரசியல் சீரத்திருத்தத்தின் குறைபாடுகள்

01. சட்டசபையில் உத்தியோக பற்றற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதும், தேசாதிபதிக்கு வழங்கப்பட்ட மறுப்பாணை அதிகாரமும், உத்தியோக பற்றுள்ள அங்கத்தவர்களினதும், நியமண அங்கத்தவர்களினதும் சம்மதத்தோடு மட்டும் சட்டங்களை இயற்றக்கூடிய தேசாதிபதியின் அதிகாரமும், தேசாதிபதியின் நிலையை வலுவுள்ள ஒன்றாக தொடர்ந்தும் தக்கவைத்திருந்தது.

02. சட்டங்களை இயற்றுபவர்களே சட்டங்களை அமுல்படுத்துவதிலும் பங்கு பற்றுதல் வேண்டும் என்ற இலங்கையர்களின் நீண்ட கால கோரிக்கை இவ் அரசியல் சீர்திருத்தத்தினாலும் முழுமையாக திருப்திப்படுத்த முடியவில்லை.

03. சட்ட நிர்வாக சபை தொடர்ந்தும் சட்ட சபைக்கு கட்டுப்படாத ஒன்றாகவே காணப்பட்டது.

04. இலங்கை தமிழர்களின் கோரிக்கையான சிங்கள பிரிதிநிதிகளில் 2/3 பங்காவது தமக்கு தரப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை.

05. வாக்குரிமை தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இதனால் இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையினர் வாக்குரிமை அற்றவர்களாகவே விளங்கினர். உண்மையில் அக்கால இலங்கை மக்களில் 4% மானவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது.

06. இவ் அரசியல் சீர்திருத்தம் இலங்கையர்களை இன ரீதியாக பிளவுபடுத்துவதில் வெற்றி பெற்றது.

### 1.5.4 நவீன ஜனநாயக இலங்கைக்கான மனிங் - டிவன்சயர் சீர்திருத்தின் பங்களிப்பு

01. மேல் மாகாண தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப் பட்டமையானது மேல் மாகாணத்துக்கென ஒரு தமிழர் அரசியலை தொடக்கி வைத்தது.

02. சபைக்கு தேசாதிபதி தலைமை தாங்குவதை நிறுத்திக் கொள்ள சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட உப தலைவர் சபைக்கு தலைமை தாங்கினார். இது பின்னர் சபாநாயகர் எனும் பதவி நிலைத்து நிற்க உதவியது.

03. அரசியல் சீர்திருத்தங்களில் சிறுபான்மை இனங்களின் நலன்களையும் பேணுதல் அல்லது சிறுபான்மையோரின் விடயத்தையும் பேணுதல் என்பதையும் தொடக்கி வைத்தது. பின்னர் வந்த அரசியல் திருத்தங்களில் சிறுபான்மையோர் பிரச்சினையும் முக்கியம் பெறத் தொடங்கியது.

### 1.5.5 தற்காலிக மனிங், மனிங் மற்றும் டிவன்சயர் யாப்புச் சீர்திருத்தத்தின் பொருளாதார மாற்றம்

- ஆள்பதிக்கு வரவு செலவு விபரங்களில் ஆலோசனை கூறுவதற்கு நிதிக்குழு ஒன்று இயங்கி வந்தது. ஆனால் அதில் இதுவரை காலமும் இலங்கைப் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. ஆனால் மனிங் சீர்திருத்த நிதிக்குழுவில் இலங்கைப் பிரதிநிதி ஒருவர் இடம் பெற முடிந்தது. அதனால் அவர்கள் வரவு செலவு விபரங்களைக் கண்காணிக்கக் கூடியதாயிருந்தது.
- இலங்கை தொழிலாளரின் நலன்களைப் பாதுகாத்து அவர்களுடைய நலன்விருத்தியை அதிகரித்து, அவரகளுடைய தொழில் வசதிகளைச் சீர்திருத்தி அவர்களுடைய அபிவிருத்திக்கு உதவுதலை நோக்கமாகக் கொண்டு இலங்கைத் தொழிலாளர் சேமாபிவிருத்திச் சங்கம் எனும் இலங்கையின் முதலாவது தொழிற்சங்கத்தை அருணாசலம் 1919ல் ஆரம்பித்தார்.
- அடுத்த ஆண்டு இச் சங்கத்தை விரிவாக்கி இலங்கைத் தொழிலாளர் கூட்டவை எனப் பெயரிட்டார். இதன் மூலம் தொழிலாளருக்கு ஏராளமான நன்மைகள் ஏற்பட்டன.
- 1926ல் தேயிலை ஆராய்ச்சிச்சாலை அமைக்கப்பட்டமை தேயிலை உற்பத்தியின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.
- புகைவண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டதால் வர்த்தகம் மேலும் அபிவிருத்தி கண்டது.
- ஆள்பதிக்கு முறிகளையும் பிணைகளையும் வீட்டாணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது.

உதாரணம் : நிறைவேற்று துறை ஆள்பதி அவர்களுக்கு அன்பளிப்போ, சலுகைப் பணமோ நிலமோ, வேறு வித தானமோ அளிக்க வழிவகுக்கும் முறி

### 1.5.6 மனிங் டிவென்சயர் அரசியல் திட்டத்தினால் ஏற்பட்ட சமூக மாற்றம்

- இலங்கை வானொலி நிலையம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.
- பொலிஸ்காரருக்குப் பயிற்சிக் கலாசாலை அமைக்கப்பட்டது.
- கொழும்பில் இலவச நூல்நிலையம் அமைக்கப்பட்டது.
- புகை வண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டன. இதனால் மக்களின் போக்குவரத்துத் தேவைகள் ஓரளவு சீர்செய்யப்பட்டன.
- மகா சபைகள் உருவாக்கப்பட்டன.
- பல்கலைக்கழக கல்லூரி 1921ல் கொழும்பில் உருவாக்கப்பட்டது.
- பொதுப் போக்குவரத்து விருத்தி ஏற்பட்டது வீதிகள் புதிதாக அமைக்கப்பட்டன.
- பொதுக்கல்வி விரிவாக்கப்பட்டது.

### 1.5.7 நிறைவேற்றுத்துறை

1921 மனிங் சீர்திருத்தத்தில் 14 உத்தியோக சார்புள்ள அங்கத்தவர்கள் இடம் பெற்றனர். 1924ல் 12உத்தியோக சார்புள்ளோர் இடம்பெற்றனர். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் தொகை அதிகரிக்கப்பட்டு உத்தியோகப் பற்றுள்ளோர் தொகை குறைக்கப்பட்டாலும் அவர்களே அதிகாரமும் பொறுப்பும் வாய்ந்தவராகக் காணப்பட்டனர். 14 உத்தியோக அங்கத்தவரோடு உத்தியோகப்ப பற்றற்ற ஐரோப்பியர் இருவரும் பறங்கியர் ஒருவரும், ஆங்கிலேயர் மயமான வர்த்தக சங்கப் பிரதிநிதியான ஐரோப்பியரும், நியமன அங்கத்தவர் ஏழு பேரும் சேர்ந்து கொண்டால், ஆள்பதியானவர் 25 பேரைத் தம்பக்கம் இழுக்கக்கூடியவராயிருந்தார்.

- ✠ யாதேனும் ஒன்றை அதிமுக்கியம் எனக்கூறி பதவி வழி உறுப்பினர்களைக் கொண்டே நிறைவேற்றும் உரிமை ஆள்பதிக்கிருந்தது.
- ✠ தேசாதிபதி சட்டசபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது நிறுத்தப்பட்டு உப தலைவரே தலைமை தாங்கினார். தனக்கு விரும்பாத சட்டங்களைத் தடுத்து வைக்கும் அதிகாரம் தேசாதிபதிக்கிருந்தது. அத்தோடு நாட்டு நலனுக்கு இன்றியமையாதவை என தேசாதிபதி கருதும் மசோதாக்களை உத்தியோக பற்றுள்ள அங்கத்தவர்களினதும், நியமன அங்கத்தவர்களினதும் சம்மதத்தோடு மட்டும் நிறைவேற்றக் கூடியவராக அவர் இருந்தார். இத்தகைய சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிக்கையை குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு அனுப்புதல் வேண்டும்.

## 1.6.0 1931 டொனமூர் அரசியல் திட்டம்

டொனமூர் அரசியல் திட்டம் கொண்டு வரப்படுவதற்கு பின்னணியில் பல காரணிகள் இருந்தன. 1924ல் நடைமுறைக்கு வந்த மனிங் - டிவன்சயர் அரசியல் சீர்திருத்தம் பல குறைபாடுகளைக் கொண்டதாக அமைந்தது. குறு மக்கலம் அரசியல் யாப்பில் நடைமுறையிலிருந்தது போல கல்வி, சொத்து அடிப்படையில் தொடர்ந்தும் 4% வரையறுக்கப்பட்ட வாக்குரிமையே மனிங் - டிவன்சயர் யாப்பிலும் நடைமுறையிலிருந்தது. இலங்கையர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரித்தானிய மாதிரியிலான பராளுமன்ற அராசங்கமுறை அறிமுகப் படுத்தப்படவில்லை. சிங்களத் தலைவர்களின் முழுமையான பிரதேசவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கை மனிங் டிவன்சயர் யாப்பில் நிறைவேற்றப் படவில்லை. இனவாரியான முறையும் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. கண்டிச் சிங்களவரின் சமஷ்டிக் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படவில்லை. சிறுபான்மை இனத்தவருக்குப் போதியளவிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் இவ் அரசியல் திட்டத்தில் இல்லாதிருந்தது. இனவாரிப் பிரதிநிதித்துவ முறை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

இக்காரணங்களால் பல்வேறு அமைப்புக்கள், தனியாட்கள் என்ற வகையில் 141பிரேரணைகள் டொனமூர் குழுவினரிடம் முன்வைக்கப்பட்டன. உதாரணம் 1926 இலங்கைத் தேசிய சங்கத்தின் முன்மொழிவுகள் இவ்வாறு இலங்கைத் தலைவர்கள் புதிய சீர்திருத்தங்கள் வேண்டிப் போராட்டம் நடத்தியதால் சேர்.ஹியூர்கிலிபட் தேசாதிபதி இவ்வரசியல் முறையை விமர்ச்சித்ததுடன் மாற்றியமைக்கப்பட வேண்டியதன் அவ்சியத்தை வலியுறுத்தினர்.

மேலும் சர்வதேச அரசியல் நிலைமைகளும் டொனமூர் சீர்திருத்தத்தின் வருகைக்குக் காரணமாய் அமைந்தன. பிரித்தானியாவில் தொழிற்கட்சி அதிகாரத்திற்கு வந்தமையால், அவர்கள் குடியேற்ற நாடுகள் தொடர்பில் பின்பற்றிய தாராள நடைமுறை, சோவியத் யூனியனில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியின் தாக்கம் அயல்நாடான இந்தியாவில் அரசியல் சீர்திருத்தம் வேண்டி மேற்கொண்ட போராட்டங்கள் அதனூடாகக் கிடைத்த வெற்றிகள் போன்ற துணைக் காரணிகளும் டொனமூர் யாப்பின் உருவாக்கத்திற்குக் காலாய் அமைந்தன.

இவ்வாறான காரணங்களினால் டொனமூர் பிரபு தலைமையிலான குழு 1927ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி இலங்கைக்கு வந்தது. இவர்கள் இலங்கையில் 1928 ஜனவரி 18ம் திகதி வரை தங்கியிருந்து இலங்கை நிலைமைகளை நேரடியாக அவதானித்து பல்வேறு பிரமுகர்களின்

அபிப்பிராயங்களைக் கேட்டு கலந்துரையாடி ஓர் அரசியல் திட்டத்தைச் சிபார்சு செய்தனர். இவ்வாறு 1931ம் ஆண்டு அமுலுக்கு வந்த டொனமூர் அரசியல் திட்டம் 1947ம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு அமுலுக்கு வரும் வரை நடைமுறையிலிருந்தது.

### 1.6.1 டொனமூர் அரசியல் திட்டத்தினமூலம் சட்டத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

- ✠ டொனமூர் அரசியல் திட்டத்தில் சட்டசபை, "அரசாங்க சபை" என அழைக்கப்பட்டது. கோல்புறூக் யாப்பிலும், தொடர்ந்து வந்த யாப்புக்களிலும் சட்டநிர்வாக சபை, சட்ட நிரூபணசபை எனவும் நிலவிவந்த இரு சபைகள் என்ற நிலைமாறி, அரசாங்க சபை என்ற ஓரங்க சட்டசபை ஏற்படுத்தப்பட்டது.
- ✠ கோல்புறூக் சிபார்சு செய்த சட்டசபை இலங்கையில் 1833 - 1931 வரை நடைமுறையிலிருந்தது. காலத்துக்குகாலம் 1889, 1910, 1920, 1924 முதலிய ஆண்டுகளில் ஏற்பட்ட சிற்சில சிறு மாற்றங்களை விட அந்த சட்டசபையின் அடிப்படையில் எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை. இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்குக் கட்டுப்பட்ட தேசாதிபதியும், அவருக்கு உதவியாக இந்த உத்தியோக சார்புள்ள அங்கத்தவர்களான ஆங்கிலேயருக்குமே எல்லாவிதமான அதிகாரங்களும் இருந்தன. அவர்கள் காலத்துக்குக் காலம் கட்டளைச் சட்டங்கள மூலம் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் அதிகரித்துக் கொண்டார்களே அல்லாமல் இலங்கையருக்கு ஆட்சியதிகாரத்தில் பரிச்சயம் பெறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. ஆனால் டொனமூர் அரசியல் யாப்பிலேயே சட்டசபை உறுப்பினர்களுக்கு சட்டவாக்கத்தில் மட்டுமன்றி, நிர்வாகத்திலும் பயிற்சி பெற வழி ஏற்பட்டது. ஆயினும் பிரதான துறைகளான சட்டம், நிர்வாகம், நீதி ஆகியன முறையே சட்ட, பிரதம, நிதிக் காரியதரிசிகளின் பொறுப்பில் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.
- ✠ 1833 - 1921 வரை தேசாதிபதியே சட்டசபைக் கூட்டங்களிற்குத் தலைமை தாங்கினார். இவர் மக்களால் தெரியப்படாத, மக்களுக்குப் பொறுப்புக்கூறத் தேவையில்லாத ஒருவராக விளங்கினார. மேலும் தேசாதிபதி முன் உறுப்பினர் தமது பிரச்சினைகளை சுதந்திரமாக விவாதிக்கும் நிலை இல்லாதிருந்தது. ஆனால் மனிங் டிவன்சயர் யாப்பிலும் தொடர்ந்து வந்த டொனமூர் யாப்பிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே தலைமை தாங்கினார்.
- ✠ 1833 கோல்புறூக் சீர்திருத்தத்திலிருந்து 1924 மனிங் டிவன்சயர் யாப்பு வரை சட்டசபையில் இனவாரியான தேர்தலின் மூலமும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் டொனமூரில் முழுமையாக பிரதேச வாரிப்

பிரதிநிதித்துவத்தின் மூலம் எளிய பெரும்பான்மைத் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இங்கு 61 உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இதில் 50 பேர் பிரதேச வாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். 8 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். 3பேர் பிரித்தானிய உத்தியோகத்தர்களாக காணப்பட்டனர். இவர்கள் முறையே பிரதம காரியதரிசி, சட்டக்காரியதரிசி, நிதிக்காரியதரிசி என்போராவார்.

✠ 1833 சீர்திருத்தத்திலிருந்து 1924 வரையான சீர்திருத்தங்களில் சட்டசபைக்கும், சட்ட நிறைவேற்று சபைக்கும் நேரடியான தொடர்பு காணப்படவில்லை. சட்ட சபையினர் சட்ட நிறைவேற்று சபையில் வேண்டிய அளவுக்குத் திருப்திகரமாகப் பிரதிநிதித்துவம் பெறமுடியாத நிலை இருந்தது. ஆனால் டொனமூர் அரசியல் திட்டத்தில் சட்டசபையும், நிர்வாக சபையும் இணைந்தே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 1.6.2 டொனமூர் அரசியற் சட்டசபை (அரசாங்க சபை) தொடர்பான விமர்சனம்

முன்னைய சட்டசபைகளை விட இறைமை படைத்ததாக அரசாங்க சபை காணப்பட்டது. சபை நடவடிக்கைகள் சபாநாயகரின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படக்கூடிய நிலை காணப்பட்டாலும் பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைந்தது. மேலும் அரசாங்க சபை சட்டவாக்கத்தில் போதிய இறைமையைக் கொண்டிருக்கவில்லை. சட்டங்களிற்கு தேசாதிபதி கையொப்பமிடுதல், சட்டங்களை நிராகரிக்கும் உரிமையை தேசாதிபதி கொண்டிருத்தல், அவசரகால நிலைகளில் சட்டவாக்க அதிகாரத்தைத் தேசாதிபதி தானே பொறுப்பெடுத்தல், சாதாரண காலங்களில் தேசாதிபதி அரசாங்க சபையின் அனுமதியுடன் தானே சட்டங்களை இயற்றுதல் என்பன அரசாங்க சபையின் சட்டவாக்க அதிகாரத்திற்கு தடையாக அமைந்தது. மேலும் மூன்று முக்கிய துறைகளும் அரசாங்க உத்தியோகத்தரின் பொறுப்பில் இருந்தமை மிகப் பெரிய குறைபாடாகும்.

### 1.6.3 நிறைவேற்றுத்துறை

1931ம் ஆண்டிற்கு முன்பு இருந்த சீர்திருத்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளை சீர் செய்யும் முகமாக டொனமூர் சீர்திருத்தம் முன்வைக்கப்பட்டது. நாட்டின் நிர்வாகத்தை நிர்வகிப்பதற்கு இதுவரை காலமும் தனியான நிறைவேற்றுத்துறை என்ற ஒன்று இருக்கவில்லை. பிற்காலத்தில் மந்திரிசபை ஆட்சி வலுப்பெறுவதற்கு டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாகக் குழு முறையும் மந்திரி சபையையும் குறிப்பிடலாம். ஏற்கனவே சட்டநிர்வாக சபை தொடர்ந்தும் சட்டசபைக்கு

கட்டுப்படாத ஒன்றாகவே காணப்பட்டது. உள்ளூர் நிர்வாகங்களில் இலங்கையர்களின் அரசியல் நிர்வாக பயிற்சி குறைவு என்பன கவனத்தில் கொண்டு இலங்கையருக்கு சுயாட்சி வழங்கப்படாமையும் இலங்கையர்களின் நிறைவேற்றுத்துறையில் இலங்கையர் பயிற்சி பெறுவதற்காகவும் சுதேசியர் பங்கு பற்றுவதற்காக நிர்வாகப் பயிற்சிக் கூடம் போலவே இம் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரித்தானியர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் வாழ்ந்த மக்கள் கல்வி அறிவு குறைந்தவர்களாக் காணப்பட்டனர். இதனால் அரசியல் அறிவும் இவர்களுக்குக் குறைவாகவே காணப்பட்டது. கல்வி அறிவையும் அரசியல் அறிவையும் சிறிது பெற்றிருந்த இலங்கையின் உயர்வர்க்கத்தினர் கூட சட்ட உருவாக்கத்தில் பங்கு பற்றினார்களே தவிர சட்ட நிர்வாகத்தில் அதிக அளவில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. இதனால் அரசியல் நிர்வாகத்தில் பயிற்சி குறைந்தவர்களாக் காணப்பட்டார்.

நிர்வாகக் குழுவாட்சி முறை

டொனமூர் சீர்திருத்தத்தில் 34ம் பிரிவு நிர்வாகக் குழுவாட்சி முறை பற்றிக் கூறுகின்றது. இலங்கை அரசியலில் ஈடுபாடு கொண்ட தலைவர்கள் சட்ட வாக்கத்திலோ நிர்வாகத்திலோ பயிற்சியற்றவர்களாக இருந்தனர். அரசாங்க முறைமைக்கு தேவையான கட்சிமுறை இலங்கையில் தோற்றம் பெறாமையும் ஆட்சி அதிகாரம் தொடர்பாக சிறுபான்மை இனத்தவர் அச்சம் கொண்டிருந்ததாலும் அரசியல் முறைமையில் ஓரளவுக்கேனும் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நிர்வாகக் குழுமுறையை சிபார்சு செய்தனர். எனினும் மேற்கூறிய குறைபாடுகளைத் தீர்க்கும் வகையிலும் மந்திரிசபை அரசாங்க முறைமையை நோக்கிய பயணத்திற்கு ஒரு ஆரம்பமாக இருக்கும் என்ற வகையில் நிர்வாகக் குழுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் படி அரசாங்க சபையில் 3 அரசாங்க காரியதரிசிகள் தவிர்ந்த 58 பேரும் இரகசிய வாக்களிப்பு மூலம் 7 குழுக்களாகப் பிரக்கப்பட்டனர். ஒவ்வொருகுழுவும் பெரும்பாலும் 8 அங்கத்தவரைக் கொண்டிருந்தது. ஆகக் குறைந்த உறுப்பினர் 6 ஆகவும் ஆகக் கூடிய உறுப்பினர் 9 ஆகவும் இருக்கவேண்டும் என யாப்பில் விதிக்கப்பட்டிருந்தது.



## நிர்வாக குழு முறையின் தோற்றத்திற்கான காரணங்கள்

01. நிர்வாகத்தில் இலங்கையில் வாழும் பல்வேறு இனங்களையும் பங்கு பெற வைத்தல்
02. நிர்வாகத்தில் இலங்கை அரசியல் தலைவர்களை பயிற்சி பெற வைத்தல்
03. அரசியல் கட்சி வளர்ச்சி அடையாத கட்டத்திற்கேற்ப நிர்வாகக் குழு முன்வைத்தல்
04. மக்களின் பிரதிநிதி அனைவரையும் நிர்வாகத்தில் பங்கு பெற வைத்தல்

போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குழுக்களுக்கும் துறைகள் ஒதுக்கப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறைகளின் பணிகள் தொடர்பாக சில முடிவுகளை எடுத்து அதன் தலைவரின் ஊடாக மந்திரி சபைக்கு அனுப்பி வைக்கப்படும். மந்திரிசபை குறித்த விடயம் சம்பந்தமாக ஆலோசனை நடாத்தி ஆத் தீர்மானத்தை நிறைவேற்றி அரசாங்க சபையில் சட்டமாக்குவதற்காக ஒப்படைக்கும் அரசாங்க சபை அதனை விவாதித்து வாக்கெடுப்பில் நிறைவேற்றி தேசாதிபதியின் அங்கீகாரம் பெற்று மீண்டும் குறிப்பிட்ட விடயம் நிர்வாகக் குழுவிடம் நடைமுறைப்படுத்துவதற்காக ஒப்படைக்கப்படும்.

நிர்வாகக்குழு→ மந்திரிகள்→ அரசாங்கசபை→தேசாதிபதி→ நிர்வாகக்குழு

## நிர்வாகக் குழுக்களின் பணிகள்

01. நிர்வாகக் குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகளினை மேற்பார்வை செய்தல்
02. அவ்வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள திணைக்களங்களை மேற்பார்வை செய்தல்
03. திணைக்களங்களுடைய வருடாந்த மற்றும் மேலதிக செலவுகளைத் தயாரித்தல்
04. திணைக்களங்களின் சில அதிகாரிகளை நியமித்தல் தொடர்பான விதந்துரைகளை வழங்குதல்
05. சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல்
06. திணைக்களத்திற்குரிய ஏனைய நிறைவேற்று மற்றும் நிர்வாக விடயங்களைக் கவனத்தில் எடுத்தல்

## நிர்வாகக்குழு முறையின் நன்மைகள்

01. அரசாங்கசபை உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியமை
02. சிறுபான்மை இனத்தவர்களும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

03. பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்களும் பல்வேறு கொள்கைகளை கொண்டவர்களும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது

04. இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கு அரசியல் நிர்வாகப் பயிற்சிக் கூடமாக நிர்வாகக் குழுமுறை விளங்கியது. இதில் பயிற்சி பெற்ற பலர் பிற்காலங்களில் சிறந்த நிர்வாகத் தலைவர்களாக விளங்கினர்.

உதாரணம் : இதில் விவசாய அமைச்சராக விளங்கிய D.S சேனநாயக்கா பிற்காலத்தில் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக பதவியேற்றார். உள்ளூராட்சி அமைச்சராக பதவி வகித்த S.W.R.D பண்டாரநாயக்கா பிற்காலத்தில் பிரதமராக பதவியேற்றார். இதில் உறுப்பினராக இருந்த G.G பொன்னம்பலம் பிற்காலத்தில் கைத்தொழில் அமைச்சாராகப் பதவியேற்றார். உறுப்பினராக இருந்த பிலிப் குணவர்த்தனா N.M பெரோராவும் பிற்காலத்தில் முறையே விவசாய அமைச்சராகவும் நிதியமைச்சராகவும் பதவி வகித்தனர்.

05. சட்டங்களை உருவாக்குபவர்களுக்கு சட்டங்களை அமுல் படுத்துவதில் பங்கு இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இந் நிர்வாக குழுமுறை நிறைவேற்றியது.

## நிர்வாகக் குழு முறையின் குறைபாடுகள்

01. முழு நிர்வாக பகுதிகளும் இலங்கையர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. முக்கியமான பல நிர்வாகப் பகுதிகள் மூன்றுகாரிய தரிசிகளிடமேயே ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தேவையில்லை. மூன்று அரசாங்க காரியதரிசிகளும் ஏனைய துறைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை உள்ளவர்களாகக் காணப்பட்டமை.

02. தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பலரின் கைகளில் (நிர்வாகக் குழுக்கள், மந்திரிசபை, அரசாங்கசபை, தேசாதிபதி) விடப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது.

03. சிறுபான்மை இனத்தவர்கள் போதிய பிரதிநிதித்துவத்தையும் பாதுகாப்பையும் இந் நிர்வாகக் குழுக்களின் மூலம் பெற்றுக் கொள்ள முடியவில்லை (அரசாங்க சபையின் சிறுபாண்மை இனத்தவர்கள் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெறாததனால் அதிலிருந்து அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவிலும் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியவில்லை.) இதனை விட நிர்வாகக்குழுவின் தலைவராக அல்லது மந்திரியாக சிறுபான்மை இனம் வரவேண்டுமாயின் பெரும்பான்மை இனத்தவர்களின் தயவிலேயே அது தங்கியிருந்தது.

உதாரணம் : 1931 தேர்தலின் பின் மந்திரிசபை அமைக்கப்பட்டபோது பெ. சுந்தரம் என்பவர் கைத்தொழில் அமைச்சராகவும் எச்.எம் மாக்கான் மாக்கார் என்பவர் போக்குவரத்து அமைச்சராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

04. நிர்வாகக்குழு முறையில் ஒரு சிறப்பான நிர்வாகத் துறைக்கு தேவையான கூட்டுப் பொறுப்பு என்பது காணப்படவில்லை.

## மந்திரி சபை

மந்திரி சபையின் ஆரம்பமாக டொனமூர் அரசியல்திட்ட மந்திரிசபை விளங்கியது. பிற்காலத்தில் அமைச்சரவைகளை தோற்றுவாயாக அமைந்தது. நிர்வாகக் குழுக்களின் தலைவர்கள் 7 பேரும் 3 அரசாங்க காரியதரிசிகளையும் உள்ளடக்கியதாக மந்திரி சபை காணப்பட்டது. பிரதம காரியதரிசி மந்திரிசபையின் தலைவராக விளங்கினார்.

மந்திரி சபையின் கூட்டங்கள் அதன் தலைவரால் கூட்டப்படும். நிர்வாகக் குழுக்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆய்வு செய்யப்பட்டு சட்டமாக உருவாக்குவதற்கு அரசாங்க சபைக்கு அனுப்பப்படும். அரசாங்க சபையில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்களை ஒழுங்குபடுத்தல் வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்தல் என்பனவும் மந்திரி சபையின் கடமைகளாகும்.

மந்திரி சபை தீர்மானங்களின் போது ஏதேனும் ஒரு திணைக்களத் தலைவரின் உதவி அவசியம் எனக் கருதின் அவரை அழைக்கும் அதிகாரத்தை மந்திரி சபை பெற்றிருந்தது. ஒரு நிர்வாக்க குழுவின் சாதாரண உறுப்பினரைத் தாண்டிச் செயற்படும் அதிகாரம் மந்திரிக்கு இல்லையாயினும் நிர்வாகக் குழுவில் இடம் பெறும் வாக்கெடுப்பின் போது சமநிலை ஏற்படுமாயின் தீர்மானிக்கும் வாக்கினை வழங்கும் உரிமையினை மந்திரி பெற்றிருந்தார். மேலும் திணைக்களத் தலைவர்களுக்கு கட்டளையிடும் அதிகாரமும் மந்திரி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் போது மட்டுமே அமைச்சர்களுடைய கூட்டுப்பொறுப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக ஒவ்வொரு மந்திரிமாரும் தமது திணைக்களத்தின் செலவு விபரங்களையும் வருமானக் கணக்கெடுப்புக்கள் போன்றவற்றையும் மந்திரி சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மந்திரி சபை அவற்றை பரிசீலணை செய்து வரவு செலவு திட்டத்தை தயாரித்த மந்திரிசபையில் உபதலைவரின் ஊடாக அரசாங்க சபையில் சமர்ப்பிக்கும். அரசாங்க சபை வரவு செலவு திட்டத்தில் திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து அதனை ஏற்றுக் கொள்ளும் அல்லது திருத்தங்கள் மாற்றங்கள் எதனையும் செய்யாது அப்படியே ஏற்றுக்கொள்ளும் அல்லது மந்திரிசபையின் புனர் ஆலோசனைக்காக திருப்பி அனுப்பும் அவ்வாறு ஒரு தடவை மட்டுமே திருப்பி அனுப்ப முடியும். புனர் ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட வரவு செலவுத் திட்டம் அரசாங்க சபைக்கு திரும்ப வரும் போது அரசாங்க சபை அதனை நிராகரித்து விட்டால் தேசாதிபதி அரசாங்க சபையைக் கலைத்து விடுவார்.

இம் மந்திரிசபையில் ஒரு மந்திரியால் கொண்டு வரப்படும் மசோதாவை மற்ற அமைச்சர் எதிர்த்துப் பேசுவதும் எதிர்த்து வாக்களிப்பதும் தாராளமாக இடம் பெறும். மந்திரிசபை திறம்பட இயங்குவதற்குத் தேவையான கூட்டுப்பொறுப்பு இல்லாது இருந்தமை இதிலிருந்து தெளிவாகின்றது.

உதாரணம் : 1932ம் ஆண்டு சம்பள நிர்ணய சபைப் பிரேரணை 1940ம் ஆண்டு கைத்தொழில் சம்பந்தமான பிரேரணை அரசாங்க சபையினால் நிராகரிக்கப்பட்ட போதும் மந்திரிசபை கலைக்கப்படவில்லை.

மந்திரி சபையில் காணப்பட்ட 3 அரசாங்க காரியதரிசிகள் ஒன்று சேர்ந்து ஒரே கருத்தை வெளியிடுவதும் மந்திரிசபைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு தாங்கள் கூடி ஆலோசனை செய்து முடிவுகளை எடுத்துக் கொள்வர்.

இம் மந்திரிகள் தொடர்பாக Q.C கொரியா என்பவர் குறிப்பிடும் போது “இவ் அரசாங்க காரியதரிசிகளான மந்திரிமாரின் போக்கு ஒரு மந்திரி சபை அமைப்புக்குள் இன்னொரு உப மந்திரி சபை அமைந்தது போல ஆகி விட்டது” என்றார்.

இம் மூன்று அரசாங்க காரியதரிசிகள் மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய தேவையிருக்கவில்லை தேசாதிபதிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருந்தனர். இவர்கள் மக்கள் நலனில் அக்கறை காட்டாது பிரித்தானிய நலன் பேணும் போக்கே காணப்பட்டது. இதனால் இவர்கள் பிரித்தானியாவின் காவல் நாய்கள் என இலங்கையர்களால் வர்ணிக்கப்பட்டனர்.

## மந்திரி சபையின் நன்மைகள்

01. இலங்கையர்கள் நீண்ட காலமாக மந்திரி சபை அரசாங்க முறையை கோரி வந்தனர்
02. மந்திரி சபை அரசாங்க முறை தொடர்பாக இலங்கையர்கள் பயிற்சி பெற முடிந்தது.
03. ஆரம்ப காலங்களில் அரசாங்ககாரியதரிசிகளுடன் மந்திரிமார் முரண்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் சுமுகமான உறவைப் பேணி தம்முடைய கருமங்களில் சிறந்த வகையில் ஆற்றக்கூடியவர்களாக இருந்தனர்.
04. பிற்காலங்களில் நிதிக் காரியதரிசியாக இலங்கையர் தெரிவு செய்யப்பட்டனர்.

## மந்திரி சபையின் குறைபாடுகள்

01. மக்களினால் தெரிவு செய்யபடாத தேசதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதம காரியதரிசி மந்திரி சபைக்குத் தலைமை தாங்கியது பொருத்தமானதாக அமையவில்லை.

02. மூன்று அரசாங்க காரியதரிசிகளிடமும் பொறுப்புடைய துறைகள் வழங்கப்பட்டமை மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு தடையாக இருந்தது. ஏனெனில் இவர்கள் மூவரும் மக்களால் தெரிவு செய்யப்படாது தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

03. முக்கியமான துறைகள் அர்சாங்க காரியதரிசிகளுக்கு வழங்கப் பட்டமையானது ஏனைய துறைகள் சுமுகமாக இயங்குவதற்கு தடையாக்க காணப்பட்டன.

04. கட்சி முறை காணப்படாமையும் மந்திரி சபைக்கு பிரதமர் தலைமை வகிக்காமையும் மந்திரி சபையானது கூட்டுப் பொறுப்புடன் செயற்படவில்லை.

05. மூன்று அரசாங்க காரியதரிசிகளும் மந்திரி சபைக்குள் ஓர் உப மந்திரி சபையாகத் தொழிற்பட்டமை மந்திரி சபையின் சுமுகமான இயக்கத்திற்கு தடையாக இருந்தது.

06. இம் மந்திரிசபையில் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு பெரிதளவில் அதிகாரம் இருக்கவில்லை. ஆனால் மக்களுக்கு பொறுபுக்கூறத் தேவையிலாலதவர்களுக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்படிருந்தது.

### 1.6.4 வாக்குரிமை

✠ 1912ல் குறா - மக்கலம் சீர்திருத்தத்தில் முதன் முறையாக தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இலங்கை மக்கள் அனைவருக்கும் வழங்கப்படவில்லை. சொத்துடையவர், கல்வியறிவுடையவர்களுக்கும் மட்டுமே அதாவது அன்றைய இலங்கை மக்களில் (4%) மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. 1931 சர்வஜன வாக்குரிமைக்கு இது ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது.

### சர்வஜன வாக்குரிமை - 1931

✠ சர்வஜன வாக்குரிமை என்பது டொனமூர் அரசியல் திட்டத்தில் பிரதானமானதும் முக்கியமானதுமான ஓர் அம்சம் ஆகும். இதன் படி 21 வயதுக்கு மேற்பட்ட இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

✠ இது பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகள் இலங்கைக்கே முதன் முதலாக வழங்கப்பட்டது. பிரித்தானியாவில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு சில

வருடங்களில் இலங்கைக்கு வழங்கப்பட்டது. இலங்கயின் பெரும்பான்மையான அரசியல் தலைவர்களும் அவர்களது இயக்கங்களும் எதிர்த்த போதும் கூட சர்வஜன வாக்குரிமை வழங்கியமை ஒரு புரட்சிகரமான அம்சம் ஆகும்.

## இலங்கையில் சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள்

01. இலங்கை மக்கள் சுதந்திர போராட்டத்தில் ஈடுபாடு காட்டாமல் தடுப்பதற்கு அவர்களை அரசியலுக்கு உள்வாங்க வேண்டியது அவசியமாக இருந்தது.
02. அரசியலுக்குள் தொழிலாளர்களை உள் வாங்கினால் இடதுசாரி சிந்தனைகளின் தாக்கத்திலிருந்து அவர்களை தடுக்கலாம் என ஆட்சியாளர் கருதினர்.
03. பிரித்தானியாவில் தொழிற்கட்சி ஆட்சியில் இருந்தமை
04. இலங்கையின் அரசாங்கம் உயர் குழாமிற்கு மட்டும் உரியதல்ல. இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் உரியதாகும். எனவே பொறுப்பாட்சியை ஏற்கனவே வாக்குரிமை பெற்றிருந்த 4% ஆன உயர் மக்களின் பிரதிநிதிகளிடத்தில் மட்டும் ஒப்படைக்க முடியாது. இதை மாற்ற ஒரே வழி சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்துவது எனவும் டொனமூர் கூறினார்.

## சர்வஜன வாக்குரிமைகளின் விளைவுகள்

### சாதகமான விளைவுகள்

01. மக்கள் நலன் பேணும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
    - அ. இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது
    - ஆ. தாய்மொழி போதனை மொழியாக ஆக்கப்பட்டது
    - இ. இலவச மருத்துவம் வழங்கப்பட்டது
    - ஈ. விவசாய மானியம் வழங்கப்பட்டது
    - உ. உணவு மானியம் வழங்கப்பட்டது
    - ஊ. விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

(சர்வஜனவாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் தலைவர்கள் மக்களினுடைய வாக்குகளைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்காக மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்)

02. தொழிலாளர் நலன் பேணும் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன.
    - அ. தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டம் (1934)
    - ஆ. தொழிற்சமாச கட்டளைச் சட்டம்
    - இ. காப்புச்சட்டம்

ஈ. சம்பள கட்டளைச் சட்டம்

உ. பிரசவ கால சகாயக் கட்டளைச் சட்டம்

ஊ. தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

03. சாதாரண மக்களின் அரசியல் அறிவு வளரச்சி அடைந்தமை

04. சாதாரண மக்களும் அரசியல் அரங்கிற்குக் கொண்டு வரப்பட்டமை

05. அரசியற் கட்சிகள் வளர்ச்சி அடைந்தமை,வளர்ச்சி அடைந்த அரசியல் கட்சிகள்

உதாரணம் :

1. லங்கா சமசமாஜக் கட்சி (L.S.S.P)
   கெல்வின் ஆர்.டி சில்வா
2. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (C.P)
3. ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P)

06. தொழிற்சங்கங்கள் வளர்ச்சி அடைந்தமை

**பாதகமான விளைவுகள்**

01. பொருளாதார சமத்துவம் இல்லாத நிலையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமையானது சாதாரண மக்களைவிட பொருளாதார ரீதியாக பலம் பெற்றவர்களுக்கே சாதகமாக அமைந்தது. இத்துடன் சாதாரண மக்களுக்குக் கிடைத்த அரசியல் உரிமையை அவர்கள் சுதந்திரமாக அனுபவிக்க முடியாத நிலையும் காணப்பட்டது.

02. அரசியல் அதிகாரம் தொடர்ந்தும் சொத்துள்ளவர்களின் கைகளிலேயே இருந்தது.

03. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமையானது சிறுபான்மை இனத்தவர்களைப் பொறுத்தவரையில் கூட பாதகமாகவே அமைந்தது. அரசியல் அதிகாரத்தைப் பொறுத்த வரை சிறுபான்மை இனத்தவர் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

## 1.6.5 தேர்தல் முறை

1910 குறுமக்கலம் சீர்திருத்தத்தில் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை முக்கிய அம்சமாகும். இச் சீர்திருத்தத்தின் மூலமாகவே முதன் முதலாக தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

டொனமூர் அரசியல் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையின் படி இலங்கை 50 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. சட்ட ஆக்கத்திற்குப் பொறுப்பாக அரசாங்கசபை காணப்பட்டது. இவ் அரசாங்க சபை உறுப்பினர்கள் 61பேரில் 50பேர் 5 வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் பொதுத் தேர்தலின் மூலம் தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் எளிய பெரும்பான்மை முறைத் தேர்தல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெறுபவர்கள் அரசாங்க சபையின் பிரதிநிதித்துவத்தைப் பெற்று கொள்வர். தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது மக்கள் தொகை, நிலப்பரப்பு என்பன கவனத்தில் எடுக்கப்பட்டன. பதவியின் இடைக்காலத்தில் வெற்றிடம் ஏற்படும் போது இடைத் தேர்தல் மூலம் அவை நிரப்பப்பட்டன.

அரசாங்க சபைக்கான முதலாவது தேர்தல் 1931ல் நடைபெற்றது. இத் தேர்தலில் D.S சேனநாயக்கா, டி.பி ஜயதிலகா, S.W.R.D பண்டாரநாயக்கா, C.W.W கன்னங்கரா, ஏ.ஈ ராஜபக்ஸ என்போர் ஏகமனதாக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். முதலாவது அரசாங்கசபை தேர்தலை யாழ்ப்பாண மக்கள் பகிஷ்கரித்தமையால் தேர்தல் அங்கு நடைபெறவில்லை. இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் 1934ல் 4 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது.

## பிரதிநிதித்துவம்

இலங்கையில் பிரதிநிதித்துவ முறை ஆரம்பிக்கப்பட்ட கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தில் இனவாரி பிரதிநிதித்துவ முறையே இடம் பெற்றிருந்தது. குறுமக்கலம் அரசியல் சீர்திருத்தத்திலும் இவ் முறையே தொடர்ந்து இருந்தது. 1920ம் ஆண்டு மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையோடு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1924ம் ஆண்டு சீர்திருத்தத்திலும் இந்நிலையே தொடர்ந்து இருந்தது. 1931ல் இனவாரிப் பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டது. டொனமூர் அரசியல் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இப்பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையின்படி இலங்கை 50தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டது.

## பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தின் நன்மைகள்

01. பிரதேச ரீதியாக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமையினால் பல்வேறு பிரதேசங்களும் அபிவிருத்தி அடைகின்ற வாய்ப்பு ஏற்பட்டது.
02. இப் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையினால் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் அரசியல் கருத்துக்களும் பிரதேச பிரச்சினைகளும் அரசியல் அரங்கிற்கு வரும் வாய்ப்பு ஏற்பட்டது.
03. மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான நெருக்கம் என்பது அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டது.
04. மக்கள் தங்களிடையே நெருக்கமாக வருகின்ற சூழ்நிலையையும் இம் முறை உருவாக்கியது. பிரதேச உறுப்பினர்கள் அனைவரும் ஒரு அரங்கில் கூடி விவாதிப்பதனாலும், தொடர்பு சாதனங்கள் அவற்றை வெளியிடுவதனாலும் இந் நெருக்கம் ஏற்படுகின்றது.

### பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் குறைபாடுகள்

01. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையானது பெரும்பாண்மை இனத்தவரின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை அதிகரித்தமையினால் அரசியல் அதிகாரமானது இயல்பாகவே பெரும்பான்மை இனத்தவர்களின் கைகளில் சென்றது. இது சிறுபான்மை இனத்தவரை 2ம் தர நிலைக்குத் தள்ளியதோடு இன முரண்பாட்டில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது.

02. பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையின் படி தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்ட போது சிறுபான்மை இனத்தவர்களினால் தமது விகிதாசாரத்திற்குரிய பிரதிநிதித்துவத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியவில்லை. குறிப்பாக முஸ்லீம்களும் இந்திய வம்சாவளியினரும் இதனால் மோசமாக பாதிக்கப்பட்டனர். இதனை 1931, 1936 தேர்தல் முடிவுகள் காட்டின.

03. இப்பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமே இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மை அடைவதற்கு ஒரு காரணமாக விளங்கியது.

இவ்வாறாக இனப்பிரச்சினை கூர்மை அடைய பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விளங்கினாலும் பிரதேச அபிவிருத்திக்கும் மக்களை அரசியலாட்சிகும் கொண்டு வருவதற்கு உதவியது எனலாம்.

### 1.6.6 டொனமூர் அரசியல் திட்டம் ஏற்படுத்திய அரசியல் மாற்றம்

கோல்புறூக் சீர்திருத்தின் கீழ் சட்டநிர்வாக சபை, சட்டசபை என ஆற்றிய அரசியல் கடமைகளை டொனமூர் யாப்பின் கீழ் அரசகழகம் ஆற்றுகின்றது. சட்டங்களை இயற்றுவதில் சட்டசபை முழுமையாகப் பங்கெடுக்கின்றது. நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பாக அரச கழகத்தில் அங்கம் வகிப்போரில் மூன்று காரியதரிசிகளான பிரதம காரியதரிசி, நிதிக்காரியதரிசி, சட்டக்காரியதரிசிகள் தவிர்ந்த ஏனைய ஐம்பத்தெட்டுப்பேரும் ஏழு குழுக்களாகப் பிரிந்து அக்குழுக்களின் தலைவர்களை ஏழு பேரும் மூன்று காரியதரிசிகளும் சேர்ந்து பத்து மந்திரிமார் இருப்பர். நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதில் நிர்வாகக் குழுக்களில் அங்கத்துவம் வகிக்கும் அனைவரும் பங்குபற்றினர். இந்த யாப்பு அரசியல் நிர்வாகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தேசாதிபதிக்கு அடுத்தபடியாக நாட்டின் பிரதான நிர்வாக அதிகார சபையாக இந்த அமைச்சர் (மந்திரி) சபை விளங்கியது.

இவ் அமைச்சரவை பிரித்தானிய அமைச்சரவை போன்ற ஒத்த அரசியல் கருத்துக்களைக் கொண்ட சபையன்று இது சட்டசபைக்கோ அல்லது நாட்டுக்கோ கூட்டாகப் பொறுப்புடையதுமன்று.

பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட சுதேச பிரதிநிதிகளுக்கு விரிந்தளவில் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டமை அரசியல் ரீதியில் பாரிய

மாற்றமாகும். ஏனெனில் இதுவரை கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் உத்தியோகப்பற்றுள்ள பிரித்தானிய சார்புடையவர்களே பெரும்பாலும் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுள்ளனர். இங்கு முக்கிய மூன்று துறைகள் மூன்று அரச உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும் ஏனைய ஏழு துறைகளும் சுதேசிகளான ஏழு மந்திரிகளிடம் ஒப்படைக்கப்பட்டமை அரசியல் சமூக விழிப்புணர்வு ஏற்பட்டு சுதந்திரம் பெறுவதற்கான பாதை வேகப்படுத்தப்பட்டது. சுதேசிகளின் கைகளுக்கு நிர்வாகப் பொறுப்பு மாற்றமுறுதல் முதல் படியாக அமைந்தது.

இதுமாத்திரமல்லாது சட்டசபையிலுள்ள அனைவரும் அரசியல் நிர்வாகத்தில் பங்குபற்றும் வாய்ப்பு இவ் யாப்பினூடாக கிடைத்துள்ளது. ஏனெனில் நிர்வாக விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் நிர்வாகக் குழுவிலுள்ள அனைத்துப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவதால் எதிர்காலத்தில் பல அரசியல் மாற்றங்களுக்குக் காரணமாயிருந்தன. நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்தபலர் எதிர்காலத்தில் அமைச்சர்களாகவும் நாட்டுத் தலைவர்களாகவும் வர இது ஒரு பயிற்சிக் கூடமாக இருந்தது.

ஒத்த கருத்துடைய மந்திரிசபை டொனமூர் யாப்பில் செயற்படாமையால் பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகளால் பல பிரச்சினைகள் உருவாகின. இது கட்சிமுறை தோற்றம் பெறுவதறகு வழிவகுத்தது. சோல்பரி யாப்பில் கட்சி முறையிலமைந்த மந்திரிசபை உருவாகுவதற்கு டொனமூர் யாப்பு காரணமாயிருந்தது.

அரசாங்க திணைக்களங்கள் யாவும் இதுவரை குடியேற்ற அலுவலாளர் எனப்படும் பிரதம காரியதரியின் கண்காணிப்பில் நடைபெற்ற முறை மாற்றியமைக்கப்பட்டு பத்து பேரின் பொறுப்பில் விடப்பட்டது.

இது வரை குடியேற்ற அலுவலாளர் என வழங்கிய உத்தியோகத்தர் டொனமூர் யாப்பின்படி பிரதம காரியதரிசி என மாற்றப்பட்டார். சட்டத்துறை நாயகம் சட்டக்காரியதரிசியாகவும் திறைசேரி நாயகம் நிதிக்காரியதரிசியாகவும் மாற்றப்பட்டனர்.

பிரதேசங்களில் பிரதிநிதித்துவம் மூலம் அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வசதி செய்தது. அத்துடன் இது ஜனநாயக ஆட்சிக்கு வித்திட்ட ஒன்றாகவும் உள்ளது.

ஓரினத்திற்கு ஒருவித பிரதிநிதித்துவம் என்ற முறை நீக்கப்பட்டு எல்லோருக்கும் ஒரேவித வாக்குரிமையும் பிரதிநிதித்துவம் வழங்கும் முறை ஏற்பட்டது.

அரசியல்வாதிகளின் இருப்பு பொதுமக்களில் தங்கியிருக்கும் ஒன்றாக மாற்றமுற்றது.

கிராமப்புற மக்கள் அரசியலில் பங்கு பற்றுவதன் பொருட்டு உள்ளூராட்சி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. (கிராம பட்டின, நகர, மாநகர)

### 1.6.7 டொனமூர் அரசியல் திட்டம் ஏற்படுத்திய சமூகமாற்றம்

சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை சமூகத்தில் பலமாற்றங்களை உருவாக்கியது. முதன் முதலாக குறுமக்கலம் யாப்பில் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட வாக்குரிமையால் நாட்டில் 4% மான மக்களே வாக்குரிமை பெற்றனர். அவர்களின் வாக்குரிமையைப் பெறுவதற்காக அவர்களின் தேவைகளே கவனத்தில் எடுக்கப்பட்டன. சர்வஜன வாக்குரிமை வழங்கல் என்பது பற்றி பல்வேறு கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் இறுதியில் டொனமூர் ஆணைக்குழு சர்வஜன வாக்குரிமை வழங்குவதற்குப் பலகாரணங்களை முன்வைத்து வழங்கியமையால் நாட்டில்

- ✠ அரசியலில் மக்கள் பங்குபற்றும் அளவு அதிகரித்துள்ளது.
- ✠ கட்சிகள் தோன்றி வளரச்சியடைக் காரணமாயிருந்தது
- ✠ கட்சிகளூடாக மக்கள் அரசியல் அறிவைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.
- ✠ பல்வேறு சமூக மக்களின் தேவைகள் கவனிக்கப்படுமிடத்து அச் சமூகம் வளர்ச்சியடையக் காரணமாயிருந்தது.
- ✠ பெண்கள் சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாக மாறினர். இதுவரை பெண்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை
- ✠ சிறுபான்மை இனங்கள் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு அதிகரித்தது.
- ✠ கட்டாய இலவசக் கல்வி, இலவச வைத்திய வசதி, சமூகசேவை உதவி, தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் தொழிற்சங்கங்கள் உருவாக்கம் என்பன ஏற்பட்டன.

சேர்.பொன் அருணாசலம் அவர்கள் கண்ட கனவாக இலங்கைக்கான சர்வகலாசாலை 1942ல் தோற்றம் பெற்றது.

மக்கள் உரிமைகள் கடமைகள் என்பவற்றை அறியும் தன்மை பெற்றனர்.

சமூக நலன் தொடர்பான செலவுகள் அதிகரித்தமை (கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு)

டொனமூர் யாப்பிற்கு முற்பட்ட காலத்தில் சமூகத்தில் உயர் அந்தஸ்து பெற்றவர்கள் அதாவது கல்வியறிவும் பெருந்தொகையான சொத்துக்களும் உடையவர்களே பிரதிநிதிகளாக அங்கம் வகிக்கும் சந்தரப்பம் ஏற்பட்டது. நாட்டில் மத்திய தரவர்க்கம் உருவாவதற்குச் சாதகமாயிருந்த காரணங்களுடன் சர்வஜன வாக்குரிமையும் இணைந்தமை மத்தியதர வர்க்கம் அரசியலில் ஈடுபடவும் பிரதிநிதித்துவத்தைப் பெறவும் வழிசெய்தது. இது உயர் குழாமிடமிருந்து பிரதிநிதித்துவம் சாதாரண மக்களைச் சென்றடையச் செய்தது.

இவர்களுக்கான உதவித் தொகை மாதாந்தம் 500 ரூபா ஆகும். இது அவர்களின் மிகக் குறைந்த செலவுகளை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. பலருக்கு அரசியல் வாழ்வு பெரு நட்டமாகவும் காணப்பட்டது.

### 1.6.8 டொனமூர் அரசியல் திட்டம் ஏற்படுத்திய பொருளாதார மாற்றம்

- ✠ சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் மூலம் தொழிலாளர் நலன் பேணப்பட்டது. தொழிலாளர் நலன் பேணும் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. தொழிற்சங்கங்கள் வளர்ச்சி அடைந்தன. தொழிற்சங்கங்கள் ஊடாகத் தமது சட்டரீதியான உரிமைகளாக வேலைநேரம், விடுமுறை (லீவு) வேலைத்தள வசதி, வேலைசெய்யும் பெண்களுக்கான வசதிகள் (பிரசவ விடுமுறை) என்பவற்றைப் பெற வழிசெய்தது.
- ✠ வர்த்தக மந்தம், வரட்சி, விளைவின்மை, மலேரியா நோய் தாக்கம், இரண்டாவது மகாயுத்த விளைவு என்பன நாட்டை நலிவுறச் செய்தது. அரசாங்கம் வைத்தியச்செலவு, சமூகச் செலவு என்பவற்றிற்குக் கூடுதலான பணத்தைச் செலவிட்டது.
- ✠ கைத்தொழில் சம்பந்தமான சட்டவாக்கங்கள் உருவாகின.
- ✠ பெரிய அளவில் நீர்ப்பாசனத் திட்டங்கள், விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவது விவசாய மந்திரியாக D.S சேனநாயக்கா கடமையாற்றினார். விற்பனை வசதிகள், சந்தைப்படுத்தும் சகாயங்கள் ஆகிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ✠ விவசாயம், கைத்தொழில் துறைகளில் இலங்கையரை ஊக்குவிப்பதற்கான மூலதன உதவிகள், கடனுதவிகள் என்பன வழங்கப்பட்டன. இது பிற்காலத்தில் கைத்தொழில் துறை வளரச்சியடைவும் முதலாளித்துவ பொருளாதாரத்தை நோக்கி நாடு சென்றடையவும் வழிவகுத்தது.
- ✠ வங்கிகளும் நிறுவனங்களும் உருவாகப்பட்டமையால் மக்கள் வர்த்தக வாணிப நடவடிக்கைகளில் அதிகமாக ஈடுபட்டனர்.

### 1.6.9 டொனமூர் அரசியல் திட்டத்தின் குறைபாடுகள்

01. சர்வஜன வாக்குரிமை அறிமுகம் அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்தியதே ஒழிய, பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தவில்லை. அதாவது இது பொருளாதார ரீதியாக பலம் பெற்றவர்களுக்கே சாதகமாக அமைந்தது.
02. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இது சிறுபான்மை இனத்தவர்களை 2ம் தர நிலைக்குத் தள்ளியதோடு, இன முரண்பாடு பிற்காலத்தில் கூர்மையடையவும் வழி சமைத்தது.

03. டொனமூர் சட்டசபை (அரசாங்கசபை) போதிய இறைமையைக் கொண்டிருக்கவில்லை. மூன்று அரசாங்க காரியதரிசிகளிடமும் பிரதான துறைகள் இருந்தமையால் சுதேசிகள் அதிகாரமும், பொறுப்பும்அற்ற ஒரு நிலையிலேயே இருந்தனர்.

04. தேசாதிபதியிடம் இருந்த மறுப்பாணை அதிகாரம் அரசாங்க சபையின் இறைமையைப் பாதிப்பதாயிருந்தது.

05. முஸ்லீம்கள் இந்திய வம்சாவழியினர் போன்ற சிறுபான்மையினர் தமது விகிதாசாரத்திற்கு ஏற்ற அங்கத்துவத்தைக் கூட அரசாங்க சபையில் பெற்றுக் கொள் முடியாமல் இருந்தன.

06. முழுநிர்வாகப் பகுதிகளும் இலங்கையர்களிடம் ஒப்படைக்கப் படவில்லை. மூன்று அரசாங்க காரியதரிசிகளிடமே பிரதான துறைகள் இருந்தன. அவர்கள் மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாக இல்லா நிலை காணப்பட்டது.

07. தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பலரின் கைகளில் விடப்பட்டதால் வீணான காலதாமதங்கள் ஏற்பட்டன.

08. நிர்வாகக் குழுமுறையில் ஒரு சிறப்பான நிர்வாகத் துறைக்குத் தேவையான கூட்டுப்பொறுப்பு என்பது காணப்படவில்லை

09. மக்களினால் தெரிவு செய்யப்படாத தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட பிரதம காரியதரிசி மந்திரிசபைக்குத் தலைமை தாங்கியமை பொருத்தமான் ஒன்றாக அமையவில்லை.

10. மூன்று காரியதரிசிகளிடமும் பொறுப்புடைய துறைகள் வழங்கப்பட்டமை மக்களாட்சிக் கோட்பாட்டிற்குத் தடையாகவே அமைந்தது.

11. மூன்று காரியதரிசிகளும் மந்திரி சபைக்குள் ஓர் உபமந்திரி சபையாக தொழிற்பட்டமை மந்திரி சபையின் சுமுகமான இயக்கத்திற்குத் தடையாக அமைந்தது.

12. பொறுப்புள்ள இடத்தில் அதிகாரம் இருக்கவில்லை. அதிகாரம் இருந்த இடத்தில் பொறுப்பிருக்கவில்லை

### 1.6.10 டொனமூர் அரசியல் திட்டம் நவீன ஜனநாயக இலங்கைக்கு பங்களிப்பு செய்தவிதம்

01. சர்வஜன வாக்குரிமை அறிமுகத்தால் மக்கள் மத்தியில் அரசியலறிவு, அரசியல் விழிப்புணர்ச்சி, அரசியல் ஈடுபாடு என்பன ஏற்பட்டன. இதன் மூலம் மக்களை ஜனநாயக முறைகுப் பழக்கப்படுத்துவதில் டொனமூரின் பங்களிப்பு முக்கியமானது

02. டொனமூர் அரசியல் திட்டத்தின மூலம் அதாவது சர்வஜன வாக்குரிமை மூலம் மறைமுகமாக அரசியற் கட்சிகள் தோன்றுவதற்கு வழி ஏற்பட்டது.
உதாரணம் : லங்கா சமசமாஜக் கட்சி (1935)
ஐக்கிய தேசியகட்சி (1946)

03. நிர்வாகக்குழு முறையானது இலங்கையருக்கு அரசியல் நிர்வாகப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்ததோடு, சிறந்த அரசியல் தலைமைத்துவம் பிற்காலத்தில் உருவாகவும் வழி செய்தது.
உதாரணம் : S.W.R.D பண்டாரநாயக்கா

04. டொனமூர் அரசியல் திட்டம், இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு மைக்கல்லாக வர்ணிக்கப்படுவதோடு அதில் வழங்கப்பட்ட 7/10 பொறுப்பாட்சி இலங்கையில் பாராளுமன்ற அரசாங்க முறையின் விருத்திக்கு வித்திட்டது.

05. வாக்குரிமையின் விஸ்தரிப்பால் தொழிலாளர் சார்பாகயும், பொதுமக்கள் சார்பாவும் பல சமூக நலன்பேண் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
உதாரணம் : தொழிலாளர் கட்டளைச்சட்டம், தொழிலாளருக்கு போனஸ் வழங்குதல், தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம்

06. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமானது பிரதேச அபிவிருத்திக்கு வித்திட்டது.

### டொனமூர் அரசியல் திட்டத்தின் சாதகமான அம்சங்கள்

01. இலங்கையருக்கு 7/10 பொறுப்பாட்சி வழங்கப்பட்டது.
02. இலங்கையருக்கு சட்டநிர்வாக நடவடிக்கைகளில் பங்குபற்றசந் சந்தரப்பம் கிடைத்தது
03. சர்வஜன வாக்குரிமை மூலம் மக்கள் நலன்பேணும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
04. தொழிலாளர் நலன்பேணம் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன.
05. அரசியற்கட்சிகள் வளர்ச்சி கண்டன.
06. தொழிற்ச்சங்கங்கள் வளர்ச்சி கண்டன.
07. சர்வஜ வாக்குரிமை மூலம் அனைத்து மக்களும் அரசியலுக்குள் உள்வாங்கப்பட்டனர்
08. பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தின் மூலம் பிரதேசப் பிரச்சினைகள் அரசியல் அரங்கிற்குக் கொண்டுவரப்பட்டன.
09. அரசாங்கசபை உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.
10. மந்திரி சபை அரசாங்கமுறை தொடர்பாக இலங்கையர் பயிற்சி பெற முடிந்தது.

# இலங்கையில் பிரித்தானிய குடியேற்றாட்சி காலத்தின் பொதுத்துறை, நீதித்துறை மற்றும் உள்ளூராட்சித் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

## இலங்கையில் பிரித்தானிய குடியேற்றாட்சி காலத்தில் பொதுத்துறை, நீதித்துறை மற்றும் உள்ளூராட்சித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

### 2.1 1833 இன் பின் இலங்கையின் பொதுத்துறை நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

கோல்புறூக் கமெரன் சீர்திருத்தத்தின் பிற்பாடு அரசாட்சியில் இருந்து பொதுநிர்வாகம் வேறொரு துறையாக முகிழ்ந்தெழுந்தது. பிரித்தானியர் தமது நாட்டிலிருக்கும் சிவில் சேவையைப் போலவே வினைத்திறன், விளைதிறன் மிக்க சிவில் சேவையை அறிமுகம் செய்தனர்.

கோல்புறூக் கமெரன் சீர்திருத்தத்திற்கு முன்பு சிவில் சேவை இலங்கையில் பயனுறுதிமிக்கதாக இருந்தது எனக் கூறுவதற்கில்லை சிவில் சேவை தொடர்பாக கோல்புறூக் கமெரன் விதப்புரையில் சேவை மூப்புக்கோ அல்லது ஏனையோரது விதப்புரைகளுக்குப் பதிலாக திறமையடிப்படையிலான பதவி உயர்வு மட்டுமே இவ் ஆணைக்குழுவில் சிபார்சு செய்யப்பட்டது.

பிரித்தானிய சிவில் சேவையாளர்கள் சுதேச பாஷைகள் கற்க வேண்டும் என்பது இங்கு முக்கிய விடயமாகிறது. பிரித்தானியாவில் இருந்து வந்த சிவில் சேவையாளர்களுக்கு அவர்களது ஊழியம் குறைக்கப்பட்டு பெருந்தோட்டப் பயிரச்செய்கையில் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டது. மேலும் பிரித்தானியாவிலிருந்து கொண்டு வரப்படும் சிவில் சேவையாளரது எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டு இலங்கையர் கீழ் மத்திய நிலை சேவைகட்கு இலங்கையர் நியமிக்கப்பட்டனர். உயர் நிலைப் பதவிகளுக்கு மட்டுமே பிரத்தானியர் நியமிக்கப்பட்டனர்.

1845ல் சிவில் சேவையை மேலும் பயனுறுதிமிக்கதாக ஸ்ரான்லி பிரபு மாகாண எல்லைகளை மீள் நிர்ணயம் செய்ததுடன் சிவில் சேவையாளர்கள் பெருந்தோட்டத்துறையில் ஈடுபடமுடியாதெனவும், அவர்களுக்கான ஓய்வூதிய திட்டமொன்றினையும் அறிமுகம் செய்து வைத்தனர்.

1857ல் பல்கலைக்கழக பட்டதாரிகள் போட்டி பரீட்சை மூலம் சிவில் சேவைக்கு தெரிவு செய்யப்படும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.

1873 தொடக்கம் 1890 வரையான காலப்பகுதியில் இலங்கையின் மாகாணங்கள் 5இலிருந்து 9ஆக அதிகரிக்கப்பட்டது. மேலும் மாகாண அரசாங்க அதிபர்களின் நிர்வாக வீச்சு எல்லை அதிகம் எனக் கருதி மாகாண எல்லைகள் மீளவும் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன.

இதனைவிட சிவில் சேவையில் பல்வேறு திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன.

பொதுவேலைகள் திணைக்களம்
நிலஅளவையாளர் திணைக்களம்

பொதுப்போதனைத் திணைக்களம் (கல்வி)

சுகாதாரத் திணைக்களம்

பொலிஸ் திணைக்களம்

தபால் திணைக்களம்

புகையிரதத் திணைக்களம்

துறைமுக திணைக்களம்

சுங்கத் திணைக்களம்

பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு திணைக்களமும் கொழும்பில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டியங்குவதுடன் ஒவ்வொரு மாகாணத்திலும்,உதவி அரசாங்க பிரிவுகளிலும் தமது திணைக்கள அலுவல்களைத் திறந்து சேவையாற்றின.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் அரசாங்க அதிபர் இத் திணைக்களங்களை ஒருங்கிணைப்பு செய்தார். இதன் மூலம் இலங்கையின் பொதுநிர்வாகத் துறையில் பணிக்குழுவாட்சி முறைமை முதன்மை பெற்று விளங்கியது.

சிவில் சேவையாளர்கள் வரிகளை அறவிடுவது மட்டுமல்லாது தத்தமது நிர்வாக எல்லைகளுக்குள் வீதிப்பராமரிப்பும் போக்குவரத்தும் நீர்ப்பாசனம், காணிப்பிரச்சினை, பெருந்தோட்டம், நெல் விவசாயம், கட்டிட நிர்மாணம், காடு பேணலும், காடுபராமரிப்பும் முதலிய சமூக நலன்பேண் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இதனைவிட சாதாரண சமூகத்திலிருந்து பொதுநிர்வாகத்தின் இணைப்பாளராக கிராமிய உத்தியோகத்தர்கள் இருந்தனர். இவர்கள் பிரதம தலைமையதிகாரி, மேலாண்மை தலைமையதிகாரி, தலைமையதிகாரி என அழைக்கப்பட்டனர். இவர்களை கிராமத்தவர்கள் விதானை உடையார். மணியகாரர் எனவும் அழைத்தனர். எனவே இப்பதவி நிலைகள் சுதேசிகளுக்கு வழங்கப்பட்டு பொதுத்துறை நிர்வாகத்தோடு இணைக்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

1891 முதல் 1913 வரையான காலப்பகுதியில் இலங்கையின் சிவில் சேவை அபரிமிதமாக வளர்ச்சி பெற்றது. சிவில் சேவையாளர்களின் பிரதான தொழிற்பாடு வரிகளை அறவிடுவதுடன் மட்டுமல்லாது நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் பேணுதல், சமூகக் காப்பு, சமூக நலன் பேண் நடவடிக்கைகள் சமூக பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்களும் இவர்களது தொழிற்பாட்டுக்குள் உள்ளடங்கியது.

ஆள்பதி மக்கலத்தினதும் ஆளுனர் சேர் ரிச்வேயினதும் சிவில் சேவை தொடர்பான சீர்திருத்தங்களுள் இலங்கையின் நவீன அரசு ஒன்று தோன்றுவதற்கு ஏதுவாயிற்று. இலங்கையின் சிவில் சேவையாளர்களின் தேசக்

கட்டுமானப் பணிகள் பிரித்தானியாவின் ஏனைய காலனித்துவ நாடுகளிலும் பார்க்க சிறப்பாக இருந்தது.

இக் காலப்பகுதியில் முன்பு நடைமுறையிலிருந்த நபருக்கேற்ற சம்பள முறை நீக்கப்பட்டு பதவிக்குரிய சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டது. இதன் மூலம் இலங்கை முழுவதற்கும் சிவில் சேவை ஓர் ஒழுங்கு முறைக்குள் கொண்டு வரப்பட்டது.

1897ல் சிவில் சேவை அதிகாரிகளின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டதுடன் அவர்களிற்கான வருடாந்த சம்பள ஏற்றத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் பொதுச்சேவை ஊழியர்கள் தொடர்பான இடமாற்றக் கொள்கையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

சேவை மூப்பும் விசுவாசமும் கொண்ட சிவில் சேவையாளர்களுக்கும் உயர்நிலை சிவில் சேவையாளர்களுக்கும் இங்கிலாந்து, இந்தியா போன்ற இடங்களில் சேவைக்கால பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களது வினைத்திறன் அதிகரிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியினை வருடம் தோறும் அளவிடுவதற்காக வருடாந்த அரசாங்க அதிபர் மகாநாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன் மூலம் ஒவ்வொரு அரசாங்க அதிபர் பகுதிகளினதும் அபிவிருத்திகள், தேவைகள், பிரச்சினைகள் உடனுக்குடன் அரசுக்குத் தெரிவித்து நடவடிக்கைகள் எடுக்க முடிந்தது.

பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான தொடர்பாளர்களாக விதானை, உடையார், முகாந்தரம், முதலியார் போன்றோரது சேவைகளும் இணைப்புக்களும் பெறப்பட்டு இலகுவில் சிவில் சேவையாளர்கள் பொது மக்களை அணுகவும் அதேபோல் பொதுமக்கள் இலகுவில் சிவில் சேவையாளரை அணுகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இக்காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், கட்டிட வேலைத் திணைக்களம், பெருந்தெருக்கள் திணைக்களம், பாரிய மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு வினைத்திறனாக்கப்பட்டது. பொலிஸ்மா அதிபர் நியமனம் ஒன்று உருவாக்கப்பட்டு கிராம நகர வேறுபாடுகளின்றி பொலிஸ் திணைக்களத்தின் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டன. இதன்னை விட சமூக நல விருத்திகள் பொருளாதார விருத்திகளுக்கும் சிவில் சேவையாளர்கள் பங்களிப்புச் செய்தமையினால் இக் காலப்பகுதியிலேயே இலங்கையின் அபிவிருத்தி நிர்வாகத்திற்கான தோற்றுவாய்கள் உருவாக்கப்பட்டு விட்டன.

## டொனமூர் சீர்திருத்தம் பொது நிர்வாகத்தில் ஏற்படுத்திய மாற்றம்

1931 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் சீர்திருத்தம் ஏனைய துறைகளில் ஏற்படுத்திய மாற்றத்தைப் போலவே பொது நிர்வாக அமைப்பிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுள்ளது. நிர்வாகக் கட்டமைப்பின் உச்சியிலிருந்த காலனித்துவ செயலாளருக்குப் பதிலாக 10 அமைச்சர்கள் உருவாக்கப்பட்டு காலனித்துவ செயலாளரின் அதிகாரங்கள் இல்லாது ஒழிக்கப்பட்டன. ஒவ்வொரு அமைச்சும் சுதந்திரமாகச் செயல்பட்டதுடன் அமைச்சரின் கட்டுப்பாட்டினுள் அமைச்சுத் துறைகள் விடப்பட்டன. அமைச்சர்களுக்குக் கீழ் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டு நாடு பூராகவும் நிர்வாக வலைப்பின்னல் உருவாக்கப்பட்டது. இலங்கையின் பொது நிர்வாகத்தில் ஏற்பட்ட இவ் மாற்றம் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கும் கால்கோள் ஆயிற்று.

01. அதிகாரங்கள் புதிய அமைச்சர்களிடம் வழங்கப்பட்டன. இதனால் பொது நிர்வாகத்தின் வடிவமும் அமைப்பும் மாற்றம் அடைந்தது.

02. பொது நிர்வாகத் திணைக்களங்கள் அதிகரிக்கப்பட்டமையினால் அரசின் செயற்பாடு விஸ்தரிக்கப்பட்டது.

03. அமைச்சுக்களின் உருவாக்கம் என்பது அமைச்சின் கீழான திணைக்களங்களுக்குள்ளும் அதிகார செறிவாக்கத்தை ஏற்படுத்தியது. அமைச்சுக்கள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் யாவும் அமைச்சின் தலைமையகத்தினால் இறுக்கமாக கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது. இது இலங்கையின் ஒற்றையாட்சி தோன்றுவதற்கு அடிகோலிற்று.

04. இலங்கையின் தொழில் நிர்வாக அமைப்பில் திணைக்களங்கள் உருவாகியதுடன் பிரதேச ரீதியாக அவை திணைக்கள அலுவலகங்களை நிறுவி செயற்பட்டமையானது பொது நிர்வாக செயற்பாடுகள் யாவும் கிராமங்கள் வரை பரந்து விரிவதற்கு காரணமாயிற்று.

05. டொனமூர் அரசியல் சீர்திருத்தம் சர்வசன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெற்ற அரசியல் கட்டமைப்பைக் கொண்டமையினால் இங்கு சுய அரசாங்க இயல்புகள் காலனித்துவ அரசாங்க இயல்புகளிலிருந்து வேறுபடக் காரணமாயின. இவ்வரசாங்க கட்டமைப்பு இயல்புகளின் மாற்றமானது பொது நிர்வாக சேவையின் இயல்புகளும் பண்புகளும் மாற்றமடையக் காரணமாயின. நிர்வாக சேவையாளர்கள் மக்களிடமிருந்து தோற்றம் பெற்ற அரசியல் தலைமைத்துவத்திற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களாக மாற்றம் அடைந்தனர்.

06. டொனமூர் அரசியல் யாப்பின் பிரதேசவாரி பிரதிநிதித்துவம் தேர்தல் தொகுதி கட்டமைப்பும் வேறுபட்ட பிரதேச மக்களினது சமூக பொருளாதார அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவையை சிவில்

சேவையாளர்களுக்கு வழங்கியது. சிவில் சேவையாளர்கள் தமது சேவையில் பிரதேச ஏற்றதாழ்வுகள் வேறுபாடுகளுக்கு இணங்க அவ்வேறுபாடுகளை இழிநிலைப்படுத்தும் நோக்கில் திட்டங்களைத் தீட்டி திட்ட அமுலாக்கச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியவர்களாயினர்.

07. இக்கால சிவில் சேவையானது அரசாங்கத்தின் சமூக பொருளாதார நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனமாக மட்டுமன்றி அரசாங்கத்தின் சமூக பொருளாதார கொள்கைகளுக்கு ஆலோசனை கூறுகின்ற நிறுவனமாகவும் தன்னை மாற்றிக் கொண்டது. இச் செயற்பாடானது இலங்கை நிர்வாக சேவையின் பண்பு ரீதியான மாற்றம் என பேராசிரியர் விஸ்வவர்ணபால கூறுகின்றார்.

08. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கை நிர்வாக சேவை 1933 ஆம் ஆண்டு மறுசீரமைப்புக்கு உட்பட்டது. இம் மறுசீரமைப்பு இலங்கையின் திறைசேரியை மீளொழுங்கமைக்க காரணமாயிற்று. இதன் அடிப்படையில் திறைசேரியில் நிதியும் விநியோகமும் என்ற பிரிவும் பொது நிறுவனம் என்ற பிரிவும் உருவாக்கப்பட்டது. நிதியும் விநியோகப் பிரிவு களஞ்சியம், மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் ஒப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரம் முதலான விடயங்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டது. பொது நிறுவனப்பிரிவு ஊழியர் சம்பளம், ஓய்வூதியம், விடுமுறைகள் முதலான விடயங்களை நெறிப்படுத்தும் அலகாக மாற்றப்பட்டது. பொது நிர்வாக சேவையில் திறைசேரியின் கட்டுப்பாடும் செல்வாக்கும் தவிரக்க முடியாத ஒரு அங்கமாகக் காணப்படுகின்றது. இப் பண்பானது இன்று வரை தொடர்வதனை நாம் அவதானிக்கலாம்.

09. டொனமூர் சீர்திருத்தம் இலங்கையின் நிர்வாக சேசையை இலங்கையை மையப்படுத்தியதாகவும் அபிவிருத்தி நிர்வாகமாகவும் வலுப்பெற்றது இலங்கை நிர்வாக சேவையை இலங்கையர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது.

10. டொனமூர் அரசியல் திட்டம் அறிமுகப்படுத்திய பொதுச் சேவைகள் ஆணைக்குழு சிவில் சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் பதவியுயர்வு, இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுங்காற்று நடவடிக்கைகள் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்தது. மேலும் இவ் விடயங்கள் தொடர்பாக தேசாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் நிரந்தர அமைப்பாகவும் இது செயல்பட்டது. மேலும் டொனமூர் அரசியல் சீர்திருத்தம் உருவாக்கிய நிர்வாகக் குழுமுறையுடன் தன்து செயற்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளுகின்ற ஒரு அமைப்பாகவே பொதுச்சேவை ஆணைக்குழு காணப்பட்டது.

11. டொனமூர் சீர்திருத்தம் அரசாங்க அதிபரிடம் விடப்பட்டிருந்த மாகாண நிர்வாகத்தை மீளப் பெற்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள் திணைக்களங்களுக்கு தலைவர்களாக்கப்பட்டு அத்திணைக்களங்களின் செயற்பாடுகளை தாமே நெறிப்படுத்தினர். இவ் அமைச்சர்களின் நெறிப்படுத்தல்களுக்கு சிவில் சேவையாளர்கள் தமது செயல் நிலைப் பரிணாமத்தையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.
12. டொனமூர் அரசியல் திட்டம் அரசாங்க அதிபர்களின் வகிபாகத்தை மாற்றியது. அதாவது அரசாங்க அதிபர் நிறைவேற்று அதிகாரி என்ற நிலையிலிருந்து மட்டுப்படுத்தப்பட்டு நிர்வாகத் திணைக்களங்களை இணைக்கின்ற இணைப்பாளராக மாற்றப்பட்டார். இவ் இணைப்புக்களையும் மாகாண மட்டத்திலிருந்து மாவட்ட மட்டத்திற்கு மாற்றப்பட்டது. இதனால் அரசாங்க அதிபரின் கடமைகளும் பொறுப்புக்களும் குறைக்கப்பட்டன.
13. டொனமூர் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்திய அமைச்சரவை முறை பல திணைக்களங்கள் உருவாக ஏதுவாயிற்று இத்திணைக்களங்கள் மாவட்டங்கள் தோறும் செயற்பட்டமையினால் இலங்கையின் பொதுநிர்வாக அமைப்பில் நிலைக்குத்து வடிவான நிர்வாகக் கட்டமைப்பும் பணியொழுங்கும் உருவாகியது.

இவ்வகையில் டொனமூர் சீர்திருத்தம் அறிமுகப்படுத்திய சிவில் சேவைக் கட்டமைப்பு சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் பொது நிர்வாகக் கட்டமைப்புக்கு அடித்தளமிட்டது.

## 2.2 காலனித்துவ ஆட்சிக்காலத்தில் நீதித்துறையில் ஏற்பட்ட மாற்றம்

1798 - 1833 வரையான இக் காலகட்டத்தில் பிரித்தானியர், சுதேசிகளை ஆட்சி செய்வதில் பாரிய இடர்பாடுகளை சந்தித்தனர். இதற்கு பிரித்தானியர்களதும், இலங்கையர்களினதும் அரசியல் கருத்துக்கள், பொருளாதாரம், மொழி, சமூக வழக்காறுகள் வேறுபட்டிருந்தமையே காரணம் ஆகும். இந் நிலையில் ஆங்கிலேயர்கள் நீதி பரிபாலன முறை ஒன்றினை தோற்றுவிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. நீதி பரிபாலனத்தில் ஒல்லாந்தர்கள், சுதேசிகளுக்கு ஏற்ற மாதிரி நீதிபாலனத்தை மேற்கொண்டு வெற்றியும் பெற்றுள்ளனர். எனினும் ஆங்கிலேயர்களுக்கு ஒல்லாந்தர்களின் றோமன் டச்சு சட்டத்தின் அறிவின்மை காரணமாக அவர்களது நீதிபரிபாலனத்தை தொடர்ச்சியாக பேண முடியாது இருந்தது. இந் நிலையில் ஆள்பதி குடியியல் நீதிமன்றங்களை பிரதான நகரங்களிலும், சில நகரங்களை இணைத்த வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களையும் உருவாக்கினர். இவற்றை கட்டுப்படுத்தும் நிறுவனமாக உயர் நீதிமன்றம் காணப்பட்டது. இவ்

உயர் நீதிமன்றம் கரையோர பிரதேசங்களில் குற்றவியல் விடயங்களுக்காகவும், நீதி பரிபாலனம் செய்யப்பட்டது. இவ் நீதிமன்றம் கொழும்பில் அமைந்து காணப்பட்டது.

மேலும் சிறிய குற்றவியல் வழக்குகள் சமாதான நீதவான்களாலும், கிராமிய நீதிமன்றங்களாலும் கையாளப்பட்டன. சிவில் நீதிப் புனராய்வுக்காக மாகாண நீதிமன்றங்களும் ஆள்பதியால் உருவாக்கப்பட்டது. இவ் அனைத்து நீதித்துறையின் கட்டுப்பாடு ஆள்பதியிடமே இருந்தது. இங்கு நீதித்துறையும், நிர்வாகத்துறையும் பிரிக்கப்படாது இருந்ததனை காண முடிகின்றது. 1811ல் யூரிமார் அவை உருவாக்கப்பட்டது. இது உள்ளூர் மக்களின் மொழி மற்றும் வழக்காறுகளை ஆங்கிலேயர் தெரியாத காரணத்தினால் தவறான தீர்ப்புகளை வழங்குவதை தடுப்பதற்காகவே இவ்அவை தோற்றுவிக்கப்பட்டது.

இக்கால நீதிபரிபாலன முறையை அமைப்பு ரீதியாக நோக்கும் போது இரட்டை அமைப்பு முறை காணப்பட்டது. நீதித்துறையின் அதிகாரங்கள் உயர்நீதி மன்றத்திடமும், ஆள்பதியிடமும் கலந்து காணப்பட்டது. இவர்களுக்கு இடையே தெளிவான அதிகாரப் பகிர்வு காணப்படவில்லை. இதனால் போட்டியும், பூசல்களும் நிறைந்த ஒன்றாகவே நீதித்துறை காணப்பட்டது.

அடுத்து 1833ம் ஆண்டு தொடக்கம் 1920 ஆண்டு வரையான காலப்பகுதியை நோக்கினால் முன்பு ஒருவருக்கு ஒரு நீதி என்ற அமைப்பில் கண்டியில் உள்ளவருக்கும், கரை நாட்டில் உள்ளவருக்கும் வெவ்வேறான நீதி வழங்கப்பட்டன. பரிபாலனத்தின் பொருட்டு இலங்கையை ஒரு நாடாக்கியது போலவே நீதி பரிபாலனத்திலும் இலங்கையை ஒரு நாடாக்கினர். ஆள்பதியின் அதிகாரங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டன. இராஜகாரிய முறை நீக்கத்தால் அவருடைய செல்வாக்கு வெகுவாகக் குறைக்கப்பட்டது. உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டமையால் அவருடைய நீதித்துறை அதிகாரம் குறைக்கப்பட்டது. உச்ச நீதிமன்ற அமைப்பிலே “சட்டத்தின் முன் சகலரும் சமம்” என்ற நிலைமை ஏற்பட்டது. ஒருவருக்கு ஒரு நீதி முறை என்று ஆள்பதி அவர்கள் பரிபாலித்த பழைய முறையோடு, மக்களுக்குள் இருந்த ஏற்றத்தாழ்வு குறைக்கப்பட்டது. மாவட்ட நீதிமன்றங்கள் எல்லாம் உச்ச நீதிமன்றமே மேற்பார்வை செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டது. இங்கிலாந்தின் நீதிமன்ற முறையை ஒத்த ஒரு நீதிமன்ற முறையை இங்கு அமைப்பதே கமரனது நோக்கமாக இருந்தது.

கோல்புறூக் திருத்தத்தின் பயனாக முன்னர் நாட்டில் நிலவிய கன்சபாறட்டசபா என்ற கிராம மன்றங்கள் அதிகாரமிழந்தன. அவை மக்கள் மன்றங்களாய் பொதுமக்களுக்கு மனத்திருப்தியளிக்க கூடிய வகையில் தீர்ப்பளிக்க கூடியனவாய் நாட்டுப் பெரியாரைக் கொண்டனவாய் விளங்கியமை. கிராமமன்றங்கள் இல்லாது போகவே நாட்டுப்புற மக்கள் நகரங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிமன்றங்களைத் தேடி நெடுந்தூரம் அலைந்து, அங்கே

அதிக செலவு செய்து வழக்கறிஞரிடம் வழக்குகளைக் கூறி மேலதிக முத்திரைச் செலவு கொடுத்துத் தவணை தோறும் அலைந்து ஈற்றில் பெற்ற நீதியும் சில சமயங்களில் திருப்பதியற்றதாகவே இருந்தது.

### பிரித்தானிய கால நீதித்துறை பற்றிய சிலகுறிப்புக்கள்

- ✠ ஒல்லாந்தர் கால உயர்நீதிமன்ற முறை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக குற்ற நீதிமன்ற அதிகாரத்தைக் கொண்ட உயர்நீதிமன்ற முறை பிரட்றிக்நோர்த் ஆள்பதியால் அமைக்கப்பட்டது. தேவையான போது இங்கிலாந்து அரச சபைக்கு மேன் முறையீடு செய்யலாம்.
- ✠ 1800 ஆம் ஆண்டில் பிஸ்கால் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இங்கு காணி பற்றிய வழக்கு தவிர்ந்த சிவில் நீதிமன்ற அதிகாரம் நிலவியது.
- ✠ 1801ம் ஆண்டு பிரகடனத்திற்கேற்ப புதிய நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. அது கொழும்பு பிராந்திய சிவில் மற்றும் குற்றவழக்கு தொடர்பான நீதிமன்ற அதிகாரம் கொண்டிருந்தது. சிறிய குற்ற வழக்குகள் சம்பந்தமாக பிஸ்கால் நீதிமன்றத்தில் சமாதான நீதிபதிகள் மற்றும் மஜிஸ்ரேட் நீதவான்கள் கடமையில் ஈடுபட்டனர். மேன் முறையீட்டுக்காக மேன் முறையீட்டு நீதி அமைப்பொன்று உருவாக்கப்பட்டது.
- ✠ 1815ல் மலையக பிரதேசத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதன் பின்னர் கொழும்பில் அமைக்கப்பட்ட நீதிமன்ற அமைப்புக்கள் மலையக பிரதேசத்துக்கு பரவியதன் பின் நாடு முழுவதிலும் தனி நீதிமன்ற முறை உருவானது.
- ✠ 1833இன் அரசியல் பிரகடனத்தின் கீழ் நடை முறையிலிருந்த சகல நீதி முறைகளும் நீக்கப்பட்டு, தரப்படுத்தப்பட்ட நீதிமன்ற முறையொன்று உருவாக்கப்பட்டது. அதன் பிரகாரம் உயர் பொறுப்புக்கள் உயர் நீதிமன்றத்தையே சார்ந்திருந்தது. அதற்காக வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு போன்ற பிரதேசங்கள் உட்படுத்தப்பட்டிருந்தன. அது தவிர இலங்கை முப்பது சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அப் பிரிவொன்றுக்கும் மாவட்ட நீதிமன்றமொன்று தாபிக்கப்பட்டது. மாவட்ட நீதிமன்றம் அடிப்படை குற்றம் மற்றும் சிவில் நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்டிருந்தது.
- ✠ 1843ல் 10ஆம் கட்டளைச் சட்டத்தின் ரிக்வெஸ்ட் நீதிமன்றங்களும், 11ம் கட்டளைச் சட்டத்தின் படி பொலிஸ் நீதிமன்றங்களும் உருவாக்கப்பட்டன. பொலிஸ் நீதிமன்றங்களுக்கு கீழ் சிறு குற்ற நீதிமன்றம் காணப்பட்டது.
- ✠ கிராம சபை (கம்சபா) கட்டளைச் சட்டம் அமுலாக்கத்துடன் சிறிய சச்சரவுகளை தீர்ப்பதற்காக 1871ல் கம்சபாவுக்கு மீண்டும் அடிப்படை அதிகாரம் வழங்கப்பட்டது.

✠ 1938ல் இலக்கம் 20ஐக் கொண்ட கட்டளைச் சட்டப் பிரகாரம் பொலிஸ் நீதிமன்றத்தின் பெயர் நீதவான் நீதிமன்றம் என மாற்றப்பட்டது.

✠ 1938ல் குற்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

✠ 1945ல் 12 மற்றும் 13ஐ கொண்ட கிராமிய நீதிமன்ற கட்டளைச் சட்டத்தின்படி கிராமதீர்ப்பு சபைக்குப் பதிலாக கிராமிய நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

✠ 1947ல் மாநகரசபை கட்டளைச் சட்டத்தினால் மாநகர சபை நீதவான் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. அவற்றின் மூலம் மாநகர சபையால் நிறைவேற்றப்படும் சட்டம் செயற்பட்டது.

## ஆங்கிலேய கால நீதிமன்ற கட்டமைப்பு

கிராமிய நீதிமன்றம் → சமாதான முறையில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் சிறிய குற்றங்கள் விசாரிப்பது சம்பந்தமான அதிகாரம் நீதிமன்றத்துக்கு உண்டு.

↓

ரிக்வெஸ் நீதிமன்றம் → ஆரம்ப சிவில் நீதிமன்ற அதிகாரத்தை கொண்டது. விவாகம் சம்பந்தமான வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கு ரிக்வெஸ் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கிடையாது

↓

நீதிவான் நீதிமன்றம் → முற்றுமுழுதாக குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற அதிகாரம் செயற்படும் சிறிய குற்றங்கள் பற்றிய இறுதி தீர்ப்பு அளிக்கப்படும். கடுங் குற்றம் சம்பந்தமான அடிப்படை விசாரணைகளை மீயுயர் நீதிமன்றத்திற்கு முன் வைப்பதற்கும் இதனால் முடியும்.

↓

மாவட்ட நீதிமன்றம் → சிவில் மற்றும் குற்றங்களுக்கான வழக்கை விசாரணை செய்யலாம். கிராமிய நீதி மன்றத்தின் மேன் முறையீட்டு அதிகாரங்களும் உண்டு.

↓

மேல் நீதிமன்றம் → அடிப்படைக் குற்ற நீதிமன்ற அதிகாரம் மற்றும் குற்றம் சம்பந்தான மேன்முறையீட்டு அதிகாரமும் வேறு பல்வகையான அதிகாரங்களும் உண்டு.

↓

குற்ற மேன்முறையீட்டு → உயர் நீதிமன்றத்தினால் அளிக்கப்படும் நீதிமன்றம் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையிடுவதற்கு அதிகாரமுண்டு.

↓

அரச நீதிமன்றக்குழு → இலங்கையில் நீதிமன்றத்தினால் அளிக்கப்படும் தீர்ப்புகளை மீறி இங்கிலாந்தின் பிரிவு கவுன்சிலுக்கு மேன் முறையீடு செய்யலாம்.

## 2.3 உள்ளூராட்சித் துறையும் அதனுள் ஏற்பட்ட மாற்றங்களும்

வணிக வளர்ச்சி, பெருந்தோட்ட வளரச்சி , போக்குவரத்து, தொடர்பாடல் என்பவற்றின் விருத்தி காரணமாக இலங்கையில் நகரமயமாக்கம் கோல்புறூக் கமெரன் சீர்திருத்தத்தின் பின் விரைவாக்கப்பட்டது. எல்லாக் கிராமங்களும் நகரங்களும் மாவட்டங்களும் கொழும்பு மாநகரத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டன.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் கொழும்பு, கண்டி, காலி ஆகியன பெரும் நகரங்களாக உருவெடுத்தன.

நகர சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாகவும், இடநெருக்கடி காரணமாகவும் நகரங்களில் தொற்றுநோய்கள் மற்றும் கழிவகற்றல் வடிகாலமைப்பு பிரச்சினை காரணமாக பொதுமக்கள் சுகாதாரத்துக்குப் பாரிய பங்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக 1848ல் பொதுச் சுகாதாரச் சட்டம் இயற்றப்பட்டதுடன் பொது சுகாதாரத்துக்கான சபை ஒன்றும் உருவாக்கப்பட்டது. மேலும் 1853ல் சின்னமுத்து நோயின் தாக்கம் நகர்கள் எங்கும் பரந்து காணப்பட்டது. இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக போர்த்துக்கேய காலத்து இலங்கையில் கொழும்புப் பட்டணமானது தெரிவு செய்யப்பட்ட கழக உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட்டது. இதனை முன்னோடியாகக் கொண்டு 1865ல் இலங்கையில் மாநகர சபைச் சட்டம் உருவாக்கப்பட்டு மாநகர சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. இதுவே இலங்கையில் உள்ளூராட்சி சபைகள் தோன்றுவதற்கு வித்திட்டன.

இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி ஆகிய பிரதேசங்களில் முதன் முதலில் மாநகர சபைகள் உருவாக்கப்பட்டன. இம்மாநகரங்களில் இச் சட்டத்தின் மூலம் குறித்த மாநகர மக்களிடம் இருந்து பணத்தை அறவிட்டு நகரத்தை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க முடிந்தது. மாநகர தெருக்களில் விளக்குகள் பூட்டப்பட்டு ஒளியூட்டப்பட்டது. பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டு சமூக பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் சந்தை, நல்லகுடிநீர், கடைத் தொகுதிகள் கொல்களம் என்பன நகரத்தில் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணக்கூடியதாக இருந்தது.

இக் காலத்திலே சட்டசபையில் உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக வலுவடைந்த வண்ணமிருந்தது. ஆங்கிலேயர் இதனைக் கருத்தில் எடுத்து உள்ளூர் மக்களுக்கு அதிகாரத்தினையும், பணத்தினையும் வழங்கி ஆட்சி அதிகாரத்தில் உள்ளூர் மக்களுக்கு பயிற்சி வழங்க விரும்பி உள்ளூராட்சி மன்றங்களைத் தோற்றுவித்தனர்.

1865ல் கொழும்பு மாநகர சபை உருவாக்கப்பட்டு, சிவில் சேவையாளர் ஒருவர் முழுநேர தலைமைத்துவத்தின் கீழ் 10 தெரிவு செய்யப்பட்ட

உறுப்பினர்களையும் 9 நியமன உறுப்பினர்களையும் கொண்டு இயங்கியது. அதேபோல் கண்டி, காலி மாநகர சபைகள் 5 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் 4நியமன உறுப்பினர்களையும் கொண்டு, குறித்த மாகாண அரசாங்க அதிபரின் கீழ் இயங்கின.

1886ல் மாநகர சபைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் மாநகரசபைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மாநகர சபை உறுப்பினர்களின் பொறுப்புக்களும் அதிகாரங்களும் அதிகரிக்கப்பட்டன. மாநகர சபைகள் தமது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் மீது உப விதிகளையும் வரி விதிப்புக்களையும் விதிப்பதற்கும் அவற்றை மீறுவோர் மீது நீதித்துறையை நாடித் தண்டனை வழங்கவும் மாநகர சபைகளுக்கு அதிகாரம் இருந்தது.

1920ல் இலங்கை முழுவதற்குமான உள்ளூராட்சி முறைமை ஒன்று அறிமுகம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அக் காலத்தில் அவைகள் கைகூடவில்லை.

### டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தில் உள்ளூராட்சி அமைப்பு

இச் சீர்திருத்தத்தின் பிரகாரம் அரசாங்கசபை 7 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இதில் ஒன்று உள்ளூராட்சிக்கான நிருவாகக் குழுவாகக் காணப்பட்டது. இக் குழுவிற்கு மாநகர சபைகள், நகர சபைகள், பட்டண சபைகள், கிராம சங்கங்கள், சுகாதாரச் சங்கங்கள் முதலான அமைப்புக்களும் இரத்தினக்கற்கள், கிளறல், மண், மீன்பிடி, கட்டாக்காலிக் கால்நடைகள் கட்டுப்படுத்தப்படல், கிராம நீதிமன்றம் , வண்டி வாகனப்பதிவுகள், நடுகல் நினைவு மண்டபம் அமைத்தல், நிலம் வழங்குதல், பொதுசனத் தேவைகளுக்கு நிலம் சவீகரித்தல், படக்காட்சி நாடகம் முதலானவற்றின் தடைகள், வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் முதலான அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

இச் சீர்திருத்தத்தின் படி முதலாவது உள்ளூராட்சி நிர்வாக சபைக்கு கௌரவ C.பத்துவந்தொடாவவும் இரண்டாவது உள்ளூராட்சி நிர்வாக சபைக்கு S.W.R.D பண்டாரநாயக்காவும் தலைமை தாங்கினார்.

1938ல் முகாந்தரம், மணியகாரர் முறை நீக்கப்பட்டு நகரசபை, பட்டினசபை, கிராமசபைகள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் இலங்கை முழுவதற்குமான உள்ளூராட்சி முறைமை ஒன்று உருவாக்கப்பட்டது.

### கிராமசபைகள்

அரசாங்கம் குறிப்பிட்ட பகுதியை கிராமசபைக்குரிய தெனப் பிரகடனம் செய்து அப் பகுதியிலிருக்கும் சனத்தொகையையும் விஸ்தீரணத்தையும் கருத்தில் கொண்டு இப் பகுதி மக்களின் தேவைகளுக்காக பல வட்டாரங்களாகப் பிரத்து செயற்படுத்தப்படும். இவ்வாறு பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டு அது ஒரு சபையாக இயங்கும்.

## பட்டின சபை

கிராம சபைகளின் நடவடிக்கைகளை ஒத்ததாகவே பட்டின சபைகளின் செயற்பாடுகளும் காணப்படும். கிராம பகுதிகள் எவையேனும் அபிவிருத்தியடைந்த நகரப் பாங்கினதாக இருந்தால் அதனை மத்திய அரசாங்கம் ஒரு பட்டனமாகப் பிரகடனம் செய்யும். இப்பட்டனங்கள் தமது எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் வசிக்கும் மக்களின் பொது ஆரோக்கியம், பொதுச் சேவைகள், பெருந்தெருக்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக கண்காணிப்பதற்கும், பராமரிப்பதற்குமான அதிகாரத்தை பெற்றிருக்கும் அத்துடன் இப்பகுதி மக்களின் வசதிகள், சேமநலன்கள், சுகாதாரம் என்பவற்றிற்கும் பட்டின சபைகளே பொறுப்பாகும். ஒவ்வொரு பட்டன சபைக்கும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் ஒன்று கூடி தவிசாளர்ரைத் தெரிந்து செயற்படுவர்.

## நகர சபை

மகாநகரப் பகுதியல்லாத நகரப்பாங்காக விருத்தி அடைந்துள்ளதுமான பகுதியில் உள்ளூராட்சி அமைப்பாக நகரசபை இருக்கும். தனது பகுதிக்குட்பட்ட இடங்களில் பெருந்தெருக்கள், பொதுஆரோக்கியம், பொதுசேவைகள், சந்தைகள் போன்றவற்றின் அதிகாரங்கள் இதற்குரியதாகும்.

1945ம் ஆண்டு 43ஆம் இலக்க உள்ளூராட்சி சேவை கட்டளைச் சட்டத்தின் மூலம் உள்ளூர்சேவை அதிகார சபை உருவாக்கப்பட்டது. இச் சபையின் மூலம் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு ஊழியர்களைச் சேவையில் சேர்த்தல், பதவியுயர்வு அளித்தல், சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூராட்சி சபைகள் வினைத்திறனாக இயங்குவதனையும் அவற்றை கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவும் இவ் அதிகாரசபை உருவாக்கப்பட்டது. இவ்வதிகார சபைக்கு உள்ளூராட்சி அலுவல்கள் மந்திரி பொறுப்பாக இருப்பார்.

# பொதுத்துறை நிர்வாகமும்

# பொதுக் கொள்கையும்

## 3.0 பொதுத்துறை நிர்வாகமும் பொதுக் கொள்கையும்

### 01. அறிமுகம்.

பொதுவாக அரசாங்க முறைமையில் நிர்வாகத்துறை 2ஆக வகைப்படுத்தப்படுகின்றது.

1. அரசியல் நிர்வாகத்துறை
2. நிரந்தர நிர்வாகத்துறை

அரசியல் நிர்வாகத்துறை என்பது அமைச்சர்களை குறித்து நிற்கின்றது. இவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பொது மக்களால் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் தெரிவு செய்யப்படுவார்கள் இவர்கள் அரசாங்கத்தினால் உருவாக்கப்படும் கொள்கைகளுக்குப் பொறுப்பானவர்கள். இவர்களை அரசியல் தலைமைத்துவம் என்றும் கூறுவர்.

நிரந்தர நிர்வாகத் துறையினர் என்பது சிவில் சேவையாளர்களைக் குறித்து நிற்கின்றது. இவர்கள் போட்டிப் பரீட்சைகளின் மூலமும் சிவில் சேவையின் பதவியுயர்வின் மூலமும் தெரிவு செய்யப்பட்டு தமது ஓய்வு காலம் வரை அரசாங்கத்தில் பணியாற்றும் பணியாளர்கள் ஆவார்கள். பொது நிர்வாகப் பணிகள் நிர்வாக சேவையிலுள்ள நிரந்தர அங்கத்தவர்களாலேயே உண்மையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவர்களிடம் நிறைந்திருக்கும் அறிவும் அனுபவமும் ஆற்றலும் பொது நிர்வாகத்தில் இவர்கள் நிரந்தர அங்கத்தவர் ஆகுவதற்குக் காரணம் ஆகின்றது. இவர்களது முதன்மைப் பணியானது அரசியல் தலைவர்களாகிய அமைச்சர்களினால் உருவாக்கப்படும் கொள்கைகளை நேர்மையுடன் நிறைவேற்றுவதுடன் கொள்கை உருவாக்கத்தின் போது அமைச்சர்களுக்கு தமது ஆலோசனைகளையும் வழங்குகின்றார்கள். (Finner) (f) பின்னர் என்னும் நிர்வாகவியலாளர் "நிர்வாக சேவையாளர்கள் அரசாங்கத் திணைக்களங்களில் தமது வாழ்க்கைத் தொழிலாக கொண்டுள்ள ஆளணியாவார். இவர்கள் நிரந்தரமானதும் செயற்றின் உடையதும் ஊதியம் உடையதுமான ஆளணி ஆவார்" எனக் குறிப்பிடுகின்றார் (f) பின்னர் நிர்வாகப் பணியை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள இல் ஆளணியினரையே பொது நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் ஆவார்கள். இவர்கள் பயிற்சியளிக்கப்பட்ட நுண்ணறிவாளர்கள். அரசாங்க நிர்வாகம் திறம்பட இயங்குவதற்கு உழைக்கும் இவர்களே அரச கொள்கைகள் அல்லது பொதுக் கொள்கைகள் மக்களை சென்றடைவதற்குத் தேவையான அனைத்துச் செயற்பாடுகளையும் கீழ்மட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை மேற்கொள்பவர்கள்.

உதாரணம் :

இலங்கையில் கிராமசேவையாளர் பிரதேச செயலாளர் அரசாங்க அதிபர் மாகாணச் செயலாளர் அமைச்சின் செயலாளர் ஜனாதிபதியின் செயலாளர் முதலான ஒழுங்கமைப்பினைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

## 3.1 பொதுத்துறை நிர்வாகம் ஓர் வரலாற்று நோக்கு

பொதுநிர்வாகம் பழமையானது அரசு என்று தோன்றியதோ அன்றே அரச பணிகளும் தோன்றிவிட்டன. இவ்வகையில் கிரேக்க நகர அரசுகளின் காலத்திலேயே பொது நிர்வாகம் தோன்றிவிட்டது.

கீழைத்தேய நாடுகளை நோக்குகின்ற பொழுது முடியாட்சிக் காலத்தில் மன்னர்களைப் புகழுதல், வாழ்த்துதல், அறிவுரை வழங்குதல், மன்னர்களுக்கிடையே யுத்தத்தை ஏற்படுத்தல், யுத்தத்தை தடுத்தல், பொது மக்களுக்காக மன்னரிடம் வேண்டுகோள் விடுத்தல் போன்ற விடயங்களை கீழைத்தேய முடியாட்சிக் காலத்தில் அதன் ஆரம்பங்களாக இருந்தது. மந்திரிகள், பிரதானிகள் தண்டநாயகர்கள் ஆகியோர்களது பணிகள் பொதுத்துறை நிர்வாகத்தை ஒத்ததாகக் காணப்பட்டது.

ரோமானியப பேரரசுக் காலத்தில் அரசர்களுக்கு அறிவுரை கூறுவது பொது நிர்வாகிகளின் பிரதான கடமையாக இருந்தது. அதனைத் தொடர்ந்து வந்த காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் நாடுகாண் பயணங்களும் அரசாங்கங்களினதும் செயற்பாடுகள் ஐரோப்பிய நாடுகளில் அரசியல், வணிகம், நிர்வாகம் என பரந்து விரிந்தது. இம் மறுமலர்ச்சிக் காலத்திலேயே பொதுநிர்வாகவியல் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றதுடன் விஞ்ஞான முறைமைக்குள் தன்னை தகவமைத்துக் கொண்டது.

18ம், 19ம் நூற்றாண்டுகளில் அரசின் வெற்றி பொது நிர்வாக்த்தின் வெற்றியில் பெரிதும் தங்கியிருந்தது. 2ம் உலகாமகாயுத்தத்தின் பின் யுத்தத்தினால் பாதிப்படைந்த நாடுகளில் புனருத்தாரணப் பணிகளும் தேசநிர்மாணப் பணிகளும் பொது நிர்வாகத்துறையின் பிரதான கடமைகள் ஆயின. இது பொதுநிர்வாக துறையை அபிவிருத்தியுடன் இணைத்து அபிவிருத்தி நிர்வாகம் எனும் கோட்பாடு தோன்றுவதற்குக் காரணமாயிற்று.

அரசானது மக்களுக்கு சேவை செய்வதற்காக தனது முகவராகிய அரசாங்கத்தினை உருவாக்குகின்றது. அரசாங்கம் அரசின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் முன்னெடுத்துச் செல்கின்றது. அத்துடன் அரசு இயற்றும் சட்டங்களையும் நடைமுறைப்படுத்துகின்றது. இவ் வனைத்துக் கருமங்களுக்காகவும் ஒரு செயற்பாட்டுத் தொகுதியாகவே பொது நிர்வாகம் இயங்குகின்றது.

பொது நிர்வாகத்தின் வெற்றியானது குறித்த அரசின் வெற்றியாகவும் வினைத்திறன்மிக்க அரசாக தன்னை அடையாளம் காட்டவும் முடிகின்றது.

## 3.2 பொதுநிர்வாகம் தொடர்பான வரைவிலக்கணம்

பொதுத்துறை நிர்வாகம் என்றால் என்ன என்பதற்கு பின்வரும் வரைவிலக்கணங்களை குறிப்பிடலாம். "அரசாங்கத்தின் நடவடிக்கைகளுடன் ஈடுபாடு கொண்டுள்ளதே பொதுத்துறை நிர்வாகம்" என குறிப்பிடலாம்.

Lenard D.White கருத்துப்படி "அரசாங்கம் தீர்மானிக்கும் பொதுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அவற்றின் நோக்கங்களை அடைவதற்காகச் செற்படும் மொத்தச் செயன்முறையே பொதுத்துறை நிர்வாகம்" மேலும் Woodrow wilson இனின் கருத்துப்படி "அரச சட்டங்களை முறையாகவும், விரிவாகவும் நடைமுறைப்படுத்துவதே பொதுத்துறை நிர்வாகம் எனக் குறிப்பிட்டார்.

"பொதுக் கொள்கையின் நிறைவேற்றம் அல்லது செயலாக்கத்திற்கான எப்போதும் எவ்வதிகார வரம்பிலும் நிலவுகின்ற சட்டங்கள், ஒழுங்கு முறைகள், உறவுகள், தொகுப்புக்கள், பழக்க வழக்கங்கள் போன்றவவைகளின் கூட்டாக்கமே பொதுத்துறை நிர்வாகமாகும்."

"அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட இருக்கும் கடும்பணிகளைத் தாம் எவ்வாறு நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற அறிவையும் ஆற்றலையும் கொண்ட பணியாள தொகுதியைக் கொண்டுள்ளதே பொதுத்துறை நிர்வாகமாகும்"

## 3.3 பொதுநிர்வாகத்தின் பண்புகளும் அடிப்படை அம்சங்களும்

அரசு எப்போது தோன்றியதோஅப்போதிருந்தே பொதுத்துறை நிர்வாகமும் தோற்றம் பெற்றுள்ளது. இப்பொதுத் துறை நிர்வாகமானது அரசாங்கத்தின் நிர்வாகத்துறைக்குட்பட்ட உத்தியோகத்தர்கள், பொருட்கள் வசதிகள் ஆகியவற்றின் செய்திகளை விரித்துக்கூறுவதாகும். இதன்படி பொதுத்துறை நிர்வாகமானது பின்வரும் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது.

01. நிர்வாகப் பணிகளில் ஈடுபடுவோர் எப்படிச் செயற்படுகினறனர் என்பதைக் கோட்பாட்டுச் செயற்பாட்டு முறைகளினூடாக பொதுநிர்வாகம் விபரிக்கின்றது.
02. அரசாங்கஅமைப்பும் அதன் துறைகள், நிறுவனங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் அரசாங்கப் பணிகளும் சேவைகளும் கூட்டிணைவாகவும் ஒருங்கமைவாகவும் நடத்தப்படுவதனை இது விபரிக்கின்றது.
03. இப்பொதுத்துறை நிர்வாகம் நிர்வாக முகாமைத்துவத்தினுள் அடங்குகின்ற தலைமைத்துவம், கொள்கை உருவாக்கம், முடிவு செய்தல், திட்டமிடல், மேற்பார்வையும் ஒழுங்கமைப்பும் போன்ற விடயங்களை விளக்கிக் கூறுகின்றது.

04. பணிக்குழுவில் அங்கத்துவம் பெறும் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் ஆகியோரது செய்திகளை இது உள்ளடக்கியுள்ளது.

05. மத்திய, மாநில, உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றி இது விபரிக்கின்றது.

06. நிதிமுகாமைத்துவம் தொடர்பாக, அதாவது அரசாங்கம் செயலாற்றுவதற்குத் தேவையான நிதியினைப் பெறுதல், செலவிடல், கணக்கீடு மற்றும் தணிக்கை செய்தல் போன்ற நிதியியல் சம்பந்தமான பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துகின்றது.

07. நிர்வாகச் சட்டமும் ஒழுங்கு முறைகளும் தொடர்பாக அதாவது அரசாங்கத்தினால் அன்றாடம் பிறப்பிக்கப்படும் நிர்வாகச் சட்டம் அதிகார அனுமதி பெற்று சட்டமியற்றல், நிர்வாக வழித்தீர்ப்பு, நிர்வாக அதிகாரங்கள் தண்டனைகள் நிர்வாக நடைமுறைகள் என்பவற்றை விபரிக்கின்றது.

08. பொது நிர்வாகத்தின் மீது நிர்வாகத்துறை, சட்ட மன்றம், நீதிமன்றங்கள், பொதுமக்கள் ஆகியவைகள் மேற்கொள்ளும் உறவுகளும் அவற்றின் மீதும் நிர்வாகத்தின் மீதும் செலுத்தப்படும் கட்டுப்பாட்டு முறைகளும் விபரிக்கப்படுகின்றது.

மேற் கூறப்பட்ட பண்புகளைத் தொகுத்து நோக்குகின்றபோது பொதுத்துறை நிர்வாகமானது திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் அமுலாக்குதல் இணைத்து வைத்தல், கொண்டு நடாத்துதல் போன்ற அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளதெனலாம்.

இப்பொழுது நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களாக P.Mequeen என்பவர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்.

01. பொதுத்துறை நிர்வாகத்தின் செயற்பாடுகள் அதாவது கருமங்களை வேறுப்படுத்தல், கொண்டு நடத்தல், மேற்பாரவை செய்தல், கட்டுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய பொதுத்துறை நிர்வாகச் செயற்பாடுகள்
02. நிர்வாக அமைப்புக்களை ஸ்தாபித்தல்
03. ஆளணி முகாமைத்துவம்
04. பொருள் மற்றும் நிரம்பல் பணிகள்

மேலும் பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்கள் தொடர்பான அமெரிக்க அறிஞரான லூதர்குல்லிக் (Luthar Gulliek) என்பவர் "POSDCORB" என்ற எண்ணக்கருவினூடாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார். அதாவது

P - Planning திட்டமிடல்
O - Organizing ஒழுங்கமைப்புக்களைச் ஸ்தாபித்தல்
S - Staffing ஆளணியினரைச் சேர்த்துக் கொள்ளலும் முகாமைப்படுத்தலும்

D - Directing வழிப்படுத்தல் அல்லது தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டளைகளையும், வழிப்படுத்தும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

Co - Co - ordination - இணைத்துவைத்தல் அதாவது நிர்வாகப் பகுதிகளை இணைத்து வைத்தலும் ஒரு வேலை பலமுறை செய்யப்படுதலையும் பகுதிகளுக்கிடையில் இடைமேவுதலையும் தவிர்த்தல்

R - Reporting - அறிக்கையிடல்

ஒழுங்கமைப்பின் செயற்பாடுகள் பற்றி ஊழியர்களை அறிவூட்டுவதும், கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் உச்ச முகாமைத்துவத்திற்கு கிடைக்கப் பெறும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

B - Budgeting நிதிமுகாமைத்தும் அல்லது வரவையும் செலவையும் திட்டமிடல்

இவ்வாறு பல்வேறு கால கட்டத்தின் அடிப்படையில் பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படைஅம்சங்கள் தொடர்பாக விளக்கப்படுகின்றது. எனினும் இன்றைய காலகட்டத்தில் பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களாக நாம் பின்வருவனவற்றினை அடையாளப்படுத்தலாம்.

1. ஆராய்தல்
2. முன்கூட்டியே உணரும்தன்மை
3. திட்டமிடுதல்
4. நெகிழும் தன்மை
5. தேவையான உத்தியோகத்தர்களும், மூலப்பொருட்களும்
6. சிறந்த அமைப்பு
7. அரசியல் கண்காணிப்பு
8. பொது மக்களுக்கு பொறுப்புச் சொல்லல்
9. சமூக அடிப்படைத் தேவைகள்
10. திறமைக் கொள்கை பொதுமக்கள் தொடர்பு
11. நவீன முறைகள்

### 3.4 சிவில் சேவையும் பணிக்குழு ஆட்சியும்

பொது நிர்வாகத்தினை சிவில் சேவை என்றும் தற்போது குடியியற் சேவை என்றும் குறிப்பிடப்படுகின்றது. நிர்வாகத்தின் பொதுத் தன்மையை பிரதிபலிப்பதோடு குடிமக்கள் நிர்வகிக்கப்படும் முறையினையும் குறிக்கின்றது.

இன்றைய அரசுகளின் தோற்றம் வளர்ச்சியில் பலாத்காரம் அல்லது அதிகாரம் முக்கிய இடத்தை பெற்றிருப்பதன் பிரதிபலிப்பாக பலம் வாய்ந்த இராணுவஅமைப்புக்கள் உருவாகியுள்ளன. சிவில்நிர்வாகம் இராணுவ நிர்வாகத்தினின்று வேறுபட்டுள்ளது. என்வே "குடியியல் நிர்வாகம் பொதுமக்கள் சம்பந்தமானது பொதுக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நிர்வாக அமைப்பினைக் குறிக்கும்"

பொது நிர்வாத்தினை சிவில் நிர்வாகம் என அழைக்கும் போது பொதுத் தன்மையினை அல்லது குடிமக்களுக்கான ஆட்சியமைப்பு என்பதை குறிக்கும் தனியார் நிர்வாகத்தினின்றும் வேறாகிப் பொதுக் காரியங்களுக்கானது என்பதை வெளிப்படுத்துகின்றது. அரசாங்க சேவை, பொதுநிர்வாகம் என்றும் குறிப்பிடப்படும் இது நிரந்தர நிர்வாக சேவையாகும்.

அரசியல் தலைமைத்துவம் மாறினாலும் ஆட்சி நிர்வாக இயந்திரம், நிரந்தரமாக உள்ளது. அலுவலக அமைப்போடு கூடிய "பியூரோகிறசி" என்ற ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இவ் வாட்சியமைப்பு பல நூறு பணியாளர்களைக் கொண்டு இயங்குவதால் ஆளணி நிர்வாகம் எனவும் அழைக்கப்படுகின்றது.

குடியியல் சேவை (சிவில் சேவை) மூலமே நடைமுறைப்படுத்தப்படும் பொதுநிர்வாகம் அரசாங்கத்தின் பல நிலைகளிலுமுள்ள பணியாட்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் குறிக்கும். அரசாங்கத்தின் தலைமைப் பதவியிலுள்ள உயர் நிருவாகிகளோடு மிகவும் அடிமட்டத்திலுள்ள கிராம அலுவலர்கள் வரை பெரும் எண்ணிக்கையில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதால் ஆளணி நிர்வாகம் எனப்படுகின்றது. ஆட்களை சேர்க்கும் முறையும், எதிர்பார்க்கும் தகமைகளும் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியும் மிகவும் நுணுக்கமாக வகுக்கப்பட்டுள்ளது.

சிவில் சேவை (குடியியல் சேவை) அரசாங்கசேவை, பொது நிர்வாகசேவை, பொதுமுகாமைத்துவ சேவை, ஆளணி நிர்வாகம், நிரந்தர நிர்வாக சேவை என பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் ஒவ்வொன்றும் ஒரே தன்மையான விஷயங்களை உள்ளடக்கியுள்ளன். சிவில் சேவை என்பதும் பொது நிர்வாகம் என்பதும் அது பொதுத் தன்மை கொண்டது என்பது அரசின் நிரந்தர அலகு என்பதும் தெளிவாகின்றது.

சிவில் சேவையினுடைய கட்டுமானம் பொதுத்தன்மை, கட்டுப்பாடுகள் ஆகியவற்றில் தனித்து விளங்குகின்றது. பொது ஆட்சியமைப்பு பெரும்பாலும் மக்கள் அபிப்பிராயத்திற்கும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்குகின்றது.

### 3.5 பொது சேவையின் இயல்புகள்

01. நிரந்தரமானது - மக்களாட்சியில் கொள்கைகளை வகுக்கும் அல்லது திட்டமிடும் அரசியல் தலைமை அவ்வவ்போது தேர்தல் பலாபலன்களைப் பொறுத்து மாறுகின்றது. ஆனால் சிவில் நிர்வாக அமைப்பு மாறாமல் நிரந்தரமாக செயற்படுகின்றது.

உதாரணம் :
நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு செய்து சேவையில் அமர்த்தப்பட்டால். இளைப்பாறும் காலம் வரை பதவியில் இருக்கின்றார். (நிரந்தர தன்மையால் வேண்டத்தகாத பண்புகளை உள்ளடக்குகின்றது என கண்டனங்கள் எழுகின்றன)

02. சிவில் உத்தியோகத்தர் தமதுநீண்ட கால பயிற்சி மூலம் அதிகாரங்களை கையாள தொடங்குகின்றார். அதிகாரமும் அனுபவமும் அரசஅலுவலர்களை ஒரு தனி இனமாக உருவாக்கி விடுகின்றது. (காலப் போக்கில் பொதுநலனை உதாசீனம் செய்து தமது நலன்களை பாதுகாக்க முனைவதன் மூலம் பணியாட்கள் என்ற நிலைமாறி ஆளும் வர்க்கமாக உருவெடுக்கின்றது என மொஸ்கா கூறுகின்றார்)

அரச நிர்வாக பணியாளர்கள் தமது கடமைகளினூடே தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாமல் தம்மைப் பிரசித்தப்படுத்தாமல் தமது கடமைகளை ஆற்றுகின்றார்கள். மாறாக அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் தமது கொள்கை முன்னெடுத்தலையும் திட்டங்களையும் வெற்றிகளையும் தீவிரமாக பறைசாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அடுத்து வரும் தேர்தல்களுக்கு பயன்படலாம். நிரந்தர நிர்வாகிகள் கூடிய அளவுக்கு சுய விளம்பரத்தினைத் தவிர்த்து தமது கடமையில் மட்டும் கவனம் செலுத்தி அரசியலைத் தவிர்த்துக் கொள்வதென்பது நிரந்தர அரச உத்தியோகத்தர்களது இயல்பாகும்.

### 3.6 பணிக்குழு ஆட்சி

அரசு வகுக்கின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நிருவாக அமைப்பிடம் தங்கியுள்ளது. அரசு வகுக்கின்ற திட்டங்களை சரியாக அமுல் செய்து நடைமுறைப்படுத்தி நாட்டிற்கு நன்மை தேடித் தருபவர் அரச நிர்வாகிகளே ஆவர். சாதாரண அலுவலர்களாகவும் உயர் மட்ட உத்தியோகத்தர்களாகவும் வகைப்படுத்துகின்றன. உயர்மட்ட நிர்வாகிகளை பணிக்குழு (Bureaucracy) என அழைக்கின்றார்கள். நிரந்தர உத்தியோகத்தர்களாகவும், அனுபவம் பெற்ற உயர் அதிகாரிகளாகவும், துறைசார்ந்த நிபுணர்களாகவும் உள்ளனர். உயர் அதிகாரிகளே அரசியல் தலைவர்கள், அமைச்சர்களுக்கு அறிவுரை வழங்குபவர்களாகவும் உள்ளனர்.

எல்லாத் தரவுகளும் சிவில் நிர்வாகத்தில் அனுபவமும், உள்ளதால் அவர்கள் தனிப்பட்ட முறையில் பணிக்குழு என அழைக்கப்படுகின்றார்கள்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் அல்லது தவிப்பதும் பணிக்குழுவின் கையில் தங்கியுள்ளது.

மாக்ஸ் வெபர் பணிக்குழு தனது நீண்ட கால அனுபவத்தின் மூலம் சில விழுமியங்களை வளர்த்துக் கொண்டுள்ளது எனக் கூறுகின்றார். முதலில் தொழில் அமைப்பாக உருவாகியுள்ளது. ஒரு வங்கியாளர், வைத்தியர் போன்ற அனுபவம் வாய்ந்த அரச நிர்வாகியும் ஒரு தொழில் சார்ந்த நிபுணர் ஆவர். சிவில் நிர்வாகிகளுக்கு தனிப்பட்ட உரிமைகளும் அதிகாரங்களும் திறமையாக அன்றாட பணிகளில் ஈடுபட வைக்கிறது. சிறப்பான பயிற்சியும் தேர்வுகளில் சித்தியும் அடைந்துள்ளார்கள். பணிக்குழுவினர் அரசாங்கத்திற்கு வேண்டிய தரவுகளைத் தந்து ஆலோசனை கூறினாலும் அரசியல் தலைவர்களே கொள்கைத் தீர்மானம் எடுப்பார்கள்.

பணிக் குழுவினருக்குப் பொறுப்புக்கள் அதிகம் சிவில் நிர்வாகத்தில் சேர்ந்து கொண்ட நாளிலிருந்து இளைப்பாறும் வரை பணியாற்றுவதால் அனுபவமும் பொறுப்பும் பொறுமையும் வேண்டப்படுகின்றது. உயர் அதிகாரிகள் அதிகாரத்தின் இருப்பிடமாக உள்ளதால் பொறுப்பும் தேசிய நலனும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்தித் திட்டங்களை நிர்வகித்து நாட்டின் நலனைப் பேணுகின்றார்கள். அலுவலகங்களுக்கு நேரத்திற்கு வந்த மற்ற பணியாளர்களுக்கு உதாரணமாக விளங்குவதன் மூலம் அதிகாரமும் பொறுப்புணரச்சியும் இணைந்துள்ளதையும், தேசிய நிதியைக் கையாளுவதிலும் அக்கறையும் பொறுப்புணர்ச்சியும் வேண்டப்படுகின்றது. பொது ஆட்சியியலில் மூத்த அலுவலர்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு நல்ல உதாணரமாக விளங்கி பணிக்குழு விழுமியங்களை முன்னெடுக்க வேண்டியது முக்கியமாகும்.

17ம் நூற்றாண்டின் சிறப்பாக வளர ஆரம்பித்ததாக மேலைநாட்டு அறிஞர்களான பிரான்ஸ் நாட்டில் ரிச்சிலு (Richelieu) மாசரின் (Mazsarn) கோல்பர்ட் (Colbert) ஆகியவர்களின் தலைமையில் பணிக்குழு வேரூன்றியதாக கூறுப்படுகின்றது. அப்போது மன்னராட்சியில் நிலை பெற்ற பணியகவமைப்பு நவீன அரசுகளில் சகல அரசு முறைகளிலும் நிலை கொண்டுள்ளது.

நவீன அரசுகளில் மக்களாட்சி அரசாங்க முறைகள் தங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நிர்வாக அமைப்புக்களைப் பெற்றுள்ளன. நிர்வாகப் பொறுப்புக்கள் யாவும் அரசாங்க பொதுத்துறை நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசியல் வாதிகள் சட்டசபைக்கு தெரிவு செய்யப்படும் போது சட்டம் பற்றி அறிவு குறைந்தவர்களாக காணப்படுவதனால் சட்டமன்றமும் அதன் தலைவர்களும் தேவையான

சட்டங்களையும் கொள்கைத் திட்டங்களையும் தாம் பெற்றுள்ள அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவைமூலமாக நிறைவேற்றும் பொறுப்பைப் பெற்றுள்ளனர். இதனால் பாராளுமன்ற ஆட்சி அமைப்புக்கள் அரசாங்கங்களின் அமைச்சர்கள் இவர்களின் உதவியின்றி செயற்படுவது கடினமானதாகி விடுகின்றது. அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் நடைபெறும் தேர்தல்களில் மாறினாலும் நிர்வாக செயல்கள் தொடர்ச்சியாக பொதுத்துறை நிர்வாகிகளினால் பொறுப்பேற்று நடாத்தப்படுகின்றது. பொதுத்துறை நிர்வாகிகள் அனுபவம், பயிற்சி காரணமாக அபிவிருத்தி பணிகளில் முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். வளர்முக நாடுகளான இந்தியா, இலங்கை, மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளில் பொதுத்துறை நிர்வாகிகளின் சேவை நன்கு உணரப்படுகின்றது. இவர்கள் நீண்ட கால அனுபவம் வாய்ந்தவர்கள் அதற்கேற்ப செல்வாக்கும் அந்தஸ்தும் பெற்றவர்கள் ஆவர்.

நவீன அரசுகளின் பொறுப்புக்களும் நடவடிக்கைகளும் பலவாறாக பெருகியுள்ளதனால் பொதுத்துறை நிர்வாகிகளின் பொறுப்புள்ள கடமைகளும் பெருகியுள்ளதுடன் அரச நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் பொறுப்பு அவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் பொதுத்துறை நிர்வாகிகள் இன்றி அரசாங்க நிர்வாக பொறிமுறை இயங்க முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது.

### 3.7 பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவம்

✠ மக்களின் குறிக்கோள்களை அடையுமுகமாக ஒன்றிணைந்து வேலை செய்து தங்கள் துணிவுகள் ஒன்றிணைக்கப்பட்டு அரசாங்கத்தின் பணிகளை மேற்கொள்வதைக் குறிப்பதும் பொதுக் கொள்கையினை நிறைவேற்ற மேற்கொள்ளும் ஒன்றிணைந்த முடிவுகளை ஒருங்கிணைப்பதும் பொதுத்துறை நிர்வாகமாகும். அதாவது அரசு சிறப்பாக இயங்குவதற்கும் நாட்டு மக்களின் தேவைகளைபூர்த்தி செய்யவும் அரசின் நோக்கங்களையும் இலக்குகளையும் முன்னெடுத்துச் செல்ல பொதுத்துறை நிர்வாகம் இன்றியமையாத ஒன்றாகும்.

01. மனிதனின் அறிவியல் முன்னேற்றம், தொழில்புரட்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, மக்கள் தொகைப் பெருக்கம் என்பவற்றால் மனிதனின் தேவைகள் அதிகரித்துள்ளன இத் தேவைகளை நிறைவேற்றி நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கு பொதுத்துறை நிர்வாகம் அவசியம்.

02. சட்டத்தையும், ஒழுங்கையும் பேணல், நீதிபரிபாலனம், தனியார் சொத்தைப் பாதுகாத்தல், உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடாமல் மக்களின் நாளாந்த தேவைகள் தொட்டு சகலதையும் நிறைவு செய்யும் ஒன்றாக பொதுத்துறை நிர்வாகம் விளங்குகின்றது.

03. நாட்டிலே சிறப்பான அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்ப பொதுத்துறை நிர்வாகம் முக்கியம் பெறுகின்றது.

04. அரசின் கொள்கைகளை செயற்படுத்தும் ஆட்சியமைப்பு விரைவுடனும் செயல்திறனுடனும் நேர்மையுடனும் செயலாற்றாது போகும் போது அரசின் நல்ல திட்டங்களும் சட்டங்களும் கொள்கைகளும் தமது அறிவு நிலைக்கேற்ப நடைமுறைப் படுத்துவதற்கு பொதுத்துறை நிர்வாகம் முக்கியமாகும்.

05. அரசாங்கத்தின் முப்பெரும் துறைகளான சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை போன்றவை மேற்கொள்ளும் செயல்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அரசாங்கம் மேற்கொள்வதை பொதுத்துறை நிர்வாகம், தன்னத்தே கொண்டுள்ளது. இதனால் பொதுத்துறை நிர்வாகம் முக்கியத்துவம் பெறுகின்றது.

06. நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை காலத்துக்குக் காலம் மாற்றமடைந்தாலும் நிர்வாகத்தின் பணிகள் மக்களை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர நிர்வாக உத்தியோகத்தர்கள் மூலம் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப் படுத்துகின்றனர். இதனால் பொதுத்துறை நிர்வாகம் முக்கியத்துவம் பெறுகின்றது.

07. இன்றைய நவீன காலத்தில் மக்களின் தேவைகள் பல்கிப் பெருகி உள்ளவேளையில் நிர்வாகப் பணிகளும் பல்கிப் பெருகியுள்ளன. இதனால் பொதுத்துறை நிர்வாகமின்றி அரசு செயற்பட முடியாதுள்ளதால் பொதுத்துறை நிர்வாகம் முக்கியத்துவம் பெறுகின்றது.

08. சிறப்பான தலைமைத்துவத்துடன் எல்லாத் தரப்பு மக்களையும் மகிழ்விக்கக்கூடிய வகையில் மனித மேம்பாட்டிற்கும் உதவி செய்து நாட்டினைக் கட்டியெழுப்ப அதாவது நாட்டினை அபிவிருத்தி செய்ய பொதுத்துறை நிர்வாகம் முக்கியமாகும்.

09. தனியார் நிர்வாகம் மக்களுக்குப் பயன்தரும் வகையில் செயற்பட்டாலும் தமக்கே உரித்தான பணி வரையறைகளுடன் தமது செயற்பாடுகளை இலாப நோக்குடன் செயற்படுத்துகின்றது. ஆனால் பொதுத்துறை நிர்வாகம் மக்களின் நலனைப் பேணும் வகையில் தொழிற்படுகின்றது. எனவே பொதுநிர்வாகம் முக்கியம் பெறுகின்றது.

### 3.2.0 பொதுக்கொள்கை (அரசகொள்கை வகுத்தல்) வகுத்தலும் அதன் நடைமுறைகளும்.

✠ பொதுக் கொள்கைகளை வகுப்பதும் செயற்படுத்துவதும் பொது நிர்வாகம் என்றும் இதுவே பொது ஆட்சியியல் ஆகும். என்றும் வரைவிலக்கணப்படுத்தப்படுத்துகின்றது.

✠ பொதுக்கொள்கை என்றால் தனியார் கொள்கை, தனியார் நலன் என்பவற்றிற்கு முற்றிலும் மாறானது

✠ கொள்கை என்பது தீர்மானங்களை மேற்கொள்ளல் நடைமுறைப்படுத்துதல் என்ற செயற்பாடுகளாகும். அதாவது "அரசியல் மூலம் சமூகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பெறுமானத் தொகுதியாகும்" என ஹரல்ட் லாஸ்வெல் குறிப்பிட்டுள்ளார்.

✠ தமக்குப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள துறைகளில் அனுசரிக்க வேண்டிய உபாயங்கள் பொதுக் கொள்கைகளாலேயே அரசுக்கு முன் வைக்கப்படும்.

✠ இன்றைய அறிவுமைய நூற்றாண்டில் பெரிதும் வேண்டப்படுகின்ற ஒரு சொல்லாகவும் மனித வாழ்வில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற ஒரு சொல்லாகவும் பொதுக்கொள்கை விளங்குகின்றது.

✠ இப்பொதுக் கொள்கையானது அரசாங்கத்தின் வழிகாட்டியாகவும் பொதுத்துறை நிர்வாகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது.

✠ அரச நடைமுறையில் குறிப்பாக பேசப்படுகின்ற முக்கிய அம்சங்களில் ஒன்றாகப் பொதுக்கொள்கை என்ற விடயம் பேசப்படுகின்றது.

✠ பொதுக் கொள்கையினை அடிப்படையாக் கொண்டு ஒருநாட்டினையும் அந் நாட்டின் அரசியல் கொள்கையினையும் அறிந்து கொள்ளலாம். பொதுக் கொள்கையானது "ஓர் அரசாங்கத்தின் உற்பத்தியாகும்" எனக் குறிப்பிடலாம்.

✠ எனவே உட்சூழலில் இருந்து கிடைக்கப்பெறும் கேள்வி நிரம்பல் நிலைமைகளைப் பொறுத்தும் வெளிச்சூழலின் தாக்கமான அரசியல் நடைமுறையும் சர்வதேச சமூகத்தின் அழுத்தமும் ஒரு கொள்கையின் இறுதி வெளியீட்டிற்குக் காரணமாகும்.

✠ பொதுக்கொள்கை வகுத்தலானது பிரதானமாக அரசியல் நிறைவேற்றதிகாரத்தின் ஒரு பொறுப்பாகும். பொருளாதாரக் கொள்கை, நலனோம்பல் கொள்கை, சுகாதாரக் கொள்கை வெளிநாட்டுக் கொள்கை என்றவாறாக அவ்வவ் துறைக்குரிய அடிப்படையான வழிகாட்டல்களை வழங்கும் திறமுறைகள் பொதுக் கொள்கையுடன் தொடர்புடையதாகும்.

✠ பொதுக் கொள்கை தொடர்பாக பல அறிஞர்கள் வரைவிலக்கணப் படுத்தியுள்ளனர்

Birkland என்பவர் பொதுக் கொள்கையானது “அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்றது. அராசங்கம் தான் எதனைச் செய்யவிரும்புகின்றது என்பதனை விளக்குவதே” பொதுக் கொள்கையாகும்.

Tnomas என்பவருடைய கருத்தின்படி அரசாங்கத்தின் மூலம் நாம் செய்யக்கூடியது எது? செய்யக்கூடாதது, எது? என்பவற்றுடன் தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானங்களே அரச கொள்கையாகும்.

✠ ஆகவே சமூக இலக்குகளை அடைவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கான அரசியல் தீர்மானங்களே பொதுக் கொள்கையாகும.

✠ பொதுக் கொள்கையின் எல்லைகள் பின்வருமாறு :

1. தேசத்தைக் கட்டியெழுப்புதல்
2. சமூக பொருளாதாரப் பிரச்சினை
3. சமாதானத்தினைப் பாதுகாத்தல்
4. பிணக்குகளைத் தீர்த்தல்
5. பொருட்கள் சேவைகளை வழங்கல்
6. தேசிய அபிவிருத்தி

### 3.2.1. அரசகொள்கை வகுத்தலின் பிரதான நிலைகள்

✠ பொதுக்கொள்கையில் கொள்கை முனைப்பு, கொள்கை உருவாக்கம், கொள்கை நடைமுறைப்படுத்துதல் அல்லது அமுலாக்கல், கொள்கை மதிப்பிடல் அல்லது பகுப்பாய்வு செய்தல் என்பன முக்கிய படிமுறைகளாகும்.

01. கொள்கை முனைப்பு (Policy Initiation)

இங்கு முன்னுரிமை அடிப்படையில் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை வியாக்கியானம் செய்தல், ஒழுங்குபடுத்தல் போன்ற பணிகளைச் செய்து கொள்கை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். இங்கு மாற்றுக் கொள்கைகள் இனங்காணப்படும்.

02. பொதுக்கொள்கை உருவாக்கம் (Policy formulation)

பொதுக் கொள்கை ஆரம்பிப்பு அல்லது உருவாக்கம் மிக முக்கியமானதாகும் கொள்கை தெரிவுகளை மேற்கொள்வதில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் முக்கியமானவர்களாவார் இவர்கள் பக்கச்சார்பாற்றவர்களாக இருக்க வேண்டும். மேலும் சிவில் சேவையாளர்களும் முக்கியமானவர்களாவர்.

✠ கொள்கை உருவாக்கத்தில் தரவுகளைச் சேகரித்தல் குறிப்பாக நிர்வாகத்துறை சட்டத்துறை தமக்கு தேவையான தகவல்களினை பின்வரும் வழிமுறைகள் மூலம் பெற்றுக் கொள்கின்றன.

01. உள்ளக தகவல் முறை

கொள்கை உருவாக்கத்திற்கு உள்ளக தகவல் முறை மிகவும் முக்கியமானது உள்ளக தகவல் முறையானது அரச திணைக்கள அறிக்கைகள், மதிப்பீடு, வருமானச் சான்றிதழ் போன்றவை கணக்கிலெடுத்து நிர்வாக உறுப்பினர்கள் தமது தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்கின்றனர்

02. வெளியக தகவல்முறை

உள்ளக தகவல் முறைக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இதனைப் பயன்படுத்துகின்றனர். இதில் தொழிற்சங்கங்கள் கணக்காளர் அமைப்புக்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

✠ கொள்கை உருவாக்கத்தின் அடிப்படைகள் வரையறை செய்யும் போது J.M.Gladen என்பர் பின்வருமாறு வரையறை செய்கின்றார். அவையாவன

1. பாராளுமன்றமானது அரசியல் மற்றும் பொதுவான கொள்கைகளை உருவாக்குகின்றது.
2. மந்திரி சபையானது நிறைவேற்று கொள்கையை உருவாக்குகின்றது.
3. அரசாங்க நிர்வாகிகள் நிறைவேற்று கொள்கையை உருவாக்குகின்றனர் குறிப்பாக நாளாந்த நடவடிக்கைகளை உருவாக்கி தொழில்நுட்ப ரீதியான கொள்கைகளை உருவாக்குவதனைக் காணலாம்.

03. கொள்கையை நடைமுறைப்படுத்தல் (Policy Implementation)

இச் சந்தரப்பத்தின் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் இது நிருவாகப் பணியாகும். பொதுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தலானது பொது நிருவாகத்தினால் மாத்திரம் தனியாகச் செய்யக்கூடிய ஒன்றல்ல என்பது இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தனியார்துறை, அரசசார்பற்ற நிறுவனங்கள் (தொண்டர் அமைப்புக்கள்) கணிசமான பங்கை வகிக்கின்றன. அவற்றுடன் கூட்டாகச் செயற்பாட்டை உருவாக்க வேண்டும்.

04. கொள்கை மதிப்பிடல் (Policy Evaluation)

கொள்கைமுலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப் பெற்றுள்ளதா என்பதை மதிப்பிடுவது இச் சந்தர்ப்பத்தில் நிகழும் கொள்கையை தொடர்ந்தும் முன்னெடுத்தல், அதனை மீண்டும் தயாரித்தல், கொள்கையை முடிவுறுத்தல் என்பன மதிப்பீட்டின் இறுதியில் நிகழும்.

நடைமுறைப்படுத்தும் அனுபவங்களை மதிப்பிடுதலும் பின்னூட்டல் செய்முறையும் இதில் அடங்கும்.

✠ கொள்கைகளை இனங்காணும் போது ஒரு நாட்டின் அரசியலமைப்பு முக்கியமானது. அந்த வகையில் அரசாங்கத்தின் திட்டங்கள் கொள்கைகள் அரசியலமைப்பினூடாக அறிய முடிகிறது. ஒரு நாட்டின் மந்திரசபை எவ்வளவு சிறப்பும் ஆற்றலும் உடையதாக விளங்குகின்றதோ கொள்கைகளை

அமுலாக்கம் செய்யப்படுவதிலும் சிறப்பாகச் செய்யற்படும். மேலும் திட்டமிடல் ஆணைக்குழு அரசுக்கு தேவையான ஆட்களையும் மூலவளங்களையும் திட்டமிட்டு ஒருங்கிணைக்கும் பணியினையும் மேற்கொள்கின்றது. இதனூடாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அவசியமான கொள்கைகள் உருவாக்கப்படுகின்றது.

✠ இவற்றினைவிட பொதுக் கொள்கையினை உருவாக்குகின்ற போது பின்வரும் அம்சங்களும் மிகவும் முக்கியமானவை

1. பிரச்சினைகளின் நிலைமை (Statemant of problems)
2. கொள்கையின் இலக்கும், நோக்கும் (The Goals & objectives)
3. இலக்குகளை அடைவதற்கான கட்டமைப்புக்கள்
4. வளத்தின் நிலமை

பொதுக் கொள்கையினை உருவாக்குகின்ற போது சிவில் சமூகத்துடன் இணைந்து செயற்படுதல் சிறப்பானதாகும்.

அரசாங்கம் → தனியார்துறை → சிவில்சமூகம்

✠ பொதுக்கொள்கையில் கொள்கைவட்டம் மிகமுக்கியமானது

### கொள்கை வட்டம் (Policy cycle)




இன்று பொதுக்கொள்கையினை அரசாங்கங்கள் உருவாக்குகின்ற போது கொள்கை வட்டத்தினைப் பயன்படுத்துகின்றனர். இப் பொதுக்கொள்கையில் கொள்கை ஒன்றினை உருவாக்குகின்ற போது பிரச்சினை ஒன்றிற்கு தீர்வு காண்பதாக அமைய வேண்டும். இரண்டாவதாகப் பிரச்சினையை வரையறை செய்தல். அதாவது சமூக, அரசியல், பொருளாதார ரீதியானதா என வரையறுக்க வேண்டும். அடுத்தபடியாக அப்பிரச்சினைத் தீர்வுக்கு மாற்றுவழியினை தெரிவு செய்து மதிப்பிட வேண்டும். எனவே இக்கொள்கை வட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற கொள்கைகள் சிறப்பானதாக அமையும் என பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

### 3.2.3 பொதுக்கொள்கை வகுத்தலின் அடிப்படை அம்சங்கள்

பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதையும், பொதுமக்களின் வசதிகளைப் பெருக்குவதையும் நோக்கமாகக் கொண்டது எதுவோ அதெல்லாம் பொதுக்கொள்கை எனப்படுகின்றது. இப்பொதுக்கொள்கையானது அரசாங்கம் என்ன செய்யவேண்டும்?, அதனை எவ்வாறு? எப்படி? செயற்படுத்தவேண்டும் என்பது பற்றி விபரிக்கின்றது. இப்பொதுக்கொள்கை இல்லாமல் அரசாங்கமோ நிர்வாகமோ இயங்கமுடியாது. இது பொதுவானதாகவோ, பரந்ததாகவோ, குறுகியதாகவோ, விரிந்த தாகவோ, எழுதப்பட்டதாகவோ, எழுதப்படாததாகவோ இருக்கலாம்.

பொதுக்கொள்கையானது அடிப்படையில் மூன்று விடயங்களைக் கொண்டு விளங்குகின்றது.

1. நோக்கமும் இலக்குகளும்
2. செயற்பாட்டு முறை ஒன்றினை வெளியிடல்.
3. சமூகப் பெறுமதி

இவ்வம்சங்கள் அரசாங்கத்துடன் தொடர்புடுபத்தியே இனங்காணப்படுகின்றது. அரசாங்கமானது தனது செயற்பாட்டின் பொருட்டு எதனைத் தெரிவுசெய்து கொள்வது என்பதுடன் தொடர்புடுகின்றது. இவ்வகையில் அரசு ஒன்றின் பொதுக்கொள்கையானது,

1. விசேட முன்மொழிவுகள்
2. அரசாங்கத்தின் தீர்மானங்கள்
3. அரசாங்கத்திஜன் வெளியீடுகள்
4. விளைவுகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும்

இப்பொதுக்கொள்கை வகுத்தலில் பின்வரும் அம்சங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

01. அரசியல் யாப்பிற்கு முரண்படாத வகையில் இருத்தல் வேண்டும்.
02. நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
03. இன, மத, மொழிரீதியான பேதங்கள் இல்லாதிருத்தல்.
04. சிறுபான்மையினரையும் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.
05. நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.
06. அதிகரித்த தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருத்தல் வேண்டும்.
07. நாட்டினுடைய தேசியத்தைக் கட்டியெழுப்புவதாக இருத்தல் வேண்டும்.

### 3.2.4 பொதுக்கொள்கைக்கும் பொதுநிர்வாகத்துக்கும் இடையிலான தொடர்பு

பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அரசாங்கத்தால் உருவாக்கப்படுவது பொதுக்கொள்கையாகும். இப்பொதுக்கொள்கையினை நடைமுறைப்படுத்துவது பொது நிர்வாகமேயாகும். இவ்வகையில் பொதுக்கொள்கைக்கும் பொது நிர்வாகத்துக்குமிடையில் பின்வரும் தொடர்புகள் காணப்படுகின்றன.

01. அரச கொள்கையினை அமுல்படுத்துகின்ற பகுதியே நிர்வாகமாகும்.
02. சில சந்தர்ப்பங்களில் நிர்வாகமே கொள்கைகளை உருவாக்கு கின்றது.
03. நிர்வாகத்தின் இறுதி இலக்கு அரசின் நோக்கங்களை நிறைவுசெய்தலாகும்.
04. கொள்கையின் வெற்றி தோல்வி நிர்வாகத்திலேயே தங்கியுள்ளது.
05. பொதுக்கொள்கையினை உருவாக்குதல், அமுல்படுத்தல், மதிப்பிடல், மேற்பார்வைசெய்தல், முகாமைசெய்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்ற பிரதான பகுதி நிர்வாகமேயாகும்.
06. நிர்வாகம் இயங்குவதற்கு கொள்கை அவசியம்.
07. வினைத்திறனான நிர்வாகத்திற்கு சிறந்த கொள்கை அவசியம்.
08. நாட்டு மக்களுடைய தேவைகளை பூர்த்திசெய்ய இவ்விரண்டு விடயங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகின்றது.

### 3.2.5 பொதுக்கொள்கை வகுத்தலில் (அரசகொள்கை வகுத்தலில்) பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள்

✠ அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் அதிகாரத் தீர்மானமே பொதுக்கொள்கையாகும். இப்பொதுக்கொள்கையானது சகல மக்களுக்குமாக அவர்களின் தேவைகளை நிறைவேற்றுமுகமாக இயற்றப்படுகின்ற கொள்கையாகும்.

✠ இன்றைய அறிவுமைய நூற்றாண்டில் பொதுக்கொள்கையினை வகுத்தலின்போது பல்வேறு நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. குறிப்பாக அரசின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் என்போர் முக்கியமானவர்கள். எனினும் இன்றைய நடைமுறையில் பின்வரும் நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. அவையாவன,

1. அரசியல்வாதிகள் - தமது அரசியல் கட்சிக்கிண ங்கவும் யாப்புக்கிணங்கவும் கொள்கை வகுத்தலில் ஈடுபடுகின்றன.
2. அரசாங்கம் - சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றினூடாக கொள்கை வகுத்தலில் ஈடுபடுகின்றன.

3. சிவில் சமூகம் - பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதன் மூலம் கொள்கைவகுத்தலில் ஈடுபடுகின்றன.
4. சர்வதேச நிறுவனங்கள் (UNO, SAARC, EU) - இடர்படும் மக்களை இனங்கண்டு அவர்களிற்கான தேவைகளை நிறைவேற்றுவதற்காக பொதுக்கொள்கைவகுத்தலில் பங்களிப்புச் செய்கின்றன.
5. ஊடகம் - பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் போன்றன பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதன் மூலம் கொள்கைவகுத்தலில் ஈடுபடுகின்றன.
6. நலன்பேண் குழுக்கள் - மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாகக் கொள்கைவகுத்தலில் ஈடுபடுகின்றன.
7. வர்த்தக சங்கங்கள் - மக்களின் தேவைகள், அபிப்பிராயங்கள் எள்பவற்றைக் கருத்தில் கொண்டு கொள்கை வகுத்தலில் ஈடுபடுகின்றன.
8. அரச சார்பற்ற நிறுவனங்கள் (GTZ, UNHCR, WHO, UNICEF) - மக்களின் நலன்கருதி கொள்கைவகுத்தலில் ஈடுபடுகின்றன.

**3.3.6 பொதுக்கொள்கை உருவாக்குவோரை இனங்காணல்**

பொதுக்கொள்கையை உருவாக்குகின்ற போது பல்வேறு நபர்கள் ஈடுபடுகின்றனர். அவ்வகையில்

01. உயர்நிலை சிவில் அதிகாரிகள் உ+ம் - அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்
02. அரசின் தலைவர்கள் உ + ம் - ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள்
03. உயர் குழாம் உ+ம் - நிலவுடைமையாளர், கல்வியாளர், வாண்மைத் தொழிலிலுள்ளோர்
04. அரசியற்கட்சிகள் உ + ம் - தாராண்மைவாதக்கட்சிகள், சோசலிசக்கட்சிகள், சமூகஜனநாயக கட்சிகள்
05. அரசியல் தலைவர்கள் உ+ ம் - கட்சிகளின் தலைவர்கள்
06. பொதுமக்கள்
07. ஊடகம் உ + ம் - பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி
08. நிர்வாகிகள் உ + ம் - அரசாங்க அதிபர், பிரதேச செயலர், ஆளுனர், முதலமைச்சர்
09. புலமையாளர்கள் உ + ம் - பேராசிரியர்கள், அரசியலாளர்கள், சட்டவல்லுனர்கள்
10. சிவில் சமூகம் உ + ம் :- சங்கங்கள், கழகங்கள்

### 3.7 பொதுக்கொள்கையை முகாமை செய்தல்

பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துகையில் பயன்படுத்தப்படும் பௌதீக, மனித வளங்கள் மூலம் உச்சப் பயனைப்பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள், உத்திகளை முகாமைத்துவம் எனலாம். அதாவது பௌதீக மனித வளங்களை மேலும் கூடுதலான பயனுடையதாக ஒழுங்காகக் கையாளுதல் முகாமைச்செயலினுள் நிகழ்கின்றது.

முகாமைத்துவம் தொடர்பாக முதன்முதலில் ஆராய்ந்த "பெட்ரிக் டேலர்" என்பவரின் கருத்துப்படி "பயனுறுதி, வினைத்திறன், பகுத்தறிவு, இலாபம் ஆகிய பெறுமானங்களின் உச்சமாக மிகச்சிறந்த முறையை விஞ்ஞானச் சோதனைகள் மூலம் கண்டறிதலே முகாமைத்துவம்" எனக்குறிப்பிடுகின்றார்.

மற்றுமொரு பழம்பெரும் முகாமைத்துவ விஞ்ஞானியாகிய ஹென்றி பெயோல் "முகாமைத்துவமானது திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், கட்டளையிடல், இணைப்பாக்கம், கட்டுப்படுத்தல் எனும் பணிகளை உள்ளடக்கியது" எனக்குறிப்பிடுகின்றார்.

நவீன முகாமைத்துவமானது புதிய தொழிநுட்பமும் மற்றும் விஞ்ஞானத்தின் புரட்சியும் இணைந்து உருவாகி உள்ளது. இன்று இது மின் ஆட்சி (E-GOVERNANCE) வரை முன்சென்றுள்ளது. இணையம், முகாமைச்செயன்முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

எனவே பொதுமுகாமைத்துவமானது ஆட்சி செய்தலை வலியுறுத்தவில்லை. மாறாக பயனுறுதி மிக்க பொதுத்திறனாய்வை அது வலியுறுத்துகின்றது. இவ்வாறானவற்றை வகுப்பதன் பெறுபேறாக நல்லாட்சி (Good Governance) சமூகத்தைச் சென்றடையும்.

பொதுக்கொள்கையினுடைய இறுதி இலக்கு கொள்கை முகாமைத்துவமாகும். இவ்வகையில் Fudge என்பவர் கொள்கையினுடைய முகாமைத்துவ மூல தத்துவங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றார். அவையாவன,

1. எதனை செய்யவேண்டும் என அறிந்திருத்தல்.
2. தேவையான வளங்கள் கிடைக்கப்பெறுதல்.
3. தேவையான அளவு வளங்களைக் கட்டுப்படுத்துவதையும், வேலை வாங்குவதையும் அறிதல்.
4. ஏனையவர்கள் தொடர்ந்து பணியாற்றும் வகையில் முதலில் இருந்தவர்கள் தாம் பெற்ற அறிவினைப் பிறருக்கு வழங்குதல் என்பனவாகும்.

இதனை விட போதுமான மூலதனம், மனித வளங்கள் என்பன மிக முக்கியமானதாகும். அவற்றை அடைவதற்காக இரண்டு அம்சங்கள் கொள்கை அமுலாக்கத்தில் அடிப்படையாகின்றன.

1. திட்டமிட்ட இலக்கினை அடைவதற்கான நிர்வாக ஆற்றல்.
2. அரசியல் நீதித்துறை சார்ந்த ஆதரவு.

மேலும் பொதுக்கொள்கை முகாமைத்துவமானது உருவாக்கப்பட்ட பொதுக்கொள்கையினை மேற்பார்வை செய்தல், ஓர் அரசாங்கத்தின் சிறப்பான வெற்றிக்கும், தோல்விக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது கொள்கை முகாமைத்துவமாகும். இதன் அடிப்படைகளாக பின்வருவன அமைகின்றன.

1. நிதியைப் பகிர்ந்தளித்தல்
2. கடன்களை உருவாக்குதல்.
3. நன்கொடைகளை வழங்குதல்.
4. ஒப்பந்தங்களை உருவாக்குதல்.
5. தரவுகளை சேகரித்தல்.
6. பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்தல்.
7. நிறுவன அலகுகளை உருவாக்குதல்.
8. மாற்று வழிகளை முன்வைத்தல்.
9. எதிர்காலத்திற்காக திட்டமிடுதல்.

இவ்வடிப்படையிலேயே பொதுக்கொள்கை முகாமை செய்தல் நடைபெறுகின்றது.

## 3.8 முகாமைத்துவத்திற்கும் பொது நிர்வாகத்திற்கும் இடையிலான தொடர்புகள்

- பொது நலன்களை எட்டுவதற்கான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வது சிறந்த நிர்வாகத்தின் நோக்கமாகும். இந்நிர்வாகம் அமைக்கப்பட்ட பணி அமைப்பைத் தடையேதுமின்றி இயக்கி நிற்பதாகும். அதாவது முறையாகவும் நிறைவாகவும் இயக்கவும், பலனை எட்டவும் சிறந்த முகாமைத்துவம் அவசியமாகும்.
- முகாமைத்துவம் முக்கியமாக தலைமைத்துவத்தினையும் செயலாட்சியையும் குறிக்கும்.
- கொள்கை வகுப்பு எடுக்கும் தீர்மானங்களை வெற்றிகரமாக நெறிப்படுத்தும் கலையையும் அறிவியலையும் விளக்குவது முகாமைத்துவமாகும்.
- பொதுமக்கள் சமூகம் பிரதேசம் வரையில் அதாவது கால மட்டங்கள் வரையில் சென்று பிரச்சனைகளை இனங்கண்டு கொள்வதற்கும் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும் சேவைகள் வழங்குவதற்கும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கும் நிர்வாகம் செயற்பட வேண்டியுள்ளது.
- பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது பொது நிர்வாகமானது முகாமைத்துவம் எனும் செயற்பாட்டுக்கு அப்பாலும் உள்ள பணிகளுடனும் தொடர்புறுகின்றது.

✠ நிர்வாகம், முகாமைத்துவம் என்பன ஒத்தகருத்துடையன போல் தோன்றினாலும், நிர்வாகம் வேறு முகாமைத்துவம் வேறு. நிர்வாகம் பொது ஆட்சி அமைப்பினையும் அதன் குறிக்கோள்களையும் குறித்துநிற்க முகாமைத்துவம் குறிக்கோள்களை அடையும் மார்க்கத்தினை மட்டும் சுட்டி நிற்கின்றது. ஆனால் முகாமைத்துவம் எனப்படும் வழிநடத்தல் இன்றி ஆட்சி நிர்வாகம் இயங்க முடியாது.

✠ எல்லா நிர்வாகிகளும் முகாமையாளர்களல்ல எல்லா முகாமையாளர்களும் நிர்வாகிகளல்ல எனக்குறிப்பிடப்படுகின்றது.

# மோதலும் மோதல் தீர்வுகளும்



## 4.0 மோதலும் மோதல் தீர்வுகளும்

### அறிமுகம்

மனித சமூகத்தில் பல்வேறுபட்ட இயல்புடைய நபர்கள் வாழ்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கிடையேயும் தனியாள் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பு. அவர்கள் ஒவ்வொருவரும் உடலமைப்பில், நுண்ணறிவில், நிறத்தில், சமூக அந்தஸ்தில் பேசும் மொழியில் வேறுபட்டவர்கள். இது இயல்பாகவே மனிதனிடம் காணப்படும் தன்மையாகும். இத்தகைய தன்மை பல்வேறு முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் காரணமாக அமைகின்றது.

ஒரு விடயம் அல்லது சம்பவம் தொடர்பாக ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்தைக் கொண்டிருப்பர். இப்பல்வகைமை மோதல்களுக்கு இட்டுச்செல்லவாம். இப்பல்வகைமை காரணமாக சகல படித்தரங்களிலும் மோதல் நிகழ்கின்றது. இது சமூகத்தில் காணப்படும் பல்வேறு கருத்துக்களையும் போட்டா போட்டி நிலைப்பாடுகளையும் வெளிக்காட்டும் ஒரு ஊடகம் ஆகும். மோதல், சமூக நடத்தையின் போது ஆக்கபூர்வமானதாகவோ, அறிவுபூர்வமாகவோ இருக்க இடமுண்டு. மேலும் மோதலானது சமூக இயக்கத்தன்மையின் ஒரு சக்தியும் ஆகும்.

மோதல் என்னும் பதத்துக்கு பிணக்கு (Dispute) நெருக்கடி (Crisis) சண்டை (Fight) வன்முறை (Violence) போன்ற பதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் மோதல்களுக்கும் இப் பதங்களுக்கிடையில் தெளிவான வேறுபாடுகளை ஆய்வறிவாளர்கள் நோக்குகின்றனர்.

### மோதல் பற்றிய அறிஞர்களது கருத்துக்கள்

ஒன்றுக்கொன்று முரனான கருத்துள்ள இருவர் அல்லது பலர் வாய்மொழியாக அல்லது உடல் ரீதியாக அல்லது ஆயுதங்களால் மேற்கொள்ளும் கிளர்ச்சி மோதலாகும்.

- மோதல் என்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களுக்கிடையிலான உறவாகும். இவர்கள் மோதலுக்கான இலக்குகளைக் கொண்டிருப்பார்கள்

  \- Christopher Michell

- மோதல் என்பது ஒருவரின் இதயத்தில் அல்லது மனதின் வெளியீடாகும்

  \- கௌதம புத்தர்

- மோதல் என்பது இருசாரார் அல்லது பல கட்சியினர் ஒரே நேரத்தில் அரிதாக உள்ள ஒரே வளத்தை தனதாக்கிக் கொள்ள முயல்வதால் ஏற்படும் நிலையாகும்

  \- பீற்றர் வொலஸ்டீன்

⌘ போட்டா போட்டியான அபிலாசைகள் பல்வேறுபட்ட தனித்துவங்கள் மற்றும் மனப்பாங்கு மாற்றங்கள் காரணமாக ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கிடையே உருவாகும் எதிர்ப்பை மோதல் எனலாம்

- James-A-Schellenberg

⌘ ஒன்றுக்கொன்று எதிரான குறிக்கோள்கள் இலக்குகளை அடையும் முயற்சியின் போது சுயாதீனமான தனியாட்களுக்கு இடையில் நிகழும் இடைத்தொழிற்பாட்டை மோதல் எனக் குறிப்பிடலாம்

- J.L.Hocker and W.W.Wilmot

⌘ ஒன்றுடனொன்று பொருந்தாத குறிக்கோள்களைக் கொண்ட ஆட்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அது தொடர்பாக கருத்து வெளியிடும் போது சமூக மோதல்கள் தோன்றும்

- Lovis Kriesourz

⌘ வன்முறையான எதிர்ப்படுத்தல், ...... உளரீதியில் நிகழும் போராட்டமே மோதல் ஆகும்

- The Webster English Dictionarg

⌘ ஆட்குழுக்கள் அல்லது அரசுக்கள் பாரதூரமான இணக்கப்பாட்டின்மைகள் அல்லது விவாதத்துக்குள்ளாகியுள்ள நிலைமைகளில் மோதல்கள் உருவாகும்

- The Oxford Dictionary

⌘ 1960களில் பிற்பகுதியில் யொகான் கல்டுங் (Johan GalTung) மோதலினை விளங்கிக்கொள்ள மோதல் முக்கோணியினை அறிமுகப்படுத்தினார். இவர் மோதலானது ஒத்திசைவு, ஒத்திசை வின்மை ஆகியவற்றினால் ஏற்படுகின்றது. எனக் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிட்ட மோதல் முக்கோணி



### உளப்பாங்கு

உளப்பாங்கு என்பது உணர்ச்சிகள், நம்பிக்கைகள், விருப்புக்கள் என்பவற்றால் ஏற்படும் பயம், கோபம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகளின் செல்வாக்குக்கு உட்படுவதாகும். இது நேர் நிலையானதாகவும், எதிர் நிலையானதாகவும் அமையலாம்.

### நடத்தை

ஒத்திசைவின்மை நிகழ்கின்றபோது தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவும் மோதல் நடத்தைகளாகும். இவை பயமுறுத்தல்கள் மற்றும் அழிவினைத்தரும் தாக்குதல்களாக அடையாளம் காணமுடியும்.

### ஒத்திசைவின்மை

ஒத்திசைவின்மை என்பது மோதல் சூழ்நிலையைக் குறித்துநிற்கின்றது. ஒத்திசைவின்மை பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

1. வளங்கள்
2. விழுமியங்கள்
3. உறவுகள்

அரிய வளங்களை ஒரே நேரத்தில் பலர் பெற்றுக்கொள்ள முனைகின்றபோதும், ஒரு சாரார் நம்பும் விழுமியங்களை மறு சாரார் அவமதிக்கும் போதும் அல்லது மறுசாரார் மீது திணிக்கும்போதும், "அன்பு" என்ற அருவுணர்வு சமூக உறவை இணைக்காதபோதும் சூழலமைவு ஒத்திசைவற்றதாகின்றது என கல்டுங் மோதல் முக்கோணி மூலம் மோதலை விளக்கியுள்ளார்.

### மோதல் மூலகங்கள்

உள்நாட்டு மோதல்களுக்கான காரணங்களை தமது ஆய்வின் மூலம் மைக்கல் பிறவுன் (Michael - Brown) முன்வைக்கின்றார். அவைகளாவன

1. கட்டமைப்பு காரணிகள்
2. அரசியல் காரணிகள்
3. சமூக பொருளாதார காரணிகள்
4. கலாசார உணர்வுபூர்வமான காரணிகள்

#### 1. கட்டமைப்பு காரணிகள்

நலிவான அரசுகள், அரசுகளின் உள்வாரியான பாதுகாப்புப் பிரச்சினைகள், இனவேறுபாடுகள், (பௌதீக வளங்கள், புவியியல் அமைவிடம்) அரசியல் எல்லைப்பிரச்சினை முதலான காரணிகள் உள்ளடங்கும்.

2. அரசியல் காரணிகள்

பாரபட்சமான அரசியல் நிறுவனங்கள், வினைத்திறனற்ற அரசியல் நிறுவனங்கள், அரசியல் நிறுவனங்களில் ஏற்படும் மாற்றங்கள், தேசிய கருத்துக்கள் பிரிந்து செல்கின்ற தேசியக்கொள்கைகள், குழுவாத அரசியல், உயர்குழாம், அரசியல், விகிதசமனற்ற பிரதிநிதித்துவம் முதலான விடயங்கள் உள்ளடங்கும்.

3. சமூக பொருளாதார காரணிகள்

பாரபட்சமான பொருளாதார முறைமை, நவீனமயமாக்கம், பொருளாதார அபிவிருத்தியின் எதிர்மறைவான விளைவுகள், சமமற்ற வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக்கள என்பன அடங்குகின்றன.

4. கலாசார உணர்வுபூர்வமான காரணிகள்

சிறுபான்மையினருக்கு எதிரான சமயச்சுதந்திரம் மீதான கட்டுப்பாடுகள், மொழியினைப பாவிப்பதில் கற்பதில் கட்டுப்பாடுகள், அநீதியான கல்விவாய்ப்புக்கள், ஒரு குறித்த குழுவின் வரலாற்றுணர்வு முக்கியத்துவப்படுத்தப்பட்டு ஏனைய குழுக்களின் உணர்வுகள் மறுக்கப்படுதல்.

**மோதல் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய காரணிகள்**

- தேவைகள் விருப்புக்கள்
- பெறுமானங்கள்
- சூழல் நிலைமைகள்
- குறிக்கோளை அடைவதற்காக மக்கள் கையாளும் வழிமுறைகள்
- தொடர்பாடல் முறிவடைதல்
- மக்களின் அறியாமை
- சீரான சமூக மயமாக்கம் இன்மை
- புத்திசாதுரியமின்மை
- இயற்கையான ஆக்கிரமிப்புச் சுபாவம்
- சுயநலம்
- உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டு மாற்று வழிகளைத் தேடாது தீர்மானங்களுக்கு வருதல் போன்ற காரணிகளினால் சிறிய அளவு மோதல்கள் உலக யுத்தம் வரையிலான மோதல்களை ஏற்படுத்துகின்றன.
- அதிகாரத்துக்கான போட்டி
- வளங்களுக்கான போட்டி

## மோதலின் இயல்புகள்

01. எதிர்த்தரப்பினர் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர் காணப்படுதல்.
02. அவர்கள் பரஸ்பரம் எதிரான வழிமுறைகளில் ஈடுபடுகின்றமை.
03. அவர்களது பரஸ்பர எதிர்த் தொழிற்பாடானது வளத்தட்டுப்பாடு அல்லது நிலைமைகளின் விகித சமமின்மை காரணமாக உருவாகின்றது.
04. அவர்களது நடத்தையானது எதிர்த்தரப்பினருக்கு பாதிப்பு ஏற்படுத்துதம் மற்றும் நோக்கமாக கொண்டது.
05. அவர்களது பரஸ்பரத் தொழிற்பாட்டில் மோதலை வெளிப்படையாகக் காணமுடியும். அத்தோடு வெளித்தரப்பினர் அதனை மதிப்பிடவும் முடியும்.
06. மோதல் ஆக்கபூர்வமானதாகவோ அழிவுபூர்வமானதாகவோ அமையலாம்.
07. மோதல்களில் பாதகமான சாதகமான இயல்புகளும் காணப்படும்.
08. மோதல்களில் சமூக இயக்கத்தின் ஒரு காரணி அதாவது சமூகத்தை முன்னேற்றும், மாற்றியமைக்கும் அல்லது அபிவிருத்தியடையச் செய்யும்.
09. மோதல் பல்வேறு தேக்க நிலைகளைத் தருகிறது.
10. பிரச்சினைகளுக்கான தீர்வினை எட்டக்கூடியதாக உள்ளது.
11. மோதல் மூலம் புதிய சமூகச்சமநிலை நிர்ணயிக்கப்படுகின்றது.
12. மோதலானது வேறுபாடுகளை மேலும் ஆழமாக்கும்.

## மோதலின் தன்மையை இனங்காணும் விதமும் அதனை வகைப்படுத்தலும்

மோதல் அதன் தன்மைக்கேற்ப பல்வேறு விதமாக வகைப்படுத்தப்படுகின்றது.

1. **எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில்**
   - ✡ ஆசைகள் தொடர்பான மோதல்,
   - ✡ பெறுமானங்கள் தொடர்பான மோதல்,
   - ✡ தொடர்பு தொடர்பான மோதல்
2. **வலுவின் அடிப்படையில்**
   - ✡ சமச்சீரான மோதல்கள்
   - ✡ சமச்சீரற்ற மோதல்கள்
3. **அழிவின் அடிப்படையில்**
   - ✡ உள்நாட்டு அரச மோதல்கள் (அரச மோதல்)
   - ✡ அரசுகளுக் கிடையேயான மோதல்கள்

## மோதலும் அதன் செயன்முறை

சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், பற்றாக்குறைகள், கருத்துவேறுபாடுகள், மோதல்களைத் தோற்றுவிக்கின்றன. இம் மோதல்கள் இறுதியில் சமூக மாற்றத்திற்கு காரணமாகின்றன.

மோதல்களினை நாம் இயற்கையாக எதிர்மறையாகக் கருதுகின்றபோதிலும் உண்மையில் மோதலின் வதிபாகம் ஆனது ஒரு போட்டியான மதிப்படுகளையே எமக்கு வழங்குகின்றன.

மோதலானது சமூகத்தின் பிரதான இயங்கு சக்தியாகும். மனித சமூக முன்னேற்றத்தை வழிநடத்திச் செல்கின்றது. சமூகத்தை மாற்றியமைக்கின்றது. சமூகத்தின் அதியுயர் அபிவிருத்திக்கு இட்டுச்செல்கின்றது. எதிர்காலத்தில் புதியதோர் சமூகத்தைத் தோற்றுவிப்பதுடன் முன்னேற்றகரமாகவும் அமையும். இந்த வகையில் சமூக மாற்றத்தில் மோதல்ச்செயன்முறை பயனுடைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

சமூகவியலாளரான ஜோர்ச் சிமல் தனது சமூக மோதல்கள் என்னும் நூலில் "மோதல்கள் பலதரப்பட்ட தேக்கநிலைகளைத் தருகின்றது, பிரச்சினைக்குரிய தீர்வினை எட்டக்கூடிய மூலமாக அமைகின்றது, ஒரு விடயம் பற்றி பரீட்சிக்கின்ற மதிப்பீடு செய்கின்ற செயற்பாட்டுப்பகுதியாக உள்ளது" என்று கூறுகின்றார்.

"மோதல் சமூகத்தின் வழமையான செயற்பாட்டைப் பலப்படுத்தப்படுகின்றது. ஒற்றுமையைக் கட்டியெழுப்புகின்றது" என கோர்சர் குறிப்பிடுகின்றார்.

## மோதலும் வன்முறையும்

சமூகத்தில் காணப்படும் வன்முறையை Johan gultung மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.

1. நேரடியான வன்முறை - இங்கு கூடியளவு வன்முறை காணப்படும். பொதுப்பிரஜைகள் அதிகம் பாதிக்கப்படுவர்.
2. கட்டமைக்கப்பட்ட வன்முறை - இது வீடுகளில் இடம்பெறும் வன்முறை நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கையில் பாரபட்சம் காணப்படுதல்.
3. பண்பாடு சார்ந்த வன்முறை - இது பரஸ்பர புரிந்துணர்வு இன்மையால் இவ்வன்முறை ஏற்படுகின்றது.

மோதல்கள் உச்சக்கட்டத்தினை அடையும்போது அது வன்முறையாக மாறுகின்றது. "வன்முறை என்பது நன்றாக அல்லது பிழையாகப் பயன்படுத்தப்படும் முரட்டுத்தனம் பற்றிய விடயம் ஆகும்" என மாக்கியவல்லி குறிப்பிடுகின்றார்.

இதே போன்று தோமஸ் கொப்ஸ் "வன்முறை அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள அவசியமானது" எனக்கூறுகின்றார்.

எனவே இவ்விரு அறிஞர்களும் மோதல்களை வன்முறையின் மூலம் தீர்க்கலாம் என நம்புகின்றனர். மாக்ஸிசக் கோட்பாடும் மோதலுக்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கூறுகின்றது. "அடக்குமுறையாளர்களுக்கு எதிரான அடக்கப் படுபவர்களின் வன்முறை நீதியானதும் நியாயமானதும் ஆகும்" என மாக்ஸ் கூறுகின்றார். மாக்ஸிசத்திற்கு பின்னரான தேசியவாதக் கொள்கைகள், காலனித்துவத்துக்கு எதிரான கொள்கைகள் வன்முறையை விடுதலைக்கான கருவியாகப் பயன் படுத்துகின்றனர்.

## மோதலும் அகிம்சையும்

மோதலுக்குத் தீர்வு காண்பதற்கு வன்முறைஅற்றதும் அமைதியானதுமான ஓர் அணுகுமுறை அகிம்சைமுறை ஆகும். மோதல்கள் உச்சக்கட்டத்தினை அடையும்போது அகிம்சை வழிமூலம் தீர்க்கப்படுகின்றது. எனவே மோதலுக்கும் அகிம்சைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

அகிம்சை என்பது வன்முறையற்ற தன்மையை மட்டுமன்றி வன்முறையற்ற அன்பையும் குறிக்கின்றது. அதுமோதலை நிராகரிக்கவில்லை. ஆனால் வன்முறையை நிராகரித்து மோதலை மீள வரையறுக்கின்றது. அகிம்சை என்பது உணர்வு நிலைப்பட்ட துன்பமாகும்.

மோதல் தீர்வுக்கான வெற்றிகரமான அனுபவங்களை அகிம்சை கொண்டிருக்காவிட்டாலும் அகிம்சைப் போராட்டம் பாரிய சமூக அரசியல் மாற்றங்களுக்கான கருவியாக எழுச்சியடைந்துள்ளது.

உ + ம் - 1. மகாத்மாகாந்தி வழிநடத்திய இந்திய சுதந்திரப் போராட்டம்

2. மாட்டின் லூதர்கிங் வழிநடத்திய கறுப்பு இன மக்களின் சிவில் உரிமைகளின் இயக்கம்.

அரசுகள் இணக்கப்படுதல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் போன்ற உடனடிவெற்றிகளை மோதல்கள் உறுதிசெய்தாலும் வன்முறையானது அதே இயல்பில் மேலதிக வன்முறைகளுக்கு வழியேற்படுத்தி தற்காலிக வெற்றிகளை உருவாக்கலாம். வன்முறையால் வருகின்ற சமாதானம் உண்மைச் சமாதானமாகக் கொள்ள முடியாது.

எந்த மோதலையும் வன்முறைமூலம் தீர்ப்பது சாத்தியமற்றது என்பது அகிம்சையின் சாராம்சமாகும். மோதலினை அகிம்சை மூலம் தீர்ப்பதற்கு முயற்சிக்கின்றபோது அவை சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் அகிம்சை மூலம் இலகுவாக மோதல்கள் தீர்க்கப்பட வாய்ப்புக்கள் இருப்பதால் மோதலுக்கும் அகிம்சைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது.

## மோதலைத்தீர்த்தல்

மோதல் தீர்வு என்ற பதம் மோதல்கல்வியில் மாத்திரமன்றி மோதலுடன் தொடர்புடைய செயன்முறைச் செயற்பாட்டுப்பரப்பிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. மோதல் தீர்வு என்பது தென் மட்டுப்படுத்மதப்பட்ட கருத்தில் "மோதலிற்கு இட்டுச்செல்லும் காரணிகளின் குறைப்பு" என்பதைக் குறிக்கின்றது. பெரும்பாலான கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள், யுத்தத்துறை சிறப்பறிஞர்கள், இராஜதந்திரிகள் தாம் தொடர்புற்றிருக்கும் துறையில் மோதல் தீர்வு என்பதை வரைவிலக்கணப்படுத்த முயற்சி செய்துள்ளனர். யுத்தத்துறை சிறப்பறிஞர்கள் மோதல் தீர்வு எனும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இது அச்சுறுத்துவதனுடாக வெற்றிகரமான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருதல் மூலம் அல்லது இராணுவ அதிகாரத்தை வெற்றிகரமாக பிரயோகித்தல் மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் அல்லது தவிர்த்தலைக் குறிக்கின்றது. இந்த இராணுவ மோதல் தீர்வில் அடங்கியுள்ள வன்முறைத்தன்மை, அழிவை ஏற்படுத்தும் தன்மை காரணமாக மறுதலிக்கும் தன்மையும் உள்ளது. எனினும் மோதல் தீர்வுக்கு அதிகாரத்தைப் பிரயோகிப்பது அவசியம் என்ற அபிப்பிராயத்துக்குச் சார்பான கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது.

மோதல் தீர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் மற்றொரு பிரிவினர் மேலே விபரிக்கப்பட்ட எண்ணக்கருக்களுடன் மேலும் மோதல் தவிர்த்தல், மோதல் இணக்கப்படுத்தல், மோதல் தீர்த்தல், மோதல் நிலைமாற்றம் ஆகிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பரந்ததோர் செயன்முறை எனக் கூறியுள்ளனர்.

மனித சமூகங்களில் போட்டிமிக்க இலக்குகள் ஒத்துவராதபோது மோதலானது கிளர்ந்தெழுகின்றது. வொலன்ஸ்ரீன் என்பவர் மோதல் தீர்வு எனும் எண்ணக்கருவானது "மோதலில் ஈடுபடும் கட்சிகளின் வெளிப்படையான விருப்பங்களுக்குஇடமளிக்கும் வகையில் தேடலுடன் இணைக்கப்பட்டுள்ளது எனக் கூறுகின்றார்.

### மோதல் தவிர்ப்புக்கான பிரவேசம்

1. விருப்பத்தின் பேரிலும் தேவையின் பேரிலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல்.
2. ஒரு பிரிவினரின் கருத்து மற்றைய பிரிவினரின் கருத்திலிருந்து வேறுபடும் விடயங்களை இனங்கண்டு கொள்ளல்.
3. இரு பிரிவினருக்கும் இடையிலான கருத்து வேற்றுமையுள்ள விடயங்களைத் தணிப்பதற்காக புதிய மாற்றுக்கருத்துக்களை உருவாக்கல்.
4. மிகவும் பொருத்தமான ஒரு தீர்வுக்குள் பிரவேசித்தல்.

இதன் மூலம் தனிநபர்களுக்கிடையில் ஏற்படும் சிறிய மோதல் முதல் பாரிய அளவிலான உலக யுத்தம் வரையிலான மோதல்களுக்குத் தீர்வு காணும் வழிகாட்டல் கிடைக்கும்.

**பேச்சுவார்த்தை மூலம் மோதலைத் தீர்க்கும் போது சகல தரப்பினரும் கவனிக்க வேண்டிய விடயங்கள்.**

1. மற்றவர் கருத்துக்களைப் பொறுமையுடன் கேட்டல்
2. அவர்களின் கருத்துக்களில் உள்ள பெறுமானங்களை விளங்கிக் கொள்ளல்.
3. தமது கருத்தில் மட்டும் பிடிவாதமாக இருக்காது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளல்.
4. ஒத்துழைப்புடன் புதிய பொதுக்கருத்தை உருவாக்குதல்

மோதல் வெற்றிகரமாகத் தீர்க்கப்படும் பட்சத்தில் அது மேலும் பல பிரச்சினைளுக்குத் தீர்வாக அமைகின்றது. ஆழமான மோதலின் தீர்வு, அம்மோதலுக்கு ஏதுவான மேற்தளத்திலுள்ள சில பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமைய முடியும்.

மோதல் தீர்வு புரிந்துணர்வை ஏற்படுத்துகின்றது, விழிப்புணர்வை விரிவுபடுத்துகின்றது, குழு ஒருமைப்பாட்டை உருவாக்குகின்றது. வினைத்திறன் மிக்க விதத்தில் முரண்பாடு ஒன்று தீர்க்கப்படுமிடத்து குழு உறுப்பினர்கள் பரஸ்பர ரீதியான மதிப்பினை பலமானதாக விருத்தி செய்ய முடியும். அத்துடன் தம் ஆற்றலில் புதிய நம்பிக்கை உருவாகும். சுய அறிவினை முன்னேற்றிக் கொள்ள முடியும்.

மோதல் தீர்வு வினைத்திறன் மிக்க வகையில் கையாளப்படாத பட்சத்தில் அதன் விளைவுகள் அழிவு சார்ந்ததாகவே அமையும்.

## மோதல் முகாமைத்துவம்

மோதல்களைக் கையாள்வதற்கான ஓர் உத்தியாக 1980களின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு செய்முறையாக "மோதல் முகாமையை" குறிப்பிடலாம். இதில் முதன்மையான மைய விடயம், மோதலுடன் தொடர்புடைய தரப்பினரிடத்தே உடன்பாடான ( + ) நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படத்தக்க வன்முறைகளை வரையறைப்படுத்தலும் தவிர்த்தலுமாகும்.

வன்முறை மோதலை வரையறைப்படுத்துவதற்கும் மோதல் பரவுவதைப் பகுத்தாய்வதற்குமாகவே "மியாலும்" அவரது குழுவினரும் மோதல் முகாமை எனும் பிரயோகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

உயிரோட்டமான மோதலொன்றுடன் தொடர்புறும் பின்வரும் குறிக்கோள்களை உச்ச அளவுக்கு அடைதலே மோதல் முகாமையின் எதிர்பார்ப்பாக அமைகின்றது.

1. மோதலின் வன்முறையையும் அழிவுமட்டத்தையும் இழிவளவாக்கல்.
2. மோதலின் உக்கிரத்தன்மையையும், மக்களை அழிக்கும் வகையிலான ஆயுதங்களைப் பயன்படுத்தும் நிலைமை வரை பரவுவவதைத் தவிர்த்தல்.
3. வேறு திசைகளில் கிடையாக மோதல் பரவலைத் தவிர்த்தல்.

மோதல் முகாமைத்துவத்தினை இரு நிலைகளில் வரையறை செய்யலாம்.

1. குறிப்பிட்ட எல்லைக்குள் மோதல் கட்டுப்படுத்தல். இதனால் அழிவுகளைக் கட்டுப்படுத்த அல்லது தடுக்க முடிகின்றது.
2. மோதல் வளர்ச்சியினைக் குறைத்து அதனைச் சமாளிக்கக் கூடிய நிலையில் வைத்திருக்கின்ற தந்திரோபாயமாகும்.

மோதல் எந்தவொரு சமூகத்திலோ நாட்டிலோ தவிர்க்கமுடியாததாகும். அதனை நீக்கவும் முடியாது. அதனால் மோதலினைக் கட்டுப்படுத்தி, சமாளிக்கக்கூடிய வகையில் சில உபாயங்களைக் கையாள்வதையே மோதல் முகாமை எனலாம்.

மோதல் ஜனநாயக எல்லைக்குள் இருக்கும் வரை மோதல் முகாமைத்துவத்தில் ஆரோக்கியமான விவாதங்கள், பேச்சுவார்த்தைகள் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. வன்முறை, அழிவை ஏற்படுத்துகின்ற ஒன்றாயினும் மோதல் உத்வேகமான சமூக மாற்றம், முன்னேற்றம் என்பவற்றினுடைய ஆரம்பமாகவும் கொள்ளப்படுகின்றது

இலங்கையில் மோதல் முகாமைத்துவம் என்பது நேர்நிலையாக, ஆக்கபூர்வமான வேறுபாடுகளைக் கையாளுகின்ற ஒன்று எனலாம்.

ஹற்மன் என்பவர் மோதல் முகாமை, மோதல் தீர்வு ஆகிய இரண்டு பதங்களையும் உள்நாட்டு ஆயுதப்பிணக்குகளை மையமாக வைத்துப் பின்வருமாறு விளக்குகின்றார். தீர்வு என்பது மோதல்களை ஏற்படுத்தும் காரணிகளை நீக்குதல், அதாவது இணக்கப்பாட்டை ஏற்படுத்தல் முகாமையானது மோதல்களை அல்லது தகராறுகளை ஏற்படுத்தும் காரணிகள் கொடுக்கும் நெருக்கடிகளை நீக்குதல், சமநிலைப்படுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் ஆகும்.

மோதல் முகாமை என்பது இரு தரப்பினரின் மோதலை அளவிடுதல், சமநிலைப்படுத்தல். இரு தரப்பாரையும் சில காலம் தனிமைப்படுத்தல் மோதல் தொடர்பான பதில் மாநாடுகளை நடாத்துதல் எனலாம். மேலும் மோதல்கள் நெருக்கடிகளாக வெடிப்பதைத் தடுக்கின்றது. எனவே மோதல் முகாமைத்துவமானது மோதல் உச்சக் கட்டத்தையடையாது நெருக்கடி நிலமைகளைச் சமாளிப்பதற்கான தந்திரோபாயமாகவே கொள்ளப்படுகின்றது.

## மோதல் நிலைமாற்றம்

சில பகுப்பாய்வாளர்கள் இதனை மோதல் தீர்வுக்கு அப்பால் சென்ற தெளிவான ஒரு படிமுறையாகக் குறிப்பிடுகின்றனர். சிலர் மோதல் தீர்வினது ஒரு விருத்திநிலை என இதனை விவரித்துள்ளனர். மோதல் தீர்விலும் பார்க்க விரிவான கட்டமைப்பு சார்ந்த அம்சங்களின் பால் அதிக கவனம் செலுத்தும் சந்தர்ப்பம் மோதல் நிலைமாற்றம் எனக் கூறுகின்றனர்.

மோதல் தீர்வு மூலம் மோதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கு இடையே காணப்படும் எதிர்ப்புத்தன்மைகளைத் தணித்து சகல தரப்பினரும் திருப்தியடையக் கூடியவாறான ஒரு நிலமையை ஏற்படுத்துவதற்காகச் செயற்படுத்துவதாகும். இதன் மூலம் மோதல் தரப்பினரின் மனப்பாங்குகள், நடத்தைகள் போன்ற அம்சங்கள் மாற்றத்திற்குள்ளாவதில் குறைந்த கவனம் செலுத்தப்படும். மோதல் நிலைமாற்றத்தினூடாக இக்குறைபாட்டுக்குப் பரிகாரம் காணப்படும்.

மோதல் நிலைமாற்றத்தினை மூன்று விதமாக வரைவிலக் கணப்படுத்தலாம்.

1. ஒட்டு மொத்த மோதல்கள் சூழலை மாற்றியமைத்தல்.
2. மோதல் தரப்பினரின் தொடர்புகளை மாற்றியமைத்தல்
3. வலுவூட்டலுக்கூடாக மோதலுடன் தொடர்புடைய ஆட்களின் மட்டங்களை மாற்றியமைத்தல்.

மோதல் நிலை மாற்றத்தின் போது மோதலுடன் தொடர்புடைய சமூக, அரசியல் மூலங்களின் பால் விரிவாகக் கவனஞ் செலுத்தவேண்டியேற்படும். அதன் மூலம் மோதல் தொடர்பான உடன்பாடற்ற வேறுபாடுகள், உடன்பாடான வேறுபாடுகளாக மாற்றியமைக்கப்படும்.

மோதல் நிலைமாற்ற அணுகுமுறை மோதலானது தரப்புக் களையும் அவற்றின் உறவுகளையும் பிரச்சினைகளையும் மாற்றுகிறது என்னும் கருத்து இலக்கினை மாற்றுதல் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பிரச்சினை ஒன்றின் செயன்முறையில் மோதலின் முழு இயங்கியலையும் நிலைமாற்றக் கூடிய அடிப்படை விடயங்கள் அமைந்திருப்பதாக விஞ்ஞானக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. மோதலின் நிலைமாற்றமானது பிரச்சினையின் ஒரு விளைவே ஆகும். அதன் உள்ளடக்கங்கள் தரப்புக்களையும், தர்க்கங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் நிலைமாற்றுகின்றன.

நிலைமாற்றமானது பிரச்சினை, வெற்றி, தோல்வி அல்லது தீர்வு என்பவற்றினை உள்ளடக்கிய மீள் அனுபவங்களின் ஒரு விளைவாக நிகழலாம். நிலைமாற்றமானது வரலாற்று அனுபவங்களிலிருந்து பெறப்படும் ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட கற்றல் கொள்கையாகும். இந்த அணுகுமுறையில்

மோதல் தரப்புக்கள் அவர்களது மோதல் அனுபவங்களால் தாக்கப்படுவதோடு தாமாக மாற்றமும் கொள்கின்றன. மூலப் பிரச்சினையானது புதிய வடிவங்களை எடுக்கின்றது.

வொலன்ரீன் என்பவர் மோதல் நிலைமாற்றத்தின் ஒரு வெற்றிகர விடயமானது தரப்புக்களும், விவகாரங்களும் எதிர்பார்ப்புக்களும் மாற்றப்படுகின்றமை எனக் குறிப்பிட்டுள்ளார்.

வொலன்ஸ்ரீன் என்பவரது கருத்துப்படி வெற்றிகரமான மோதல் நிலைமாற்றச் செயல் என்பது மோதல் தரப்பினருக்கு இடையே மோதலுக்கு ஏதுவாக உள்ள காரணங்கள் மற்றும் மோதலின் குறிக்கோள்களை மாற்றியமைத்தலாகும். அதனூடாக தரப்பினருக்கு இடையே மோதலோ அல்லது யுத்தமோ உருவாகும் என்ற அச்சம் இனியும் ஏற்படமாட்டாது.

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்

அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கம், ஐக்கிய நாடுகள் சபை போன்ற நிறுவனங்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த நிறுவனங்களாக காணப்பட்டாலும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய சிந்தனை மிகவும் பழமையானது.

பல வருடங்களுக்கு முன் வன்முறை, மோதல் என்பன பழங்குடியினர், கிராமிய சமூகத்தவர்கள் அல்லது நகர அரசுகளுக்கு இடையிலும் அவற்றின் சூழலிலுமே காணப்பட்டிருந்தன.

மானிடவியல் வரலாற்று ஆதாரங்களின் படி புராதன அரசியல் முறையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது நடைமுறையில் இருந்திருந்தது. மோதலைத் தீர்ப்பதற்கு மேலதிக அவை ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. புராதன சீனா, இந்தியா, கிரேக்கம் ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள் மூன்றாம் தரப்பினரை அங்கீகரித்தன. திருச்சபைக் காலத்தில் மத்தியஸ்தம் என்பது போப்பாண்டவரினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

17ம் நூற்றாடின் பிற்பகுதியில் இறைமைத் தத்துவத்தின் சட்டபூர்வப் பண்பு ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் பிறிதொரு அரசின் அல்லது உயர் அதிகார சக்தியின் தலையீடு நிராகரிக்கப்பட்டிருந்தது. சர்வதேச சட்டம் இக்காலகட்டத்தில் அரசுகள் தமது மோதல்களைத் தீர்ப்பதற்கான சட்டரீதியான கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. மூன்றாம் தரப்பின் மூலம் யுத்தம் தீர்க்கப்பட முயற்சிக்கப்படும் போது இராஜதந்திர ரீதியாக ஓர் அரசு பிறிதொரு அரசின் மீது தலையீடு செய்வது ஓர் அரசின் இறைமையினை மீறுவதாக அமைகிறது.

19ம் நூற்றாண்டின் பல அரசுகள் உடன்படிக்கைகளைத் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டன. இவை மோதல் தீர்ப்பதற்கான நியாய விதிக்ளாக அழைக்கப்பட்டன. ஏறக்குறைய 300 சர்வதேச தகராறுகள் இவற்றின் மூலம்

தீர்கப்பட்டது. உதாரணம் : 1871ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் அலபாமாவினைச் சுவீகரிக்கும் விடயத்தில் முரண்பட்ட போது நியாய விசாரணை விதிகள் பயன்படுத்தப்பட்டன.

தகராறுகள், மோதல்களைத் தீரப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள் உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. சர்வதேச மாநாடுகள் கூட்டப்பட்டன. 50 நாடுகள் பங்குபற்றின.

20ம் நூற்றாண்டில் சர்வதேச மோதல்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதற்கான நிறுவனமான சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இது சமாதானத்தினை அடைவதற்கான மத்தியஸ்தம், விசாரணை ஆணைக்குழு போன்ற ஒழுங்கு முறைகளை பின்பற்றிது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தானாக முன்வந்து சமாதானத்தினை ஏற்படுத்த முற்படாமல் மோதலுடன் தொடர்புடைய அரசின் விருப்பத்தின் பெயரிலேயே நேரடியாகத் தலையீடு செய்ய முடியும். ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் சாசனத்தின்படி பொதுச்சபை சர்வதேச மோதல்களைத் தீரப்பதில் இரண்டாவது பங்கினை வகிக்கின்றது.

மத்தியஸ்த்திற்கான வழிவகைகள்

1. இரு தரப்பு அல்லது பலதரப்பு பேச்சுவார்த்தை
2. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
3. விசாரணைத் தீர்ப்பு

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்த நுட்பங்கள்

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிப்பவர் மோதலுக்குரிய அம்சங்களுக்கு வெளியேயிருந்து, உணர்ச்சி வசப்படாமலும், மோதலாளர்களுக்கிடையே பழைய நிலையினைக் கொண்டு வரக்கூடிய தொடர்பாடலையும், மோதல் பிரதேசத்தின் சூழலைச் சாந்தமாக வைத்துக் கொள்ளக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மத்தியஸ்தரின் இலக்கு சிக்கலானது. மத்தியஸ்தம் வகிக் ஆரம்பிப்பதும், பேரம் பேசுதலுக்குப் பயன்படுத்தப்படும் தந்திரோபாயங்களும் பிரச்சினையைப் பொறுத்து வேறுபடும்

பேரம் பேசும் செயற்பாடு முறைசார்ந்த செயற்பாடு, முறைசாராச் செயற்பாடு என வகைப்படும்.

மத்தியஸ்தம் பின்வரும் பண்புகளைக் கொண்டது

01. நல்ல அலுவலகம் - இவ் அலுவலகம் இருதரப்பினருக்கும் தகவல்களைப் பரிமாற்றம் செய்யும்

02. தகவல் வளம் - தகவல்கள் உண்மையினைத் திரித்துக் கூறாமல் இருத்தல் வேண்டும்

03. குறுக்கிடல் - இரண்டு மோதலாளர்களின் இராணுவங்களை அகற்றிவிட்டு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் தனது படைகளை அனுப்பி மேற்பார்வை செய்தல். உதாரணம் : 1973 அரபு இஸ்ரேல் யுத்தத்தின் பின் ஐக்கிய நாடுகள் சபை தனது படையினை உடனடியாக அனுப்பியிருந்தது.

04. மேற்பார்வை - யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு வந்ததன் பின்னர் அங்கு மேற்பார்வை செய்வதாகும்.

பேரம்பேசுதல்

மோதலாளர்களுக்கிடையில் மூன்றாம் தரப்பு பேச்சுவார்த்தை நிகழும் போது பேரம் பேசுதல் முக்கியம் பெறுகின்றது. இது பின்வரும் பண்புகளைக் கொண்டது.

01. இணங்குதல் - பேச்சு வார்த்தை நிகழும் போது மோதலாளர்களைப் பேரம் பேசி இணங்க வைக்க எடுக்கும் முயற்சியில் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.

02. விளக்கம் கூறுதல் - மூன்றாம் தர மத்தியஸ்தர் தான் விளங்கிக்கொண்டதைத் தெளிவாகக் கூறி இரு அணிகளும் புரிந்துணர்விற்கு வர உழைத்தல்

03. விபரித்தலும் தொடக்கி வைத்தலும் - மோதல் தீர்க்கும் பிரேரணைகளை ஆரம்பித்து வைத்து மோதலாளர்கள் திருப்தியடையும் வரை பேச்சுவார்த்தையில் ஈடுபடல்

04. பங்கேற்றல் - இவர் தனது பிரேரணையை முன்வைத்து இருதரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலைக்குப் பேச்சுவார்த்தையினை வழிநடத்திச் செல்லல்.

## மோதல் முன் தடுத்தல்

மோதல் ஒன்று உருவாவதற்கு முன் அதற்குரிய நிலைமைகளை இனங்கண்டு முற்கூட்டியே தடுத்தல் "மோதல் முன் தடுத்தல்" என்பதாகும். மோதல் ஒன்று உருவாகலாம் எனத் தென்படுகின்றபோது அதற்குக் காரணங்களாய் இருக்கக்கூடும் என ஊகிக்கின்ற நிலைமைகளை அவதானித்து அதனைச் சீர்செய்தலாகும். அதாவது மோதல் நிலைமை ஒன்றை, மோதலாக உருவாக விடாது முன்கூட்டியே அதற்குரிய பரிகார நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதனைத் தடுப்பது என்பதே "மோதல் முன்தடுத்தல்" என்பதால் பொருள் கொள்ளப்படுகின்றது. மோதல் முன்தடுத்தல் என்பதில் அடங்கியுள்ள சில விடயங்கள் வருமாறு.

✠ பொதுவாக அதிகாரத்துவம் மற்றும் வளங்களுக்கான போட்டி போன்றன மோதலை உண்டுபண்ணுகின்றன. இவற்றை முற்கூட்டியே இனங்கண்டு வளப்பங்கீட்டினைச் சீர்செய்வதன் மூலம் மோதலை உருவாகாது தடுக்கலாம்.

✠ தற்போது காணப்படும் மோதல்களுள் பெரும்பாலானவை இனம், மொழி, வரலாறு, உரிமைகள் போன்ற விடயங்களை முதன்மையாகக் கொண்டு உருவாகின்றன. அவற்றிற்கான காரணிகளை மோதல் ஏற்படுவதற்கு முன்னே சீர்செய்து அதற்குரிய வழிவகைகளை மேற்கொண்டால் மோதலாக உருவாகவிடாது தடுக்கலாம். உதாரணமாக இலங்கையின் இனப்பிரச்சினை தோன்றுவதற்கு முன் 1956ம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் கொண்டுவரப்படும் போது, கொல்வின் R.D Silva அவர்கள் கூறிய கருத்து தீர்க்கதரிசனமானது. அதாவது ஒரு மொழி இருநாடு இரு மொழி - ஒரு நாடு அவர் கூறிய கருத்தை அப்போதே கவனத்தில் எடுத்திருந்தால் இனப்பிரச்சினை இவ்வளவு தூரம் கூர்மையடைந்திருக்கமாட்டாது.

## மோதல் இணக்கப்படுதல்

மோதல் இணக்கப்படுத்தல் என்பதும் மோதல் தீர்வின் ஒரு படிமுறையாகும். இணக்கப்படுத்தலின் போது நிகழுவது, வன்முறை மோதலின் வன்முறைத் தன்மையை தணித்தலாகும். மோதல் தணித்தலின் போது மோதலுக்கு ஏதுவாகவுள்ள விசேடமான மற்றும் ஒட்டு மொத்த காரணங்களின் பால் கணிசமான கவனஞ் செலுத்தப்படுவதில்லை. வன்முறை மோதுகையின் உக்கிரத்தன்மையை இழிவாக்குவதே அதன் நோக்கம்

மியால் உட்பட்ட குழுவினர் இதனை ஓர் ஒப்பந்தம் மூலம் செய்யலாம் என எடுத்துக்காட்டுகின்றனர்.

உதாரணம் : 1998ல் வட அயர்லாந்தில் ஏப்ரல் 10ம் திகதி கைச்சாத்திடப்பட்ட பெரிய வெள்ளி ஒப்பந்தமும், 2002 பெப்ரவரி 22ம் திகதி

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையும் இதற்கான சிறந்த உதாரணங்களாகும்.

மோதல் இணக்கப்படுத்தல் செயன்முறையின் மூலம் மோதலின் வன்முறைத் தன்மையைத் தணிப்பதே இறுதி நோக்கமாக இருந்தபோதிலும் அதனை மோதலின் முடிவாகக் கருதுவது இயலாததாகும். எவ்வாறாயினும் மோதல் இணக்கப்பாடு தொடர்பான செயன்முறையை நீண்டகால மோதல் தீர்வின் ஆரம்பகட்டமாகக் கருதலாம்.

## சமாதானக்கல்வி

மோதல் என்ற எண்ணக்கரு சமாதானம் பற்றிய ஆய்வாளர்கள், சமூகவிஞ்ஞானிகள் ஆகியோர்களது தொடர்தேச்சியான ஆய்வுகளுக்கு மத்தியிலும் விளக்கமுடியாத எண்ணக்கருவாகவே வளர்ந்து வந்துள்ளது. 1950களிலும் 1960களிலும் சமாதானம் பற்றிய ஆய்வுகளுக்கு மோதல் கோட்பாடே மையமாக இருந்தது. 1980களின் தசாப்தத்தில் மோதல் கோட்பாட்டினைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் மோதல், சமாதானம் பற்றி ஆய்வுகள் மாக்கியவ்லியின் சித்தாந்தத்துடன் ஆரம்பமாகியதுடன் 1ம்,2ம் உலக மகாயுத்தங்களும், அதன் பின்னரான வியட்நாம் யுத்தமும் மோதல், சமாதானம் பற்றிய ஆய்வுகளுக்குப் பெரும் பங்காற்றியிருந்தன எனலாம்.

சமாதானம் என்பது நல்லிணக்கத்தின் ஒரு நிலையாகும். அதாவது பகைமை அற்ற நிலையாகும். சர்வதேச தளத்தில் சமாதானம் என்பது யுத்தத்திற்கு எதிரானதாகும். இன்னொரு விதத்தில் கூறுவதாயின் சமாதானமானது மரியாதை, நீதி, நல்லெண்ணம் ஆகியவற்றினால் அம்சப்படுத்தப்பட்ட எந்தத் தரப்புகளுக்கும் இடையிலான ஓர் உறவு என விவரிக்கப்படலாம். சமாதான ஆய்வாளரான பேராசியரியர் ஜோன் கல்துங் (John Galtung) என்பவர் இத்தகைய சமாதானம் குறித்த எண்ணக்கருவை "எதிர் நிலையான சமாதானம்" (Negative peace) என்றார். இவர் முரண்பாட்டின் உட்கிடக்யைான அம்சங்கள் உண்மையான சமாதானத்தினை அடைவதற்காக நிருபிக்கப்பட வேண்டும்" என்கின்றார்.

ஜோன் கென்னடி "சமாதானம் என்பது ஒரு செயல்முறை ஆகும் அது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறையாகும்" என்கிறார்.

மகாத்மாகாந்தி அடக்கப்படுகின்ற சமூகமானது வன்முறையில் நம்பிக்கை உடையதாக இருக்குமாயின் அச்சமுதாயமானது சமாதானமாக இருக்காது. ஏனெனில் அங்கு அடக்குமுறையும் அநீதி நிலைத்து நிற்கும். காந்தி உருவாக்கிய சமாதானம் பற்றிய பார்வையில் நீதியானது இயற்கையான அவசியமான அம்சமாகக் காணப்படுகின்றது.

பார்டொலஸ் (Bartolus) என்பவர் "ஏற்கனவே ஆரம்பித்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த ஒரு உடன்படிக்கையே சமாதானம்" என்கின்றார்.

விக்டர் டுராஸ் என்னும் அறிஞர் "மக்கள் குழுக்கள் மற்றும் தேசங்களுக்கிடையில் யுத்தம் இல்லாத நிலையே சமாதானம்" என்கிறார்.

1ம் உலகப்போர் உலகநாடுகள் மீது ஏற்படுத்திய தாக்கம் பல சமாதான முயற்சிகளை உலகம் சந்திக்கக் காரணமாகியது. சர்வதேச சங்கம், சர்வதேச சட்டம் என்பன சமாதானத்திற்கான பாதைகளாகக் கருதப்பட்டன. 1ம் உலகப் போரின் பின்னர் யுத்தம், சமாதானம் பற்றிய ஆய்வுகளைப் பலர் மேற்கொண்டிருந்தனர். அவர்களில் சொரக்கின், குயின்சிரைட் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

தொடர்ந்து 2ம் உலக மகாயுத்தம் சமாதானத்திற்கான தேவையினை மேலும் அவசியமாக்கியது. 2ம் உலக யுத்த முடிவில், உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஐக்கியநாடுகள் சபை 1945ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு நாடுகளிடையே ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது என்றே கூறலாம்.

சமாதானத்திற்கான ஆராய்ச்சி மரபு 1966ம் ஆண்டு ஸ்தாபனமயமாக்கப்பட்டது. இதனால் தனியான ஆய்வு நிலையங்கள், சஞ்சிகைகள், கோட்பாடுகள் எனப் பல தோற்றம் பெற்றன.

## உசாத்துணைநூல்கள்

01. பொது ஆட்சியியல் - ச.கா.ச. நாதன்
(கே.ரீ. கணேசலிங்கம்) - 2003

02. பொதுத்துறை நிர்வாகம் ஓர் அறிமுகம்
வீ.அமீர்தீன் - 2001

03. இலங்கையின் அரசியல் யாப்புக்கள்
சி.அ யோதிலிங்கம் - 2004

04. அரசறிவியலாளன் - இதழ் 02 - 2007
அரசறிவியல் ஒன்றியம் யாழ்பல்கலைக்கழகம்

05. நோத் முதல் கோபல்லாவரை - 2008
கா.சி.குலரத்தினம்

06. பொது ஆட்சியியல் - 1962
ஹன்டி பேரின்பநாயகம்

07. இலங்கை அரசியல் திட்ட வளரச்சி - 2008
வே.குணரத்தினம்

08. இலங்கை அரசியல் - 2006
அம்பலவாணர் சிவராஜா

09. இலங்கையின் சட்டமன்றங்கள்
1975 - S.நமசிவாயம்

10. முரண்பாடும் சமாதானமும் ஓர் அறிமுகம்
வே.குணரத்தினம் - 2007

11. பொருளாதார அபிவிருத்திச் செல்வழி - 2008
பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

12. Ceylon Under the British
G.C Mendis - 1944, 1946

13. அரசியல் விஞ்ஞானம்
ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி
2010 முதல் 13ம் தரத்துக்கானது
2009 முதல் 12ம் தரத்துக்கானது

14. கல்விப் பொதுத்தராதரம் - 2010.11.10,11
தேசிய கல்வி நிறுவகம் - அரசியல் விஞ்ஞானத்துறை பேராதனை பல்கலைக்கழம்
திரு.M.P.M சைடிதீன் - பயிற்சிப் பட்டறை

15. முரண்பாடும் சமாதானமும் ஓர் அறிமுகம் - வே.குணரத்தினம்
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
குடியுரிமைக் கல்வியும் மக்களாட்சியும் - தரம் 10
அரசியல் விஞ்ஞானம் - அரசியல் செயற்பாடும், அரசியல் செய்முறையும்.
- த.கிருஸ்ணமோகன்

Virus Graphics, Inuvil